# සැම සුරැකි සාමකාමී දේශයක්
# பாதுகாப்பானதும், அமைதியானதுமான நாடொன்றுக்காக
# For a Secured & Peaceful Country

# 2016

## කාර්යසාධන වාර්තාව
## செயல்திறன் அறிக்கை
## Performance Report



ආරක්ෂක අමාත්‍යාංශය
பாதுகாப்பு அமைச்சு
MINISTRY OF DEFENCE

# பொழிப்பு


| | இலக்கம் |
|---|---|
| கௌரவ பாதுகாப்பு அமைச்சரின் செய்தி | |
| கௌரவ இராஜாங்க அமைச்சரின் செய்தி | |
| பாதுகாப்பு செயலாளரின் செய்தி | |
| இராஜாங்க பாதுகாப்பு செயலாளரின் செய்தி | |
| அமைச்சின் நோக்கு மற்றும் பணி கூற்று | i |
| அமைச்சின் கடமைகளும் செயற்பாடுகளும் | ii |
| அமைச்சின் நிறுவன கட்டமைப்பு | iii |
| **அமைச்சின் பிரிவுகளின் செயலாற்றுகை** | |
| 1. கொள்கை மற்றும் திட்டமிடல் பிரிவு | 1-2 |
| 2. பாதுகாப்பு பிரிவு | 3-6 |
| 3. தொழிநுட்ப பிரிவு | 7-13 |
| 4. பாராளுமன்ற மற்றும் சிவில் அலுவல்கள் பிரிவு | 14-15 |
| 5. நிர்வாக பிரிவு | 16-22 |
| 6. சிவில் பாதுகாப்பு பிரிவு | 23-26 |
| 7. நிதிப் பிரிவு | 27-32 |
| 8. உள்ளக கணக்காய்வு பிரிவு | 33 |
| 9. சர்வதேச தொடர்பு பிரிவு | 34-41 |
| 10. பாதுகாப்பு ஊடக மையம | 42-45 |
| 11. இராணுவ தொடர்பு அலுவலகம | 46-48 |
| 12. பாதுகாப்பு பிரதானி தலைமை காரியாலயம் | 49-60 |
| **அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களின் செயலாற்றுகை** | |
| 13. பாதுகாப்பு கரையோர திணைக்களம் | 61-77 |
| 14. ஜெனரல் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரி | 78-83 |
| 15. அரச வேவு சேவை | 84-86 |
| 16. ஆய்வு மற்றும் மேம்பாட்டு நிலையம் | 87-94 |
| 17. ஓன்றினைந்த மொழிப்பயிற்சி சேவை நிலையம் | 95-96 |
| 18. வரையறுக்கப்பட்ட லங்கா லொஜிஸ்டிக் நிறுவனம் | 97-105 |
| 19. தேசிய மாணவருக்கான படையணி | 106-109 |
| 20. ரணவிரு சேவை அதிகார சபை | 110-113 |
| 21. பாதுகாப்பு சேவை மற்றும் பணியாட்கள் கல்லூரி | 114-120 |
| 22. பாதுகாப்பு சேவை கல்லூரி | 121-123 |
| 23. தேசிய பாதுகாப்பு ஆய்வு நிறுவனம் | 124-128 |

# கௌரவ பாதுகாப்பு அமைச்சரின் வாழ்த்து செய்தி



நாட்டின் பாதுகாப்பு, இறைமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றை பாதுகாக்கும் பெரும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப் பணியை நிறைவேற்றுவதற்கு அமைச்சின் அனைத்து படைப்பிரிவுகளும் உயர் நியமங்கள், துணிவு, அர்ப்பணம் மற்றும் முன்மாதிரித் திறன்களை உச்சளவில் பேண வேண்டும். இந்த வருடாந்த செயலாற்றுகை அறிக்கை அமைச்சின் அனைத்து பிரிவுகளினதும் மொத்தமான செயற்பாட்டைப் பிரதிபலிக்கிறது. எனவே பாதுகாப்பு அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பு தேசத்தைப் பாதுகாப்பதுடன் மட்டும் வரையறுக்கப்பட்டதல்ல. அது இலங்கையின் நல்லிணக்கம், நிலையான சமாதானம், சமூக பொருளாதார அபிவிருத்தி, அனர்த்த நிவாரணம், மீட்பு மற்றும் சர்வதேச அமைதிகாக்கும் நடவடிக்கைகள் வரை பரந்ததாகும்.

பாதுகாப்பு அமைச்சு சிறந்த கட்டுப்பாடு, அனுபவம், முதிர்ச்சி, மற்றும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவன கட்டமைப்பைக் கொண்ட ஒரு நிறுவனம் என்ற நன்மதிப்பைப் பெற்றுள்ளது எனக் குறிப்பிடுவதில் பாதுகாப்பு அமைச்சர் என்றவகையில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அரசாங்கத்தின் கொள்கைக்கேற்ப எந்தவொரு ஊழல், மோசடி முயற்சிகளுக்கும் எதிராக பாதுகாப்பு அமைச்சு தொடர்ச்சியான விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இந்த முயற்சியைத் தொடர்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் உறுப்பினர்கள் மேற்கொண்டுவரும் அர்ப்பணிப்பும் பங்களிப்பும் பாராட்டத்தக்கதாகும்.

எமது தாய் நாட்டின் இறைமையை பாதுகாப்பதற்கு தமது உயிர்களையும் அவயவங்களையும் தியாகம் செய்த படைவீரர்களை நான் இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூருகின்றேன். வலுவிழந்த படைவீரர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் நலன்பேணலைத் தொடர்ந்து கவனித்துவரும் அமைச்சுக்கு நான் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்பும் வினைத்திறனுமிக்க அதிகாரிகள் தேவைப்படுகின்றனர். அந்தவகையில் பாதுகாப்பு செயலாளர் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் வழங்கிவரும் சேவையை அனைவரும் பாராட்ட வேண்டும்.

மைத்ரிபால சிறிசேன
பாதுகாப்பு அமைச்சர்

# பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் நல்வாழ்த்துக்கள்



நாட்டினுள் நல்லினக்கம், அபிவிருத்தி என்பன நீண்ட கால இலக்கைக் கொண்ட பாதையாகிறது. எமது அரசு புதிய பொருளாதார வழிமுறைகளை உரிய முறையிலும் திட்டங்களை தீட்டியும் கையாள வேண்டும். பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கும் போது அதற்கேற்ற பின்னனி காணப்படும், எனவே தரவுகள் மற்றும் பெறுமதியினை கருத்திற்கொண்டு சேவையாற்றும் பாதுகாப்பு அமைச்சிற்கு தொடராக நிதர்சனமான வழிகாட்டலை வழங்கும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் அவர்களது வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கூடாக கடந்து சென்ற இரு வருட காலத்தில் பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு எனவும், உயிரை இரண்டாவதாக கருதி செயற்பட்ட படையினர்களுக்கு, யுத்த கலத்தினில் அங்கவீனமுற்ற, உயிர் நீத்தவர்களின் குடும்பத்தினருக்கு செங்சோற்றுக்கடன் செலுத்தியும், மேலும் முன்வரும் வருடங்களிலும் இச்சேவைகளை வழுவுடன் மேற்கொள்ள நாமெல்லோரும் அர்ப்பணிப்புடனான பாக்கியமாகவும் கருதி செயற்படவேண்டும்.

ஒன்றுபட்டு வாழலுடனான அபிவிருத்தியையும், நாட்டினை கட்டியெலுப்பவும், அவ்விலக்கினை நிறைவுசெய்து கொள்வதற்கும், பாதுகாப்பு அமைச்சு மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு ஆகிய எம் எல்லோரது பங்களிப்பும் கிடைக்கப் பெறும். தேசிய பாதுகாப்பினை வழுப்பெறச் செய்யலும், அழகிய நாட்டினை கட்டியெழுப்பவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற எல்லோருக்கும் எனது விஷேட நன்றிகளை தெறிவிக்கின்றேன்.

ருவன் விஜேவர்தன
பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

# பாதுகாப்புச் செயலாளரின் செய்தி



அனைத்து மக்களுக்கிடையில் நட்புறவினை வளர்த்துக்கொள்வதற்காக ஒற்றுமையுடன் செயற்படுவதனால் நிலையானதும் நிகழ்கால தேவைகளுக்கு ஏற்ற வகையில் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தேசிய பாதுகாப்பு மற்றும் ஒரே நாட்டிற்குள் இறைமையை உறுதிப்படுத்துவது மிகவும் இன்றியமையாததொன்றாகும். இந்நிலைமைகளின் போது எந்தவொரு சவாலுக்கும் முகம் கொடுப்பதற்காக பாதுகாப்பு அமைச்சு மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதன் மூலம் எதிர்பார்ப்பினை அடைந்துக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

போர் வெற்றியினைப் பெற்றுக் கொடுத்த முப்படையினரின் கௌரவத்தினை பாதுகாத்து அவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் நலமேம்பாட்டு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு சேவைகள் புரிவதன் மூலம் அவர்களுக்கு நன்றி செலுத்துவதினை பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். மற்றும் அவர்களின் அபிவிருத்தி செயற்பாடுகளை முறையாக கொண்டு நடாத்துவதற்கும் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியமர்த்தும் நடவடிக்கைகளை நிறைவு செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசு எப்போதும் முன்னின்று செயற்படுகின்றது.

2016 ஆம் ஆண்டிற்குள் பாதுகாப்பு அமைச்சு, முப்படை மற்றும் அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற ஏனைய நிறுவனங்களினால் தாய்நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொண்ட கடமைப் பொறுப்புக்கள் மூலம் அமைச்சின் இலக்கினை யதார்த்தமாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாட்டிற்கே உரித்தான தேசியத்துவத்திற்கு முன்னுரிமை வழங்கி உருவாக்கப்பட்ட சிந்தனை மற்றும் இலக்கில் மிகச் சாதகமான சர்வதேச உறவுகளை மேம்படுத்தி அனைத்து மக்களினதும் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்காக மிகவும் அக்கரையுடன் செயற்படுவதற்கு வருகின்ற ஆண்டு உறுதிமிக்கதாகவும் வழங்கப்படுகின்ற அனைத்து காரியங்களும் சிறப்பானதாகவும் செயற்திறன் மிக்கதாகவும் நிறைவேற்றிக்கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த அனைத்த நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் தைரியம், சக்தி மற்றும் அதிஷ்டம் கிட்டவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

பொறியியலாளர். கருணாசேன ஹெட்டியாராச்சி
பாதுகாப்புச் செயலாளர்

# பாதுகாப்பு இராஜரங்க அமைச்சு செயலாளரின் செய்தி



அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களது ஆசீர்வாதத்துடன் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ ருவன் விஜயவர்தன அர்களது வழிகாட்டலின் கீழ் கடந்து சென்ற 2016 ஓர் வருடகாலத்திற்குள் படையினருக்கான நலன்புரி செயற்பாடுகளை முதன்மைப்படுத்தி பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து பாதுகபப்பு இராஜாங்க அமைச்சு மற்றும் அதன் கீழ்வரும் நிறுவனங்களான பாதுகாப்புச் சேவைகள் பதவி நிலைக் கல்லூரி, ரணவிரு சேவா அதிகார சபை, தேசிய மாணவச் சிப்பாய்கள் படையணி, பாதுகாப்புச் சேவைகள் கல்லூரி என்பவற்றில் விஷேட செயற்பாடுகள் நிவேற்றப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரித்துக்கொள்கின்றேன்.

சென்ற வருடத்தினை திரும்பி பார்க்கும் போது இவ்வமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுக்கு வரவு செலவுதிட்டத்தின் மூலம் ஓதுக்கப்பட்ட நிதியிலிருந்து 80% க்கு மேலதிக அடைவினை எட்டியமை, விருசர வரப்பிரசாத வேலைத்திட்டத்தில் மேலும் ஒரு படிமுறை முன்னேறி 1983 - 2009 வரையில் இருபத்தி இரண்டு வருடங்கள் யுத்த கலத்தில் இருந்த படையினருக்கும் அவர்களுக்கு பின்வரிசையினராக இருந்த முப்படை, பொலிஸ், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் சிவில் சேவையினர்களுக்காக விருசர வரப்பிரசாத உரித்துடைமையாக்கல், ஓய்வு பெற்ற படையினரின் வருமானத்தினை உயர்த்தும் முகமாக அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்தல், ஒழுக்கமுடைய மற்றும் உச்ச சேவையை வழங்கக்கூடிய குடிமக்களை நாட்டுக்கு உருவாக்களை நோக்காக கொண்டு கனிஷ்ட மாணவச்சிப்பாய்ப் படை வேலைத் திட்டத்தினை நாடு பூராக உருவாக்கல் விஷேடமாக குறிப்படப்பட வேண்டும்.

படைவீரரும், படையிரனர் குடும்பத்தினரும் பாதுகாப்கப்பட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு முதலாக இவ்வமைச்சின் சென்ற வருடத்தில் பெறப்பட்ட வெற்றியானது வீஷேடமானது. விரிவான சேவையை பாதுகாப்பு படைவீரர்களுக்கு பெற்றுக்கொடுப்பதுடன் மேலும் இறந்து போன, அங்கவீனமுற்ற மற்றும் அவர்களில் தங்கி வாழ்பவர்களது நாளைய நாள் சிறப்புர அமைய பிராத்திக்கின்றேன்

ஏபீஜீ கித்சிரி
செயலாளர்
பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு

# அமைச்சின் தொலைநோக்கும் பணியும

## தொலைநோக்கு

பாதுகாப்பனதும் அமைதியானதுமான
நாடொன்றுக்காக

## பணிக்கூற்று

இறைமையுடைய பாதுகாப்பான
சுதந்திர நாடொன்றை
உறுதிப்படுத்துவதற்காக
தந்திரோபாய திட்டங்களையும்
கொள்கைகளையும் அமைத்தல்
மற்றும் செயற்படுத்தல்

## அமைச்சின் கடமைகளும் தொழிற்பாடுகளும்

2015 ஜனவரி மாதம் 18 ம் திகதிய 1897/15 ஆம் இலக்க வர்த்தமாணி அறிக்கையில் வெளியிடப்பட்டது போல பாதுகாப்பு அமைச்சின் கடமைகளும், தொழிற்பாடுகளும் பின்வருமாறு:

| ***கடமைகளும், தொழிற்பாடுகளும்*** |
|---|
| • *நிரல் 11 இல் பட்டியலிடப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச் சபைகள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ஆகியனவற்றின் மேற்பார்வையின் கீழ் வரும் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும், கருத்திட்டங்களைத் தயாரித்தல்,*<br>• *பாதுகாப்புச் சேவைகளின் தொழிற்பாட்டுக்கு வசதியளிப்பதன் ஊடாக நாட்டிற்குப் பாதுகாப்பினை அளித்தல்.*<br>• *உள்நாட்டுப் பாதுகாப்பினைப் பேணுதல்*<br>• *அரச மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு ஆகியனவற்றுடன் தொடர்புடைய புலனாய்வுச் சேவைகள்*<br>• *வருகை தரும் புதிய படை வீரர்களுடனான உறவுகள்*<br>• *வெடி பொருட்கள் மற்றும் துப்பாக்கிகள்*<br>• *வெளிச்ச வீடுகளின் பராமரிப்பு (துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான ஏனையவைகள்)*<br>• *பாதுகாப்புச் சேவை ஆளணிக்கான உயர் கல்வி*<br>• *தனியார் பாதுகாப்புச் சேவைகளுடன் தொடர்புடைய விடயங்கள்*<br>• *கடலோரப் பாதுகாப்பு சேவை மீட்புச் செயற்பாடுகள் மற்றும் நிர்வாகம்*<br>• *நிரல் 11 இல் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வையின் கீழ் வரும் ஏனைய சகல விடயங்களும்*<br>*நிரல் 11 இல் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை* |
| *நிரல் 11- அமைச்சின் கீழ் வரும் திணைக்களங்களும், நியச் சபைகளும், அரச கூட்டுத்தாபனங்களும்*<br><br>*1. இலங்கைத் தரைப் படை*<br>*2. இலங்கைக் கடற்படை*<br>*3. இலங்கை விமானப்படை*<br>*4. சிவில் பாதுகாப்புத் திணைக்களம்*<br>*5. சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்*<br>*6. பாதுகாப்புச் சேவைகள் கட்டளை, பதவிநிலைக் கல்லூரி*<br>*7. ரணவிருசேவை அதிகார சபை*<br>*8. பாதுகாப்பு சேவைகள் பாடசாலை*<br>*9. தேசிய பயிலிளவல் சிறப்பணி*<br>*10. தேசிய பாதுகாப்பு நிதியம்*<br>*11. அரச புலனாய்வுச் சேவை*<br>*12. கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்*<br>*13. லங்கா லொஜிஸ்டிக்ஸ் லிமிட்டட்*<br>*14. ரக்ண ஆரகஷக லங்கா லிமிட்டட்* |

# நிறுவன கட்டமைப்பு



பாதுகாப்பு அமைச்சர்
ஒருங்கிணைப்புச் செயலாளர்இ சுழு மற்றும் பணியாட்தொகுதி
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
ஒருங்கிணைப்புச் செயலாளர் மற்றும் பணியாட்தொகுதியினர்
மேலதிக nrayhsh;
மேலதிக செயலாளர்
மேலதிக செயலாளர்
மேலதிக செயலாளர் (சிவில்)
மேலதிக செயலாளர்
பிரதம நிதி அதிகாரி
இராணுவ ஒத்துழைப்
தேசிய உளவுத்து
பணிப்பாளர் (யுறு)
சி.உ.செ. - நிர்வாகம்
சட்ட அலுவ
சி.உ.செ
சி.உ.செ
சி.உ.செ (ரூஊய)
சி.உ.செ
பிரதி
மே.பி.நிர.கட்டுப்ப
பணிப்பாளர்
பிரதம கணக்காள
பிரதம உள்ளக
ஊடகப் பணிப்பா
ஸ்ரீ
முஊனு
உதவி
உதவிச் செயலா
உதவிச்
உதவிச்
உதவிச்
ஊதவி
ஊதவி
ஊதவி
மே.பி.நிர
உ.செ
உதவிச் செயலா
கண க்கா ளர்
கண
கண
கண க்கா ளர்
கண
கண
நி.உ. நிர்வாகம்
நி.உ. இடமாற்றம்
மொழி பெயர்ப்
நூலகர்
த.தொ. அதிகா
இணையப் பிரிவ
பயிற்சி முகாமையாளர் (1)
அபிவிருத்தி உத்தியோகத்தர் (21)
நிர்வாக உதவியாளர் (சட்டம்) (1)
மனித வள உதவியாளர்(8)
ஆராய்ச்சி உதவியாளர் (2)
அமுலாக்க உத்தியோகத்தர் (36)
நிதி உதவியாளர் (8)
திட்டமிடல் உதவியாளர் (1)
அபிவிருத்தி உதவியாளர் (3)
சட்ட உதவியாளர் (1)
சாரதி (59)
முமுஎ (71)
பாதுகாப்பு முறை போதனாசிரியர் (6)

# பிரிவுகளின் செயலாற்றுகை

# 1. கொள்கைகள் மற்றும் திட்டமிடல பிரிவு

## 1.1 மேலோட்டமான பார்வை

கொள்கைகள் மற்றும் திட்டமிடல் பிரிவின் தறபோதைய மற்றும் வருகின்ற ஆண்டிற்கான உத்தேசித்த பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக தேசிய பாதுகாப்பு கொள்கைகளை உருவாக்கும் பணிகளில் ா.டுப்படுகின்றதோடு அமைச்சிக்கு வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற நிதி பயன்பாட்டின் முன்னேற்றத்தினை மேற்பார்வை செய்கின்ற பிரிவாக செயற்படுகின்றது. அதற்கமைய அமைச்சி மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள் மட்டுமல்லாது பாதுகாப்பு இரஜாங்க அமைச்சின் ஊடாக செயற்படுத்துகின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தினை அறிக்கையிடுதல் அதற்குறிய வருடாந்த முன்னேற்ற அறிக்கை, செயலாற்றுகை அறிக்கை போன்றவற்றினை தயாரித்தல் இப்பிரிவின் மூலமே நிறைவேற்றப்படுகின்றன.

### 1.1.1 கடமைகள்

- தேசிய பாதுகாப்பு கொள்கைகளை உருவாக்கும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
- செயலாற்றுகை அறிக்கை, முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் மற்றும் பாராளுமன்றத்திற்கு அனுப்புதல்
- வருடாந்த செயற்பாட்டுத்திட்டத்தினை தயாரித்தல்.
- பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்களை மேற்பார்வைச் செய்தல் மற்றும் அக்கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினை சாராம்சப்படுத்தல்.
- கருத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் தகவல்கள் மற்றும் ஆலோசனைகள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கல்.
- அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் ஊடாக முன்வைக்கப்படுகின்ற கருத்திட்ட முன்மொழிவுகளுக்கான பரிந்துரைகள் மற்றும் அனுமதியினை தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளல் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்தல்.
- 20 மில்லியனுக்கு மேற்பட்ட கருத்திட்டங்களுக்காக அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்.
- ஏனைய அமைச்சிக்குறிய அரசின் விசேட நிகழ்ச்சிகளுக்கு உரிய ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல். உதாரணம் :- அனர்த்த முகாமைத்துவம்
- அமைச்சிக்குறிய நிறுவனங்களின் செயலாற்றுகை அறிக்கை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக மக்களுக்கு தெளிவுப்படுத்துவதற்கு தேவையான தகவல்களை வழங்குதல்.
- சனாதிபதி காரியாலயம் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற விசேட கருத்திட்டங்களை மேற்பார்வை செய்தல்.
- கள அவதானிப்பு மற்றும் கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றத்தினை மேற்பார்வை செய்தல்.

## 1.2 பணிகளின் முன்னேற்றம்-2016

- தேசிய பாதுகாப்பு கல்வி நிறுவன(Institute of SecurityStudies Srilanka /INSSL) தினம் உறுவாக்கப்பட்டதோடு அமைச்சு மற்றும் INSSL இடையில் தேவையான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- 2016 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய நிதி ஒதுக்கீடு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்யப்படடது.
- 2015 ஆம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கை தயாரித்து பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.
- முப்படையினருக்கான செயலாற்றுகை அறிக்கை தயாரித்து பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.
- 20 மில்லியன் ரூபாவிற்கு மிகையான கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக அமைச்சரவை அனுமதி பெறப்படடது.
- பருவ அடிப்படையில் முன்னேற்றத்தினை மேற்பார்வை செய்வதற்காக அமைச்சுடன் இணைந்து அனைத்து நிறுவனங்களின் பங்குபற்றலுடன் முன்னேற்ற சாராம்சக்கூட்டம் நடாத்தப்பட்டது.
- அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் ஊடாக செயற்பத்தப்பட்ட கருத்திட்டங்களின் மாதாந்த மற்றும் பருவ முன்னேற்றம் தொடர்பான அறிக்கையினை சனாதிபதி செயலாளர் காரியாலயம், தேசிய வரவு செலவு திணைக்களம் மற்றும் கருத்திட்ட மேற்பார்வை மற்றும் முகாமைத்துவ திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் ஊடாக செயற்பத்தப்படுகின்ற கருத்திட்ட நிகழ்ச்சி திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் நிறுவனங்களின் பணிகள் தொடர்பாக சட்ட அமைப்பு தொடர்பாக அறிக்கை மற்றும் அமைச்சின் கருத்திட்டம் மற்றும் நிகழ்ச்சி திட்டம் தேசிய பாதுகாப்பு தொடர்பில் பிரிவு

மேற்பார்வை செயற்குழுவிற்கு (Sectoral Oversight Committee on National Security) உரிய முறையில் உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

- அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் 2016 ஆம் ஆண்டின் நிதியினைப் பயன்படுத்தல் தொடர்பாக நிதி மற்றும் பௌதீக முன்னேற்றத்தினை இரு வாரங்களுக்கு ஒரு முறை தேசிய வரவு செலவு திணைக்களத்திற்கு வழங்கி அமைச்சினுடைய நிதியினை உரிய முறையில் பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக முப்படையினைப் பரீட்சித்தல் மற்றும் மீட்பு குழுவினரின் திறன்களை விருத்தி செய்வதற்காக தேவையான உபகரணங்களை விலைக்கு வாங்குதல் மற்றும் பயிற்சிகளை வழங்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- பொருளாதார முகாமைத்துவம் தொடர்பாக அமைச்சரவை செயற்குழுவின் (Cabinet Committee on Economic Management/CCEM) தீர்மானத்தை செயற்படுத்தலின் முன்னேற்றம் கருத்திட்ட மேற்பார்வை மற்றும் முகாமைத்துவ திணைக்களத்திற்கு (DPM) உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

## 1.3 எதிர்பார்க்கப்படும் முன்மொழிவுகள்

- பாதுகாபர்பு அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் ஊடாக செயற்பத்தப்படுகின்ற கருத்திட்ட தகவல்கள் அடங்கிய தரவுத் தொகுதியொன்றினை உருவாக்குதல் மற்றும் அதனை இற்றைப்படுத்திக்கொள்ளல்.
- 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல் மற்றும் செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைய ஏதிர்வரும் திட்டங்களை செயற்படுத்தல் மற்றும் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியினை வினைத்திறன் மிக்கதாக பயன்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- 2017 ஆம் ஆண்டிற்கான செயலற்றுகை அறிக்கை தயாரித்தல் மற்றும் அதனை உரிய தினத்திற்கு முன்பு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.
- அமைச்சின் ஊடாக செயற்பத்தப்படுகின்ற கருத்திட்டங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் உரிய காலத்திற்குள் நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

# 2. பாதுகாப்புப் பிரிவு

## 2.1 மேலோட்டமான பார்வை

இவ்வமைச்சின் பாதுகாப்புப்பிரிவானது முப்படையினர் தொடர்பிலான கடமைகளை பிரதானமாக ஆற்றுகின்றது. இக்கடமைகளிற்கு மேலதிகமாக ஐக்கிய நாடுகள் சபையின் சமாதான கடமைகளில் ஈடுபடும் படையணிகள் தொடர்பிலும், இலங்கை கடலோர காவற்படை திணைக்கள நிறுவனத்தினதும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.

## 2.2 2016 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதி வரை

### 2.2.1 பதவியுயர்த்தல், இளைப்பாறுதல், அதிகாரவாணைக்கு உட்படுத்தல்

பாதுகாப்பு பிரிவின் மூலம் 2016.01.01 தொடக்கம் 2016.08.31 வரையான காலப்பகுதி வரை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு முப்படையினர் தொடர்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | பதவியுயர்வு | இளைப்பாறுதல் | அதிகாரவாரவாணைக்கு உட்படுத்தல் |
|---|---|---|---|
| தரைப்படை | 222 | 206 | 52 |
| கடற்படை | 333 | 35 | 187 |
| விமானப்படை | 77 | 16 | 90 |
| மொத்தம் | 632 | 257 | 329 |

2.1 அட்டவணை : பதவியுயர்த்தல், இளைப்பாறுதல், அதிகாரவாணைக்கு உட்படுத்தல

### 2.2.2 தனிப்பட்ட/விளையாட்டு (வெளிநாட்டு) விடுமுறை

முப்படை வீரர்களிற்கு கீழ்க்கண்டவாறு தனிப்பட்ட லீவு ∴விளையாட்டு (வெளிநாடு) விடுகைக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| | தனிப்பட்ட லீவு | விளையாட்டிற்கான விடுகை |
|---|---|---|
| கடற்படை | 347 | 408 |
| தரைப்படை | 140 | 120 |
| விமானப்படை | 95 | 60 |
| மொத்தம் | 582 | 588 |

2.2.அட்டவணை : தனிப்பட்ட/விளையாட்டு (வெளிநாட்டு) லீவு

### 2.2.3 இழப்பீடு

மரணித்த,அங்கவீனமுற்ற முப்படையினர் மற்றும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களிற்கு இழப்பீட்டுத்தொகை பெற்றுக் கொடுத்தல்

| | தரைப்படை | கடற்படை | விமானப் படை |
|---|---|---|---|
| (1.) மரணித்தவர்களல் தங்கி வாழ்வோரிற்கான இழப்பீட்டுத் தொகையை வழங்கல் | 63 | 3 | 3 |
| (2) பயங்கரவாத செயற்பாட்டினால் அங்கவீனமுற்றவர்களிற்கு 55 வயதாகும் வரை சம்பளம் மற்றும் கொடுப்பனவை செலுத்துதல் | 2509 | 12 | 3 |
| (3)கடமையிலீடுபட்டுக் கொண்டிருக்கும் திடீர் சந்தர்ப்பங்களில் விபத்திற்குள்ளானவர்களிற்கு இழப்பீட்டுத் தொகையை வழங்கல் | 225 | 407 | 07 |
| (4) அசாதாரண நிலைமையின் கீழ் மரணித்தவர்களில் தங்கி வாழ்வோரிற்கு சம்பளம் வழங்கல | 38 | 06 | 03 |
| (5) விதவைகளின் இரண்டாம் திருமணத்தின் பின்னரான இழப்பீடு (முப்படையினரின்) | 95 | | |
| (6) 26 வயது வரைக்கும் பிள்ளைகளுக்கு சம்பளம்வழங்கல் (முப்படையினரிற்கு) | 43 | | |
| | **2973** | **428** | **16** |

2.3 அட்டவணை : மரணித்த,அங்கவீனமுற்ற முப்படையினர் மற்றும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களிற்கு இழப்பீட்டுத்தொகை பெற்றுக் கொடுத்தல்

### 2.2.4 ரணவிரு சுரகும் கொடுப்பனவு

முனைப்பான சேவையின் போது பயங்கரவாதிகளின் செயற்பாட்டினால் அங்கவீனமுற்று அமைச்சரவைப் பத்திர/1982/305/(09) மற்றும் 1982.07.21 திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கேற்ப 55 வயது வரை சம்பளம் மற்றும் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் இராணுவ வீரர்களிற்கும் இவ்வாறு சம்பளம் மற்றும் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் இவ்வீரர்களது மனைவிகள், பயங்கரவாதிகளின் செயற்பாட்டினால் உயிரிழந்த இராணுவ வீரர்களின் விதவையான மனைவியினரிற்கும், அவர்கள் உயிருடன் வாழும் வரை மாத்திரம் 85மு ஓய்வூதியத் தொகையுடன் 15மு ரணவிரு சுரகும் கொடுப்பனவு தொகை என ஒன்றிணைத்து 100மு ஓய்வூதியத் தொகையை உரித்தாக்குதல்

### 2.2.5 நிலுவைச் சம்பளம்

பயங்கரவாத செயற்பாட்டின காரணமாக அங்கவீனமுற்று இயலாமை 50மு இற்கு குறைவாகவும் 20மு இற்கு அதிகமாகவும் அங்கவீனமானதன் அடிப்படையில் அமைச்சரவைத் தீர்மான இல அமப ∴ 1982∴305(09) யின் கீழ் பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்ளாமல் உரித்தான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்து இளைப்பாறிய அல்லது பதவியை விட்டு விலகிச் சென்ற முப்படையைச் சேர்ந்த 1573 வீரர்களிற்கு அவர்கள் ஓய்வூதியம் பெற்ற தினத்திலிருந்து 2014.03.01 திகதி வரைக்கும் உரித்துடைய நிலுவைச் சம்பளம் ஆனது ஒரு வருடத்தில் ஒவ்வொருவரிற்கும் உரித்தாகும் நிலுவைச் சம்பளத்தில் 1∴15 என 15 வருடங்களில் செலுத்தி முடிப்பதற்கு 2016.04.07 ஆம் திகதி இடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தை முன்வைத்தல். இவ்வமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக இல ∴16∴0754∴703∴034-1 மற்றும் 2016.12.13 திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 2.2.6 10/12 ஓய்வூதிய கொடுப்பனவு

பயங்கரவாத செயற்பாட்டினால் அங்கவீனமுற்று இராணுவ சேவையிலிருந்து விலகிச் சென்ற 10 வருட முனைப்பான சேவையைப் பூர்த்தி செய்யாத அதிகாரிகள் மற்றும் 12 வருட முனைப்பான சேவையைப் பூர்த்தி செய்யாத சிப்பாய்களிற்கு ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொடுத்தல் சம்பந்தமான 1981 முப்படை இராணுவ வீரர்கள் ஓய்வூதியக் கொடுப்பனவு மற்றும் ஆயுதப்படைகள் ஓய்வூதிய மற்றும் பணிக்கொடை சட்டத்தில் திருத்தம் வர்த்தமானி மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ள ப்பட்டுள்ளது. மேற்கொள்ளல் சம்பந்தமான விசேட வர்த்தமானி இல 1992/76 உடைய 2016/11/11 அதி விசேட

### 2.2.7 அங்கவீனர்களுக்கான ஓய்வூதியம்

அங்கவீனமுற்றவர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவை வழங்குதல் சம்பந்தமான 1981 முப்படையினரின் ஓய்வூதிய கொடுப்பனவு மற்றும் பணிக்கொடைச் சட்டம் திருத்தம் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் திருத்தத்திற்காக சட்டமா அதிபரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

### 2.2.8 பதக்கம் மற்றும் வெள்ளிப்பட்டை வழங்கல்

முப்படையினர் சகலதரத்தினரிற்கும் அவர்கள் ஆற்றிய சேவையை கொளரவிக்கும் முகமாக பதக்கம் மற்றும் வீர பதக்கம் வழங்கல

| பதக்கத்தின் வகை | தரைப்படை | கடற்படை | விமானப் படை |
|---|---|---|---|
| வெளிநாட்டுச் சேவை பதக்கம் | 14938 | 57 | 104 |
| நீண்ட கால சேவைப் பதக்கம் | 4041 | 2040 | 698 |
| தேசத்தின் குடிமகனிற்கான பதக்கம் | - | 07 | - |
| பிரசங்சனிய சேவைப் பதக்கம் | - | 50 | - |
| வீரச் செயல்களிற்கான பதக்கம் | 7966 | 144 | 101 |
| **மொத்தம்** | **26945** | **2298** | **903** |

2.4 அட்டவணை: பதக்கம் மற்றும் வெள்ளிப்பட்டை வழங்கல்

### 2.2.9 பயிற்சிப்பாடநெறிகள்

#### 2.2.9.1 வெளிநாட்டு அரசினால் வழங்கப்பட்ட பயிற்சி நெறிகள்

| நாடு | இதப | இகப | இவிப | கடலோர காவற்படைத் திணைக்களம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| இந்தியா | 102 | 134 | 49 | | 285 |
| பாகிஸ்தான் | 78 | 38 | 23 | | 139 |
| பங்களாதேஸ் | 45 | 17 | 09 | | 71 |
| நேபால் | 02 | | | | 02 |
| மலேசியா | 08 | | | | 18 |
| சீனா | 42 | 19 | 09 | | 70 |
| ஏனைய வெளி நாடுகள் | 295 | 481 | 127 | 02 | 905 |
| மொத்தம் | 572 | 689 | 217 | 02 | |

2.5 அட்டணை :வெளிநாட்டு அரசினால் வழங்கப்பட்ட பயிற்சி நெறிகள்

### 2.2.9.2 தேசிய பாதுகாப்புப் பாடநெறிகள்

| பயிற்சிநெறிகள் வழங்கும் நாடு | தரைப் படை | கடற்படை | விமானப்ப டை |
|---|---|---|---|
| இந்தியா | 1 | 1 | |
| பாகிஸ்தான் | 2 | 2 | 1 |
| பங்களாதேஸ் | 2 | 1 | - |
| சீனா | 4 | 2 | 1 |
| தென் கொரியா | 1 | - | - |
| பிலிப்பைன்ஸ் | 1 | - | - |
| இந்தோனேசியா | 2 | - | - |
| மொத்தம் | 13 | 06 | 02 |
| முழுத் தொகை | 21 | | |

2.6 அட்டவணை: தேசிய பாதுகாப்புப் பாடநெறிகள்

### 2.2.9.3 திட்டமிடப்படாத பயிற்சிநெறிகள

| பயிற்சிநெறிகளின் வகை | இதப | இகப | இவிப | கடலோர காவற்படை |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க குடியரசினால் வழங்கப்பட்ட பாடநெறிகள் | 32 | 23 | 22 | 01 |
| திட்டமிடப்படாத பயிற்சிநெறிகள் | 43 | 24 | 30 | 02 |

2.7 அட்டவணை: திட்டமிடப்படாத பயிற்சிநெறிகள்

### 2.2.9.4 வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பாடநெறிகள

| பாட நெறிகள் வழங்கல் | |
|---|---|
| இதப | 05 |
| இகப | 11 |
| இவிப | 06 |
| கடலோர காவற்படைத் திணைக்களம் | 08 |
| சிவில் அதிகாரிகள் | 06 |

2.8 அட்டவணை: வெளிநாட்டு வளங்கள்

### 2.2.10 கருத்தரங்குகள் பயிற்சி பட்டறைகள், மற்றும் சுற்றுலா

53 தரைப்படையினர் , 55 இலங்கை கடற்படையினர் ,11 இலங்கை விமானப்படையினர் , மற்றும் 11 இலங்கை கடலோர காவற் படைத் திணைக்களத்தினரிற்கு என்றவகையில் வெளிநாட்டுச்சுற்றுலா.்.பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் என்பவற்றிற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 2.2.11 பல்கலைக்கழக அனுமதி

2015.்.2016 ஆம் ஆண்டு கல்வியாண்டில் முப்படையினரை விசேட அடிப்படையில் பல்கலைக்கழகங்களிற்கு அனுமதித்தல் தொடர்பில் விண்ணப்பப்படிவங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கீழ் உள்ளவாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

| | பொறியியல் துறை | உயிரியல் துறை | பல் வைத்தியம் |
|---|---|---|---|
| தரைப்படை | 07 | 03 | 01 |
| கடற்படை | 01 | 02 | - |
| விமானப்படை | - | - | - |

2.9 அட்டவணை: பல்கலைக்கழக அனுமதிக்காக் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பிய எண்ணிக்கை

### 2.2.12 பல்வேறுபட்ட கோரிக்கைகள்

இராணுவத்தினர் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் மூலம் நேரடியாக மற்றும் ஜனாதிபதி செயலகம், பிரதமர் காரியாலயம், பல்வேறுபட்ட அமைச்சர்கள், பல்வேறுபட்ட நபர்கள் மற்றும் பாதுகாப்புப்பிரிவு நிறுவனங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்ட பல்வேறுபட்ட 1510 கோரிக்கைக் கடிதங்களுக்கான பதில் நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.2.13 கடலோர காவற் படைத்திணைக்களம் தொடர்பிலான பணிகள்

- கடலோர காவற்படைத் திணைக்கள சட்டமூலத்தில் திருத்தம் மேற்கொள்ளல்
- கடலோர காவற்படைத் திணைக்கள சீருடை விதிகள் தொடர்பில் அனுமதியை வழங்கல்
- கடலோர காவற்படைத் திணைக்களத்திற்கு எண்ணெய் கசிவு மேலாண்மை உபகரணத்தினை கொள்முதல் செய்வதன் நிமித்தம் 2017 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுகளை மேற்கொள்ளல்.

### 2.2.14 அமைச்சரவைப்பத்திரம்

இப்பிரிவின் மூலம் முப்படையினர் மற்றும் கடலோர காவற்படைத் திணைக்கள அலுவலக நடவடிக்கைகள் தொடர்பிலான அமைச்சரவைப்பத்திரங்கள் பின்வருமாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

- பொதுமக்கள் போக்குவரத்திற்கு தகுதியான இரண்டு(02) விமானங்களைப் பெறல்
- இலங்கை விமானப்படைவசமுள்ள இலகு ரக விமானங்களின் எண்ணிக்கையை
- அதிகரிக்க புதிய லு-12ஏ இலகுரக போக்குவரத்து விமானங்களை கொள்வனவு செய்தல்
- இலங்கை விமானப்படையினர் வசம் காலவதியாகும் நிலையிலுள்ள போர் விமானங்களிற்கு ஈடாக புதிய 08 பல்துறை போர் விமானங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆயுதங்களைக கொள்வனவு செய்தல்.
- இலங்கை விமானப்படையினரிடம் உள்ள பயிற்சி விமானங்களின்

தொகையைஅதிகரிப்பதற்காக புதிய பீடி ("வு-6) முதன்மை நிலை பயிற்சி விமானங்களை கொள்வனவு செய்தல்

- ஐக்கிய நாடுகள் சபையின் சமாதான கடமைகளின் நிமிதத்தம் மாலி நாட்டில் நிலை கொள்ள செல்லவுள்ள இலங்கை விமானப்படை மற்றும் பொலிஸ் படையினரிற்கான தேவைப்பாடுகளை கொள்வனவு செய்தல்
- இலங்கைத் தரைப்படைக்கு ஒப்பந்த அடிப்படையில் அறுவைச்சிகிச்சை மருத்துவ நிபுணர் ஒருவரை பணிக்கமர்த்தல் (மருத்துவர் காமினி குணதிலக)
- கார்யக்சம சேவா விபூஷனய பதக்கம் மற்றும் பிரசங்சனிய சேவா விபூஷன பதக்கங்களை வழங்களின் பொருட்டு பொது விதிமுறைகளை உருவாக்கல்.
- 2002 ஆம் வருடத்திலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி வரை வருடாந்த முன்னேற்ற அறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல் - இலங்கை விமானப்படை
- யுத்த நடவடிக்கைகளின் பொருட்டு பெலாரஸ் அரசுடன் தொழில்நுட்ப உதவி தொடரபில் உடன்படிக்கையினை மேற்கொள்ளல்.
- இலங்கை விமானப்படைக்கு "வு- 06 முதன்மை நிலை விமானங்கள் 06 இனைக் கொள்வனவு செய்தல்
- இலங்கை விமானப்படைக்கு லு-12ஏ இலகு ரக 02 போக்குவரத்து விமானங்களை கொள்வனவுசெய்தல்
- இராணுவத்தில் கடமையாற்றி சட்டரீதியாக விலகிச்சென்ற இராணுவ வீரர்களுக்கு அமெரிக்க இராஜாங்க திணைக்கள உலகளாவிய செயற்திட்டத்தில் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் முகமாக இலங்கையில் பாதுகாப்பு பயிற்சி நிறுவனமொன்றை நிறுவுவதற்கு குளுஜ ளுநுஊருசுஐவுயுளு நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட யோசணை
- முனைப்பான சேவையின் போது பயங்கரவாதச் செயற்பாட்டின் காரணமாக அங்கவீனமுற்று சேவையிலிருந்து விலகிச்சென்ற இராணுவ வீரர்களிற்கு 55 வயது பூர்த்தியானதன் பின்னரான வாழ் நாள் முழுவதும் சம்பளம் மற்றும் கொடுப்பனவை வழங்கல்.
- முனைப்பான சேவையின் போது பயங்கரவாதச் செயற்பாட்டின் காரணமாக அங்கவீனமுற்று அநிசு இல 1982.'.305(09) ஏற்ப பெற்றுக் கொள்ளும் இராணுவ வீரர்களிற்கும், விதவைநிலைக்குள்ளான இவ்வீரர்களின் மனைவிமார், மற்றும் அங்கவீனமுற்ற வீரர்களினது மனைவிகள் சம்பளம் மற்றும் கொடுப்பனவை இவ்வீரர்கள் அல்லது இவர்களது மனைவியினர் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடைவர். வழங்கப்படும் 85மூ ஓய்வூதிய தொகையுடன், 15மூ ரணவிரு சுரகும் கொடுப்பனவை இணைத்து 100மூ ஆக ஓய்வூதிய தொகையை வழங்குதல்,
- திருகோணமலையில் அமைந்துள்ள கடற்படை மற்றும் கடல்சார் கற்கை நிலைய நிலுவை வேலை
- கடலோர காவற்படைத் திணைக்களத்திற்கு எண்ணெய் கசிவு மேலாண்மை உபகரணத்தினை கொள்முதல் செய்வதன் பொருட்டு 2017 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினூடாக ஒதுக்கீடுகளை மேற் கொள்ளல்
- அரச தனியார் கூட்டு முயற்சியினூடாக உள்ளக விமான போக்குவரத்துச் சேவையை நிறுவுதல்
- இலங்கை விமானப்படைக்கு பெல் ரக உலங்கு வானூர்தி மற்றும் பிரபுக்கள் போக்குவரத்துச் செய்யும் உயர் கொள் திறனுடைய உலங்கு வானூர்திகளை கொள்வனவு செய்வதற்காக தொழிநுட்ப மற்றும் நிதி முன் மொழிவினைப் பெற்றுக் கொள்ளல்
- இலங்கை விமானப்படைக்கு மத்தியரக உயர்த்தி விமானங்களை கொள்வனவு செய்தல்

## 2.3 அடுத்த வருடத்திற்கு பிற்போடப்பட்டுள்ள பணிகள

- ஒயாமடுவை ஆயுதக் களஞ்சியசாலை நிர்மாணப் பணிகள்

## 2.4 எதிர்பார்க்கப்படும் முன்மொழிவுகள

இக்கிளையின் நாளாந்த கடமைகளை இலகுவாக ஆற்றிக்கொள்ளும் வகையில் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது.

இதனூடாக அதிகாரம் பெற்ற அலுவலர்கள் அலுவலக பணியாளர்களை நேரடியாக மேற்பார்வை செய்வதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.
போதுமானளவு கணினி வசதியின்மையால் அலுவலக கடமைகளை நிவைவேற்றுவதில் சிக்கல் நிலைமைக்கு முகங் கொடுக்க வேண்டியுள்ளது.

இக்கிளையின் உத்தியோகஸ்த்தர் குழாமிற்கு சிரேஷ்ட உதவிச் செயலாளரொருவர், உதவிச் செயலாளரொருவர், மூன்று முகாமைத்துவ உதவியாளரகள் மற்றும் அலுவலக உதவியாளர்களை உள்ளடக்குதல்.
இக்கிளையின் நாளாந்த நடவடிக்கைகளை இலகுவாகவும்,வினைத்திறனாகவும் மேற்கொள்வதன் பொருட்டு கணினி வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளல்
ஒழுங்காக பூர்த்தியாக்கப்பட்ட கோப்புக்களை சேமித்து வைப்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட பதிவு அறை வசதியைப் பெற்றுக் கொள்ளல்.
அலுவலக நடவடிக்கைகளை கணினிமயப்படுத்தல்

# 3. தொழினுட்பப் பிரிவு

## 3.1 மேலோட்டமான பார்வை

தேசிய பாதுகாப்புத் தொடர்பான தொடர்பாடல் மற்றும் பொறியியல் விடயங்கள் மீதான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சின் தொழினுட்பப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதே நேரம் பயன்பாட்டிற்கான தந்திரோபாயங்களை அமைத்தலும் நாட்டிலுள்ள பொது மக்களால் பயன்படுத்தப்பட வேண்டிய அதனது செயலிகளை விருத்தி செய்வதும் தொழினுட்பப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொடர்பாடற் செயற் பரப்பானது வானொலித் தொடர்பாடல், தொலைத்தொடர்பு சேவைகள், தொலைக்காட்சி ஒளிபரப்பு, தரவுத் தொடர்பாடல் மற்றும் தேசிய பாதுகாப்பில் தாக்கம் செலுத்தக்கூடிய இறக்குமதி, தொடர்பாடலின் நிறுவல் மற்றும் ஆரம்பிப்புகள், ஊடுருவல் மற்றும் கண்காணிப்பு உபகரணங்கள் போன்றவற்றிற்கு இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப்படும் கண்காணிப்புகளை வழங்குதல் மற்றும் அங்கீகாரம் வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. பொறியியல் செயற்பரப்பு தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் அதே நேரம் தீவு முழுமைக்கும் அரசாங்கத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவைப்படும் சிவில் மற்றும் கள பொறியியல் உதவிகள் சகலதையும் உள்ளடக்குகிறது.

தொழினுட்பப் பிரிவு தேசிய பாதுகாப்பு தொடர்பான தொடர்பாடல் மற்றும் பொறியியல் விடயங்கள் மீது சமாந்தர அமைச்சுக்களுடனும் நிறுவனங்களுடனும் ஒருங்கிணைவையும் இணைப்பையும் கொண்டுள்ளது. பாதுகாப்புத் தலைமையக கட்டடத்தொகுதிச் (DHQC) செயற்றிட்டம் மற்றும் தந்திரோபாய பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்புச் (SDCN) செயற்றிட்டம் என்பன இப்பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்டு தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பாரிய செயற்றிட்டங்கள் ஆகும். இதற்கு மேலதிகமாக, ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான நிலையத்தினால் நடைமுறைப்படுத்தப் பட்ட ஆய்வுச் செயற்றிட்டங்களும் தொழினுட்பப் பிரிவினால் மேற்பார்வை செய்யப்படுகின்றன.

## 3.2. தொழினுட்பப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடைவுகளும் பகுப்பாய்வும்

2016 இல், 197 கோபுரங்களை நிர்மாணிப்பதற்கு தொலைத் தொடர்பு இயக்குநர்களுக்கு பாதுகாப்புத் தடைநீக்கச் சான்றிதழ்களை இப்பிரிவு வழங்கியுள்ளது. மேலும், இலத் திரனியல் / தொடர்பாடலுடன் தொடர்புபட்ட செயலிகளின் 160 விற்பனையாளர் உரிமங்களுக்கான பாதுகாப்புத் தடைநீக்கச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன




3.1. நிரல் படம் : தொலைத் தொடர்பு கோபுரங்களை நிர்மாணிப்பதற்கு தடைநீக்கச் சான்றிதழ்கள் வழங்குதல் 2016

தொடர்பாடல் மற்றும் ஊடுருவல் உபகரணங்களின் இறக்குமதி, வாகன கண்காணிப்பு முறைமைகள், வர்ண பல்தொழிற்பாட்டு அச்சுப்பொறிகள், ஆளில்லா விமானங்கள் (கோணவூர்தி, விமானம், UAV) மற்றும் ஆமேச்சர் வானொலி உரிமதாரர்களுக்கான (உள்நாடு / வெளிநாடு) வானொலி உபகரணம், ஜி.பி.எஸ். ஆகியவற்றுக்கான பாதுகாப்பு தடைநீக்கல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.




3.2 நிரல் படம்: வானொலி உபகரணங்கள் இறக்குமதிக்கான தடைநீக்கச் சான்றிதழ்கள்

மீன்பிடி, நீரியல்வளத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட 629 மீன்பிடிக் கப்பல்களுக்கான வானொலி அழைப்புச் சைகைகள் / அலைவரிசைகளின் ஒதுக்கீடுகள் மீது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவுடன் (TRCSL) இணைந்து பாதுகாப்பு தடைநீக்கல் சான்றிதழ் வழங்கப்பட்டது.

### 3.2.1 பாதுகாப்புத் தலைமையக மீள் இடப்படுத்தல் செயற்றிட்டம்

வர்த்தக அபிவிருத்திக்காக உயர் வர்த்தகப் பெறுமதிமிக்க காணிகளின் பெரியளவு இடப்பரப்புகளை விடுவிக்கும் நோக்கில் புதிய நிர்வாகத் தலைநகரான ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே பகுதிக்கு கொழும்பிலுள்ள அரச அலுவலகங் களை இடமாற்றுவதற்கு 1979 ஆம் ஆண்டின் பாரிய கொழும்புத் திட்டம் வகுக்கப்பட்டது. தற்போது பல்வேறு நிறுவனங்களுக்கிடையிலும் பிரிக்கப்பட்டுள்ள வளங்களை பயனுறுதிமிக்க விதத்தில் பயன்படுத்தல், உட்கட்டமைப்பு களின் இரட்டிப்பைக் குறைத்தல், பாதுகாப்புப் படையினரின் தொழிற்பாடுசார்ந்த / நிர்வாகம் சார்ந்த / ஆயுத தளவாட வழங்கல்கள் சார்ந்த வினைத்திறனை மேலும் மேம்படுத்து வதற்கு கலைத்திறன் அலுவலகக் கட்டடத்தொகுதி ஒன்றை அமைத்து, பாதுகாப்புப் படையினரை வழங்குதல், செறிவான அபிவிருத்தி வலயங்களினுள் தற்போது காணப்படுகின்ற உயர் பாதுகாப்பு வலயங்களைக் குறைப்பதன் மூலம் பொதுமக்களுக்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் ஏற்படும் அசௌகரியங்களைக் குறைத்தல் ஆகியனவே சகல சேவைகளையும் ஒரே பாதுகாப்புத் தலைமையகத்தின் கீழ் கொண்டு வருவதன் முதன்மை நோக்கம் ஆகும். 2011 இல் ஆரம்பிக்கப்பட்ட நிர்மாண வேலைகள் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிர்மாண வேலைகளை முகாமை செய்வதற்கும் நிதிசார் நம்பகத்தன்மையைப் பேணுவதற் காகவும் இரு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

#### 3.2.1.1 DHQC செயற்றிட்டம் – கட்டம் I

பிரதான கட்டடம் (9 தளங்கள்), தொடர்பாடல் கட்டடம், பாதுகாப்புக் கட்டடம், நீர்த் தொட்டி மற்றும் நீர் உந்தும் நிலையம், 250 அதிகாரிகளுக்கான நிரந்தர தங்குமிடங்கள் மற்றும் 6100 ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்களில் 2500 பேருக்கான தற்காலிக தங்குமிடங்கள் ஆகியவற்றின் நிர்மாணத்தை கட்டம் 1 கொண்டுள்ளது.

நிர்மாணத்தின்போது ஏற்படுகின்ற நிதிசார் தடங்கல்கள் காரணமாக கட்டம் 1 பின்வரும் படிநிலைகளாக மேலும் பிரிக்கப்பட்டுள்ளது.

**கட்டம் 01** – 2018 பெப்ரவரி 28 இற்கு முன்பதாக கின்னதெனியவில் கட்டட இல. 6, 7, 8 ஆகியவற்றையும் தொடர்பாடல் கட்டடம், பாதுகாப்புக் கட்டடம், நீர்த் தொட்டியும் நீர் உந்தும் நிலையமும் மற்றும் ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான தங்குமிடங்கள் ஆகியவற்றின் நிர்மாணத்தைப் பூரணப்படுத்தல்.

**கட்டம் 02** – கட்டம் I இன் மீதி வேலைகளின் நிர்மாணம்

#### 3.2.1.2 DHQC செயற்றிட்டம் – கட்டம் II

கட்டம் 02 சமையலறைகள் / உணவு பரிமாறுமிடம் மற்றும் அதனுடன் தொடர்புடைய வெளி வேலைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக 500 அதிகாரிகள் மற்றும் 6100 நிரந்தரமாக வசிக்கும் அலுவலர்கள் ஆகியோருக்கான நிரந்தர தங்குமிடங்கள் மற்றும் அதனோடு இணைந்ததான வசதிகள் போன்றவற்றை கட்டம் II உள்ளடக்குகிறது

#### 3.2.1.3 செயற்றிட்ட முகாமைத்துவமும் நிர்மாணமும்

நிர்மாண வேலைகளை வசதிப்படுத்துவதற்காக, செயற்றிட்டக் குறிப்பீட்டுக் கட்டமைப்புகள் தாபிக்கப்பட்டன. செயற்றிட்ட முகாமைத்துவம் மற்றும் பெறுகைகள் ஆகியவற்றுக்காக செயற்றிட்ட முகாமைத்துவ அலகும் (PMU) செயற்றிட்டத்தின் நிர்மாண வேலைகளுக்காக நிர்மாண முகாமைத்துவ அலகும் (CMU) தாபிக்கப்பட்டது.

கட்டடக்கலை மற்றும் கட்டமைப்பு வடிவமைப்பு, MEPI மற்றும் அளவீடுகளை அளவிடுதல் போன்றவற்றுக்கான ஆலோசனைகளுக்கு செயற்றிட்ட ஆலோசகராக மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் இருக்கிறது.

### 3.2.2 தந்திரோபாய பாதுகாப்புத் தொடர்பாடல்

நாடு பூராகவும் உள்ள முப்படைகள், பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் முன்னரே தேர்ந்தெடுக் கப்பட்ட முனைய மையங்களை இணைக்கின்ற வலை யமைப்பு முகாமைத்துவ முறைமை (NMS) மற்றும் 37 நுண்ணலைத் தொடுப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய தந்திரோபாய பாதுகாப்புத் தொடர்பாடல் வலையமைப்புச் செயற்றிட்டமானது (SDCN) ஒரு பாதுகாப்பான பொதுத் தொடர்பாடல் பின்புலத்தை வழங்குகிறது.

2016 இல், 22 மின் பிறப்பாக்கிகளில் 10 மின் பிறப்பாக்கி களின் நிறுவல் நிறைவுபெற்றிருந்ததுடன் பதினொரு சுய உதவிக் கோபுரங்களினதும் முப்பத்தேழு நுண்ணலை வானொலித் தொடுப்புகளினதும் நிர்மாணத்திற்கான விலை மனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு விலைமனுக்கோரல் சபைக்கு அனுப்பப்பட வேண்டியிருந்தது.



கொக்காவிலில் மின்பிறப்பாக்கி நிறுவல்

2016 சனவரி முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியில், பௌதிக முன்னேற்றம் 10% ஆகவும் நிதிசார் முன்னேற்றம் ஒப்பீட்டு ரீதியில் வருடாந்த ஒதுக்கீட்டில் 3.3% குறை வாகவும் காணப்பட்டது.

### 3.2.3 ஆய்வு அபிவிருத்திக்கான நிலையம்

CRD ஆனது முதலில் பனாகொடை இராணுவ முகாமின் இலங்கை சைகைப் படையணியின் தலைமையக ரெஜிமென்டில் அமைந்திருந்தது. அதனைத் தொடர்ந்து அது கொத்தலாவெல பாதுகாப்புப் பல்கலைக்கழக வளாகத்திற்கு மாற்றப்பட்டது. அதன்பிறகு CRD 2015 இல் மொரகஹன வீதி, பிட்டிப்பனவில் அதன் சொந்தக் கட்டடத் தொகுதிக்கு இடமாற்றப்படும்வரை BMICH கொழும்பு 7 இல் வாடகைக்கு எடுக்கப்பட்ட

அலுவலக இடப்பரப்பிற்கு இடமாற்றப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து நிர்வாகத் தொழிற்பாடுகள் மற்றும் ஏனைய பதவிநிலையினரின் தங்குமிட வசதிகளுக்காக இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. மூன்றாவது கட்டமாக CRD இற்கு இணைக்கப்பட்டுள்ள ஆய்வு உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதியை வழங்குவதற்காக இன்னுமொரு இரண்டு மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு பாதுகாப்புச் செயலாளரால் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப் பட்டது.



| விடயம் | மீண்டுவரும் செலவினம மில்லியன் | மூலதனச் செலவினம் மில்லியன் |
|---|---|---|
| மதிப்பிடப்பட்டதுசெலவு | 10.5 | 36.5 |
| செலவு | 9.9 | 34.9 |
| மீதி | 0.6 | 1.6 |

3.1 அட்டவணை: நிதிசார் முன்னேற்றம்

## 3.3 பணிகளின் முன்னேற்றம்

### 3.3.1 பாதுகாப்புத் தலைமையக மீள் இடப்படுத்தல் செயற்றிட்டம்

#### 3.3.1.1 பௌதீக முன்னேற்றம்

கூரையிடுதல், பொதுவான பகுதிகளுக்கு தரை ஓடு பதித்தல், ஈரமான பகுதிகளுக்கு தரை ஓடு பதித்தலும் பொருத்துதல்களும், மரக் கூரையின் அழகுபடுத்தல், அடித்தள விளைவு போன்ற பாரிய வெளிவளமிடலை வழங்குவதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் காரணமாக MEPI நிர்மாணங்களின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டுள்ளது. இது செயற்றிட்டத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தையும் தாமதப்படுத்துவதுடன் குடிபுகச் சாத்தியமான திகதியையும் நீட்டிக்கின்ற அதே வேளை மேலதிக செலவினையும் ஏற்படுத்துகிறது.



கட்டட இல. 06 – பிரேரிக்கப்பட்ட இராணுவத் தலைமையகத்திற்கானது



தொலை தொடர்பு சமிஞ்சை பிரிவு



பாதுகாப்புக் கட்டடம்



நீர்த் தொட்டி, நீர் உந்தும் நிலையம்

#### 3.3.1.2 நிதிசார் முன்னேற்றம்

| விபரம் | LC கொடுப்பனவு | ஏனைய காசுக் கொடுப்பனவு | மொத்தம் |
|---|---|---|---|
| ஒதுக்கீடு | 250 | 3,500 | 6,000 |
| பொறுப்பு | 1,189 | 989 | 2,178 |
| கொடுப்பனவு | 1,127 | 1,767 | 2,894 |
| மீதி | 184 | 745 | 928 |

3.2 அட்டவணை கொடுப்பணவுகள்

தற்போதைய ஒப்பிய பொறுப்பும் கொடுப்பனவும் - 5,071,741,113.15 (2016 இற்கான வருடாந்த ஒதுக்கீட்டின் 84.53%). LC கொடுப்பனவுக்காக இருக்கின்றதும் வழங்கப்பட்டதுமான நிதிசார் ஒப்பிய பொறுப்பொன்று இருந்தபோதிலும் LC இன் தொடக்கத்தில் ஏற்கப்பட்ட பூச்சிய எல்லை நடைமுறை காரணமாக அது 2017 இற்கு மேலே சுற்றப்பட்டது போன்று காணப்படுகிறது.

#### 3.3.1.3 விசேட பிரச்சினைகள்

காலம் நீடித்துக்கொண்டு போவதும் (EOT) ஒன்பது ஒப்பந்தகாரர்கள் தமது ஒப்பந்தங்களுக்கான உரிமைக் கோரிக்கையை ஏற்கனவே சமர்ப்பித்திருப்பதும் செயற்றிட்டத்தின் பாரிய பிரச்சினையாக இருக்கிறது. நிர்மாண முகாமைத்துவ அலகின் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் செயற்றிட்ட முகாமையாளர்கள் ஆகியோருக்கு மேலதிகப் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள துடன் நிர்மாணத்தைத் துரிதப்படுத்துவதற்காகவும் முன்னேற் றத்தைக் கண்காணிப்பதற்காகவும் சகல தொழிலாளர் களுக்கும் இலக்கு அடிப்படையிலான மதிப்பீட்டுக் கோட்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக சேவையாளர்களின் நோக்கெல்லையினுள் வரும் சகல கட்டமைப்புசார் நிர்மாணங்களையும் பெரும்பாலும் பூர்த்தியடைந்துள்ளன அல்லது அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன. 2016 இன் நடுப்பகுதியிலிருந்து தள்ளிவைக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கான பிரேரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புக் கட்டமைப்பானது ஒப்பளிப்புச் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுமாயின் இந்நிலமையை மேலும் மேம்படுத்தலாம்.

தொழிலாளர்களின் வேலைத்திறனை மதிப்பிடுவதற்கும் அவர்கள் NVQ சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்குமென ACTA உடன் இணைந்து நிகழ்ச்சித்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

கேட்போர்கூடம், நீர்த் தொட்டி, நீர் வாயில், மின் இணைப்பு போன்ற பொது வசதிகள் இராணுவத் தலைமையகம், தலைமை பாதுகாப்பு அதிகாரி அலுவலகம், பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றில் குடிபுகும் காலக்கெடுவை எதிர்கொள்வதன் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டன.

கட்டமைப்பின் ஸ்திரத்தன்மை பராமரிக்கப்படுவதை / மீட்டெடுக்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு கலவைக் கூறுகள் வெளித்திறந்திருப்பதன் காரணமாக ஏற்படும் சேதங்களைக் குறைத்து கட்டமைப்புச் சீரழிவினைத் தடுப்பதற்கு, முன்னுரிமை அளிக்கப்பட்ட நிர்மாணங்களா

ன கட்டடங்கள் 6, 7, 8, பிரதான கட்டடத் தொகுதியிலுள்ள ஏனைய கட்டடங்கள் ஆகியவற்றின் மீதி வேலைகள் மேவுகின்ற பலத்துடன் (தொழிலாளர்கள்) மீளவும் ஆரம்பிக்கப்பட்டன.

### 3.3.2 தந்திரோபாயப் பாதுகாப்புத் தொடர்பாடல் வலையமைப்புச் செயற்றிட்டம்

#### 3.3.2.1 பிரச்சினைகளும் சவால்களும்

பதினொரு சுய உதவி தொடர்பாடல் கோபுரங்களின் நிர்மாணத்திற்கான இடப்பரப்பைப் பெறுவதில் காணப்பட்ட பிரச்சினைகள் காரணமாக விலைமனு நடைமுறை தாமதமாகியுள்ளது. அதிகமான விலைமனுதாரர்கள் பூரணமற்ற விலைகோரல்களைச் சமர்ப்பித்திருந்ததுடன் கோபுர நிர்மாணம் மற்றும் நுண்ணலை வானொலித் தொடுப்புகளுக்காக மீளவும் விலைமனுக் கோரல் செய்யப்பட்டது. பதினொரு சுய உதவி தொடர்பாடல் கோபுரங்களினதும் நிர்மாணம் 2017 இல் பூர்த்தியடையும் போது மீதி மின் பிறப்பாக்கிகளையும் (12) நிறுவ முடியும்.

### 3.3.3 ஆய்வு அபிவிருத்திக்கான நிலையம்

#### 3.3.3.1 செயற்றிட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றம்

| தொ இல | செயற்றிட்டத்தின் பெயர் |
|---|---|
| 1. | புகையிரத கண்காணிப்பு முறைமை |
| 2. | போர்க்களத்தில் ஒருங்கிணைப்புத் திறன் கொண்ட புலனாய்வுத் தயாரிப்பும் (IPB), DSCSC இற்கான பயிற்சிப் போலியின் அபிவிருத்தியும் |
| 3. | களனிவெளி புகையிரதப் பாதையின் புனரமைப்பு |
| 4. | சிவில் பாதுகாப்புத் திணைக்களம் |
| 5. | DRONEs இனைப் பயன்படுத்தி 3D பட அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் வடிவமைப்பும் விருத்தியாக்கமும் |

3.3 அட்டவணை : வேறு அரச நிறுவனங்கள் / திணைக்களங்களுக்காக முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங்கள்

வரையறுக்கப்பட்ட ஆய்வு அலுவலர்களையும் வரை யறுக்கப்பட்ட பாதீட்டையும் கொண்டு இவ்வாண்டின் காலப் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவு செயற்றிட்டங்களை வெற்றிகரமாக நிறைவுசெய்ய CRD இனால் முடிந்திருந்தது. CRD இனால் நிறைவு செய்யப்பட்ட

பின்வரும் செயற்றிட் டங்கள் 2016 ஆகஸ்ட் 15 இல் உத்தியோகபூர்வமாக பாது காப்புச் செயலாளரால் முப்படைகளிடம் கையளிக்கப்பட்டது.

| தொ. இல. | செயற்றிட்டத்தின் பெயர் |
|---|---|
| 1. | சிறிய ஆயுதங்கள் சுடுதல் போலி |
| 2. | K-8 போலி செயற்றிட்ட கட்டம் I |
| 3. | கள ஆட்டிலறி முறைமை செயற்றிட்டம் |
| 4. | குவாட் கொப்டர் செயற்றிட்டம் |
| 5. | ரெஜிமென்ட் கணக்கு மென்பொருள் |
| 6. | உயர்-நுட்ப படைவீரர் இணைய செயலி |

3.4 அட்டவணை: ஆராய்ச்சி நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட உபகரணங்கள்/ தீர்வுகள்

| விபரம் | வருமானம் / செலவு(ரூ.) |
|---|---|
| GIS பாடநெறி I இன் வருமானம் | 350,000.00 |
| பங்குபற்றுநரின் உணவுக்கான செலவு | 50,000.00 |
| பாடநெறி அறிவுறுத்துநருக்கான கொடுப்பனவு | 90,000.00 |
| பாடநெறி (1) இலிருந்து பெற்ற மொத்த வருமானம் | 210,000.00 |
| GIS பாடநெறி II இன் வருமானம் | 350,000.00 |
| பங்குபற்றுநரின் உணவுக்கான செலவு | 50,000.00 |
| பாடநெறி அறிவுறுத்துநருக்கான கொடுப்பனவு | 90,000.00 |
| பாடநெறி (2) இலிருந்து பெற்ற மொத்த வருமானம் | 210,000.00 |
| மொத்த வருமானம் | 420,000.00 |

3.5 அட்டவணை: வருமான வழி கருத்திட்டம்

#### 3.3.3.2 பிரச்சினைகளும் சவால்களும்

- CRD ஆனது MOD இல் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர் களிடமிருந்து மட்டுமே ஆய்வுச் செயற்றிட்டங்களுக்குத் தேவைப்படும் உருப்படிகள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தேவைப்பாட்டைக் கொண்டிருக்கிறது. இவ்வாறு தேவைப்படும் குறிப்பிட்ட சில உருப்படிகள் மற்றும் உபகரணங்களைப் பெறும்போது உயர் விலை கூறப்படுதல், குறிப்பிட்ட பொருட்களுக்கான வழங்குநர்கள் கிடைக்காமை, ஓடர் செய்யப்பட்ட உருப் படிகள் மற்றும் உபகரணங்களை வழங்குவதில் காணப் படும் தாமதம் போன்ற காரணங்களால் கஸ்டங்களை எதிர்நோக்குகின்றது. எனவே திறந்த சந்தையில் போட்டிமிக்க வழங்குநர்களிடமிருந்து உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்கான ஒரு பொறிமுறையை ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவை வலியுறுத்தப்படுகின்றது.
- உள்ளூர் சந்தையில் கிடைக்காத உருப்படிகளை நேரடியாக இறுக்குமதி செய்யவேண்டிய தேவை ஏற்படும் போது அத்தகைய இறக்குமதிகளுக்கு கொடுப்பனவைத் தீர்ப்பனவு செய்வதில் CRD கஸ்டங்களை எதிர்நோக்கு கின்றது.

## 3.4 அடுத்தவருடத்திற்கு பிற்போடப்பட்டுள்ள பணிகள்

- **ஆய்வு அபிவிருத்திக்கான நிலையம்:** கூரையிடுதல், பொதுவான பகுதிகளுக்கு தரை ஓடு பதித்தல், ஈரமான பகுதிகளுக்கு தரை ஓடு பதித்தலும் பொருத்துதல்களும், மரக் கூரையின் அழகுபடுத்தல், அடித்தள விளைவு போன்ற பாரிய வெளிவளமிடலை வழங்குவதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் காரணமாக MEPI நிர்மாணங்களின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டுள்ளது. இது செயற்றிட்டத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தையும் தாமதப்படுத்துவதுடன் குடிபுகச் சாத்தியமான திகதியையும் நீட்டிக்கின்ற அதே வேளை மேலதிக செலவினையும் ஏற்படுத்துகிறது.

- **தந்திரோபாயப் பாதுகாப்புத் தொடர்பாடல் வலையமைப்புச் செயற்றிட்டம்:** 11 சுய உதவித் தொடர்பாடல் கோபுரங்களின் நிர்மாணம், 12 மின் பிறப்பாக்கிகளின் நிறுவுகை, வலையமைப்பு முகாமைத்துவ முறைமையுடன்கூடிய (NMS) 37 நுண்ணலை வானொலித் தொடுப்புகளின் நிறுவுகை ஆகியவற்றைப் பூரணப்படுத்துவதற்கு.

- அபிவிருத்தி மற்றும் ஆய்வு நிலையத்தினால் தொடரப்பட செயற்றிட்டங்கள்

| தொ. இல | நடவடிக்கை / செயற்றிட்டம் |
|---|---|
| 1 | செயற்கை மூட்டுக்களுக்கான மூளை கட்டுப்பாட்டு இடைமுகம் (BCI) |
| 2 | ஹெக்சாகொப்டர் இன் அிவிருத்தி |
| 3 | கப்பல் தரவு கண்காணிப்பு முறைமை (SDMS) |
| 4 | நனோ தொழினுட்பத்திற்குப் பயன்படுத்தப்படும் அழுக்காகாத மற்றும் அரிப்புக்குள்ளாகாத தீந்தையின் அபிவிருத்தி |
| 5 | நிலைப்படுத்தும் மேடையுடன் தனிப்பயனாக் கக்கூடிய தீக் கட்டுப்பாட்டுக் கரைசல் |
| 6 | K - 8 விமானத்திற்கான பயிற்சிப் போலி – கட்டம் II |
| 7 | வான் போக்குவரத்துக் கட்டுப்படுத்திகளுக்கான பயிற்சிப் போலி |
| 8 | வழிநடத்தும் ராக்கெட் மற்றும் ஏவுகணை முறைமை அபிவிருத்திச் செயற்றிட்டம் |
| 9 | குவட்கோப்டர்கள் மற்றும் UAVS இற்கான ஹைட்ரஜன் எரிபொருட் கலம் அபிவிருத்தி |
| 10 | இலக்குகள் மற்றும் சுடுநர்களின் மதிப்பீட்டு அபிவிருத்தியும் சீரமைப்பும் |
| 11 | ஆர்மர் டாங் போலி முறைமை அபிவிருத்தி |
| 12 | மெய்நிகர் உண்மை பரசூட் குதிப்பாளர்கள் மற்றும் வான் கரணமடிப்போன் பயிற்சிப் போலியின் அபிவிருத்தி |
| 13 | சிங்களமொழியில் மாற்றும் பிறைல் முறைமை |
| 14 | நிலத்தடி நீர் கண்காணிப்பு மற்றும் கண்டுபிடிப்பு முறைமை |
| 15 | நாள்பட்ட சிறுநீரக நோய்க்கான புவியியல் தகவல் முறைமை |
| 16 | HF/VHF & UHF ரேடியோ செலுத்தி வாங்கியின் வடிவமைப்பும் அபிவிருத்தியும் |
| 17 | வாகனச் செலுத்தல் போலி |
| 18 | DRONEs ஐப் பயன்படுத்தி 3D பட அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் வடிவமைப்பும் விருத்தியாக்கமும் |
| 19 | K3 ஜம்மர் மென் பெக் வேர்சன் |
| 20 | சோலர் பெயின்ட் அபிவிருத்தி |
| 21 | குற்றவாளிப் புலனாய்வுத் தரவுத்தள முகாமை |
| 22 | LIDAR survey அடிப்படையிலான குவாட்கொப்டர் |
| 23 | வாகனம் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்கும் சாதனத்தின் அபிவிருத்தி |
| 24 | தேசிய நெய்யரி தொடர்பு முறைமைக்கான புதிய உருப்படி ஆய்வும் அபிவிருத்தியும் |
| 25 | வாகன முகாமைத்துவ முறைமை |

3.4 அட்டவணை:அபிவிருத்தி மற்றும் ஆய்வு நிலையத்தினால் தொடரப்பட செயற்றிட்டங்கள்

## 3.5 எதிர்பார்க்கப்படும் முன்மொழிவுகள

- இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் சாதனங்களின் இறக்குமதிக்காக அங்கீகாரம் வழங்கும் செயன்முறையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு தொழினுட்பப் பிரிவுக்கு அஞ்சல் முறைமையை தன்னியக்கப்படுத்தலும் ஆவண முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்தலும்
- 2017 டிசெம்பர் 31 இற்கு முன் கட்டடங்கள் 6, 7, 8, தொடர்பாடல் கட்டடம், பாதுகாப்புக் கட்டடம், நீர் தொட்டி மற்றும் நீர் உந்தும் நிலையம், கின்னதெனியவில் ஏனைய பதவிநிலையினரின் தங்குமிடங்கள் என்பவற்றை பூரணப்படுத்தல்
- பலவற்றையும் கவனத்திற்கொண்டதன் பின்னர் தொகுக்கப் பட்டு முன்மொழியப்பட்டதும் 2016
- இலங்கை இராணுவத் தலைமையகத்திற்காக கட்டட இல. 6 ஐயும் 7 ஐயும் நிறைவுசெய்தல்
- தொடர்பாடல் கட்டடத்தையும் சைகைக் கோபுரத்தை யும் (பொது வசதி) நிறைவுசெய்தல்
- பாதுகாப்புக் கட்டடத்தைப் பூர்த்திசெய்தல் (பொது வசதி)
- நீர் தொட்டி மற்றும் நீர் உந்தும் நிலையம் (பொது வசதி)
- கழிவுநீர் பரிகரிப்பு ஆலை (பொது வசதி)
- மின்சார வழங்கல் முறைமை (பொது வசதி)
- மீதி நிர்மாண வேலைகளைத் தடைசெய்யாது AHQ/MOD தொழிற்பாட்டிற்கு வசதியளிப்பதற்கான பாதை வலையமைப்பு
- 250 (இராணுவ) அதிகாரிகளுக்கான நிரந்தர வதிவிடமும் தற்காலிக வதிவிடமும் - கின்னதெனியவில்
- தலைமைப் பாதுகாப்பு அதிகாரியின் அலுவலகத் திற்கான இல. 8 கட்டடத்தைப் பூர்த்திசெய்தல்
- பாதுகாப்பு அமைச்சுக்காக 1 ஆம் 2 ஆம் இலக்க கட்டடங்களைப் பூர்த்திசெய்தல்
- இலங்கை கடற்படைத் தலைமையகத்திற்காக 3 ஆம் இலக்க கட்டடத்தைப் பூர்த்திசெய்தல்
- இலங்கை விமானப்படைக்காக 4 ஆம் இலக்க கட்டடத்தைப் பூர்த்தி செய்தல்
- பிரதான கேட்போர்கூடத்திற்காக 5 ஆம் இலக்க கட்டடத்தைப் பூரணப்படுத்தல்
- 500 அதிகாரிகளுக்கான (கடற்படை, விமானப் படை) நிரந்தர வதிவிடமும் இணைந்த வசதிகளும்
- சமையலறை மற்றும் தொடர்புபட்ட வெளியக வேலைகளுடன்கூடிய 6100 ORS அலுவலர்கள் வசிப்பதற்கான நிரந்தர வதிவிடம்
- 2018 நடுப்பகுதியில் நுண்ணலை வானொலித் தொடுப்புகள் மற்றும் வலையமைப்பு முகாமைத்துவ முறைமையின் நிறுவுகையைப் பூரணப்படுத்தலும் வலையமைப்பை மேம்படுத்துவதற்கான எதிர்காலத் தேவைப்பாட்டை மீளாய்வதற்கான முறைமையைக் கண்காணித்தல்

- சகல பகுதிகளினதும் முழுமையான தொழிற்பாடுகளை இயலச்செய்வதற்காக நவீன ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய 6 மாடிக் கட்டடத்தின் நிர்மாணத்தை ஆரம்பித்தல்
- CRD யிற்கான விசேடத்துவமிக்க ஆளணியினரை சேர்த்துக் கொள்வதற்கான ஆயத்தங்களைச் செய்தல்
- CRD யின் ஆய்வு அலுவலர்களுக்கான விசேட ஆய்வுக்கொடுப்பனவை வழங்குவதற்கு ஒழுங்குகளைச் செய்தல்
- CRD செயற்றிட்டங்களில் பல்கலைக்கழகங்களின் உள்ளுறை முதிர் மாணவர்களுக்கு வசதியளிப்பதற்கு தேவையான ஒழுங்குகளைச் செய்தல்
- லங்கா லொஜிஸ்டிக் அன்ட் டெக்னோலொஜி லிமிட்டெட் ஊடாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முடிவுப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்குப் பொருத்தமான பொறிமுறையை விருத்தி செய்தல்
- 2017 மார்ச்சில் தேசிய புலனாய்வுத் தலைமை அலுவலகத்துடன் (OCNI) இணைந்து CRD யில் இணையப் பாதுகாப்பு இயக்க நிலையம் ஒன்றை தாபித்தல்
- பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவ நோக்கங் களுக்காக மத்திய வீச்சுக் கொண்ட ஆளில்லா விமானத்திற்கான (MRUAV) மேம்பாட்டு நிலைப் வடிவத்தைப் பூர்த்தி செய்தல்
- CRD இல் விருத்தி செய்யப்பட்ட மென்பொருளை அறிமுகப்படுத்துவதன் மூலம் புகையிரத கண்காணிப்பு முறைமையொன்றைத் தாபித்தல்
- CRD ஐ ஒரு சுயாதீனமான நிறுவனமாகத் தாபிப்பதற்கு முறைமையொன்றை வடிவமைத்தல்

# 4. பாராளுமன்ற சிவில் பணிகள் பிரிவு

## 4.1 மேலோட்டமான பார்வை

பாராளுமன்ற அலுவல்கள் பிரிவினால் கீழ்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

- முப்படை முகாம்கள் மற்றும் உபகுழுக்கள் அமைப்பதற்கு தேவையான காணி தொடர்பான பணிகள்
- அமைச்சின் பொறுப்புக்கள் கடமைகள் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் தொடர்பான பணிகள்.
- முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினருக்கான சீருடை மற்றும் துணி வகைகளை வழங்குவது தொடர்பான பணிகள்.
- காணி சுவீகரித்தல் தொடர்பான மக்களின் வேண்டுகோள்கள் மற்றும் முறையீடுகள் தொடர்பான விவகாரங்கள்.
- .பிரிவின் உள்ளக நிர்வாக விடயங்கள்.

## 4.2. காணி விவகாரங்கள்

### 4.2.1 காணி

காணி அமைச்சு, காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம், வன பாதுகாப்பு திணைக்களம், பிரதேச செயலாளர் காரியாலயம், உள்ளுராட்சி மன்றங்கள் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து முப்படையினரின் பயன்பாட்டிற்கு தேவையான காணிகளைக் கையேற்றல் மற்றும் சுவீகரித்தல் செயற்பாடுகள் இவ்வமைச்சினால் நிறைவேற்றப்படுகின்ற பிரதான பணிகளாகும். 2016 ஆம் ஆண்டு கீழ்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

- முப்படையின் மூலமாக காணிகளை யையேற்றல்/சுவீகரித்தல் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளல்.
- பிரதேச செயலாளர்கள் மற்றும் காணி உரிமைக் கையளிக்கப்பட்டுள்ள ஏனைய நிறுவனங்களின் மூலம் சிபாரிசுகள் மற்றும் அவதானிப்புகளைப் பெற்றுக்கொள்ளல்.
- தேவையான அனைத்து ஆவணங்களுடன் காணி சுவீகரிக்கும் /கையேற்கும் விண்ணப்பத்தினை காணி அமைச்சின் செயலாளருக்கு மற்றும் காணி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்.
- காணிகளின் உரித்துரிமை விடயங்களில் சிக்கல்கள் காணப்படும் சந்தர்ப்பங்களில் கள மேற்பார்வைகளை மேற்கொள்ளல்.
- காணி அளக்கும் விடயங்களை கூட்டிணைப்புச் செய்தல், காணிகளுக்கான மதிப்பீட்டு அறிக்கையினை பெற்றுக்கொள்ளும் விடயங்களை கூட்டிணைப்புச் செய்தல்.
- சுவிகரிக்கப்படுகின்ற காணிகளுக்கான இழப்பீட்டினை செலுத்துவதற்காக மத்திய திறைசேரியின் அங்கிகாரம் பெறல்.
- பாரிய பிரச்சினைகள் கொண்ட காணிகளை சுவிகரிக்கும் போது அமைச்சரவையின் அங்கிகாரம் பெறல்.
- இவைத்தவிர நல்லிணக்கம் மற்றும் மீள்குடியேற்ற விவகாரங்களுக்கு பங்களிப்பு வழங்குகின்ற அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களுக்கு உதவி வழங்கும் முகமாக இப்பிரிவு முப்படையுடன் இணைந்து முப்படையினர் அனுபவிக்கின்ற காணிகளில் விடுவிக்கக் கூடிய காணிகளை இனங்கண்டு அவற்றினை மீண்டும் காணி உரிமையாளர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் 2016.12.31 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் காணி விடுவித்தல் தொடர்பான வளர்ச்சி பின்வருமாறு

| | 2016 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்ட காணிகளின் அளவு (ஏக்கர்) | | |
|---|---|---|---|
| | **அரச காணி** | **தனியார் காணி** | **மொத்தம் (ஏக்கர்)** |
| தரைப்படை | 1311.60 | 1926.67 | 3238.27 |
| கடற்படை | 1629.38 | 163.36 | 1792.74 |
| வான்படை | 2575.00 | - | 2575.00 |
| மொத்தம் | 5515.98 | 2090.03 | 7606.01 |

4.1 அட்டவணை: 2016 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்ட காணிகளின் அளவு (ஏக்கர்)

### 4.2.2. பாராளுமன்றத்தில் அறிக்கையிடுதல் தொடர்பான கடமைகள்

#### 4.2.2.1 பாராளுமன்ற உறுப்பினர்கள் வினவும் வினாக்களுக்கு விடையளித்தல்

அமைச்சு உரிய நிறுவனங்களுடன் கூட்டிணைந்து பாராளுமன்றத்தின் 28 வினாக்களுக்கான மும்மொழியிலான விடைகளை தயாரித்து உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்பித்தது.

#### 4.2.2.2 பொது மக்கள் மனு தொடர்பான குழு நிலை சபை

முப்படை உள்ளிட்ட இவ்வமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் தொடர்பாக பொதுமக்களினால் பாரளுமன்றத்தில் பொது மக்கள் மனு தொடர்பான குழுநிலை சபையிடம் முன்வைக்கப்படுகின்ற மனுவிற்கு தேவையான விடயங்களை உரிய பிரிவு/ நிறுவனங்களில்

இருந்து பெற்றுக் கொண்டு பதில்களுடன் பொது மக்கள் மனு குழு நிலை சபைக்கு அனுப்பப்பட்டது. 2016 ஆம் ஆண்டு இப்பிரிவின் மூலம் நேரடியாக பொது மக்கள் மனு குழுநிலை சபையின் இரண்டு (2) மனுக்களிற்கான பதில்கள் அனுப்பப்பட்டதோடு ஏனைய மனுக்களிற்கான பதில்களை மற்றைய பிரிவுகளில் இருந்து பதில் பெற்றுக்கொள்வதற்காக அப்பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

#### 4.2.2.3 பிரிவு மேற்பார்வை குழு கூட்டம் (Sectoral Oversight Committee on National Security)

பாதுகாப்பு அமைச்சிக்குறிய பிரிவு மேற்பார்வைக் குழுக் கூட்டம் 2016.08.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்றதோடு பாதுகாப்பு செயலாளர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்கள்/பிரிவுகளின் தலைவர்கள் அதில் கலந்துக்கொண்டனர்.

#### 4.2.2.4 நிலையியற் கட்டளைகள் மற்றும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படும் சந்தர்ப்பங்களில் வினவப்படும் வினாக்கள்

ஏற்புடைய காலத்தில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படும் சந்தர்ப்பங்களில் வினவப்பட்ட 05 வினாக்களுக்கு மற்றும் நிலையியற் கட்டளையின் கீழ் வினவப்பட்ட 08 வினாக்களுக்கு விடையளிக்கப்பட்டன.

#### 4.2.2.5 அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரித்தல் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பில் அவதானம் செலுத்துதல்

அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்து அதற்கான அமைச்சரவை அங்கிகாரம் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதே போல 17 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சரின் அவதானங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

#### 4.2.2.6 பாராளுமன்ற குழு நிலை விவாதம்

2016.12.07 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற குழு நிலை விவாதத்தின் போது பாதுகாப்பு அமைச்சின் செலவு விபரம் வாசிப்பதற்காக இவ்வமைச்சினைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற உரிய சிரேஷ்ட அதிகாரிகள் பங்குபற்றுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

#### 4.2.2.2.7 முப்படைகளுக்கான சீருடைகள் மற்றும் துணிவகைகள் வழங்குதல் - DTAC

முப்படைகள் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கான துணி வகைகளை விலைக்கு வாங்குவதற்குரிய நடவடிக்கைகள் கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் தொடர்பான அமைச்சுடன் இணைந்து விலை மனு கோரல்களுக்கு அமைய உள்ளூர் உற்பத்தியாளர்களின் விலைகளைப் பெற்று நிறைவேற்றப்பட்டது. 2017 ஆம் ஆண்டிற்காக முப்படைகள் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்காக ரூபா. 1,872,215,000.00 (ஒரு பில்லியன் எண்ணூற்று எழுபத்து இரண்டு மில்லியன் இருநூற்று பதினைந்தாயிரம் ரூபா) மற்றும் அதற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட வரியினை (VAT) செலவு செய்வதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் 2016 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டன.

#### 4.2.2.8 மக்களின் வேண்டுகோள்கள் மற்றும் முறையீடுகள் தொடர்பிலான விடயங்கள்

மக்களினால் இவ்வமைச்சிற்கு நேரடியாக அனுப்பப்படுகின்ற மற்றும் சனாதிபதி காரியாலயம், பிரதமர் காரியாலயம், புனருத்தாபனம் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் மூலம் அனுப்பப்படுகின்ற வேண்டுகோள்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் உதவிப்புரிவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

#### 4.2.2.9 உள்ளக நிர்வாக விடயங்கள்

இப்பிரிவைச்சேர்ந்த உத்தியோகத்தர்களின் நிர்வாக விடயங்கள், பயிற்சி மற்றும் நலன்புரி விடயங்கள் வினைத்திறன் மற்றும் விளைத்திறன் மிக்கதாக நிறைவேற்றப்பட்டன. நிர்வாகப்பிரிவின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களின் ஊடாக உத்தியோத்தர்களின் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவைத்தவிர உத்தியோத்தர்களின் குழு செயற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு மற்றும் அவர்களின் அறிவு திறன் போன்றவற்றினை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ''சதர திகந்தே ஹோராவ'' என்ற நிகழ்ச்சி இவ்வருடமும் இடம் நடைப்பெற்றது.

## 4.3 எதிர்பார்க்கப்படும் முன்மொழிவுகள்

- வட கிழக்கு பிரதேசங்களில் முப்படையினரால் பயன்படுத்தப்படுகின்ற காணிகளில் முடியுமான தனியார் காணிகளை விடுவித்து சட்ட ரீதியாக உரிமையாளர்களுக்கு கையளிப்பதற்கான அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

# 5. நிர்வாகப்பிரிவு

## 5.1 மேலோட்டமான பார்வை

நிர்வாகப்பிரிவில் பொறுப்புகளைக் கொண்ட பிரதான துறைகளை கீழ்வரும் அடிப்படையில் சாரம்சப்படுத்தி காட்டலாம்.

- அமைச்சு மற்றும் அதற்கு கீழ் இயங்கும் கீழ்வரும் நிறுவனங்களின் நிறுவன மற்றும் நிர்வாக செயறபாடுகளை நிறைவேற்றுதல்.
    - பாதுகாப்பு உயர்பதவி உத்தியோகத்தர் தலைவர் காரியாலயம்
    - ஊடக மத்திய நிலையம்
    - தேசிய புலனாய்வு சேவை

- இவ்வமைச்சு மற்றும் இதன் கீழ் இயங்கும் கீழ்வரும் நிறுவனங்களின் சிவில் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பான நிறுவன மற்றும் நிர்வாக செயற்பாடுகள்.
    - இலங்கை தரைப்படை
    - இலங்கை கடற்படை
    - இலங்கை வான்படை
    - கடலோர பாதுகாப்பு திணைக்களம்
    - ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொதலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
    - ஆராய்ச்சி அபிவிருத்தி மத்திய நிலையம்

- அமைச்சின் கீழ் இயங்கும் கீழ்வரும் நிறுவனங்களின் நிர்வாக செயற்பாடுகள் மற்றும் கொள்கைகளை தீர்மானித்தல்இ நிதிசார் கடமைகள் தொடர்பாக செயற்படுதல் ஆகியன இப்பிரிவின் ஊடாக நிறைவேற்றப்படுகின்றன
    - நமக்காக நாம் வீட்டுக் கருத்திட்டம்
    - மிகிந்து செத் மெதுர
    - படையினரின் பகுதியளவு பூர்த்தியடையச் செய்யும் வீட்டுக் கருத்திட்டம்
    - படைக்கல படை உறுப்பினர்கள் மற்றும் நலநோம்பல் பிரிவு

- அமைச்சின் அனைத்து உள்ளகப் பிரிவுகளின் நிர்வாகக் கடமைகள் நிறைவேற்றப்படுவதுடன் தபால் பிரிவு போக்குவரத்துப் பிரிவு நிர்வாகப்பிரிவுகளின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.

### 5.1.1 “நமக்காக நாம் ’’படையினர் வீட்டுக் கருத்திட்டம்

2008 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க ‘’நமக்காக நாம் ‘’என்ற பாராளுமன்ற சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நமக்காக நாம் நிதியத்தின் ஒதுக்கீடுகளை பயன்படுத்தி வீடற்றப் படைவீரர்களின் வீட்டுத் தேவையினை பூர்த்தி செய்வதற்கு தேவையான வசதிகள் வழங்கப்படும்.

இங்கு செயற்படுத்தப்பட்ட கருத்திட்டம் பிரதானமாக 02 வகைப்படும்.

1. **முழுமையான வீட்டுக் கருத்திட்டம்**

   வீடற்ற படை வீரர்களுக்காக முழுமையான வீடுகளை அமைத்துக் கொடுத்தல்.

2. **பகுதியளவு பூர்த்தியடையச் செய்யும் வீட்டுக் கருத்திட்டம்**

   படைவீரர்களின் முழுமைப்பெறாத வீடுகளை முழுமையாக அமைத்துக் கொடுத்தல்.

### 5.1.2 “சத்விரு சன்ஹிந்த” படையினரின் பகுதியளவு பூர்த்தியடையச் செய்யும் வீட்டுக் கருத்திட்டம்

ஒரே தேசத்தை உருவாக்கும் பொருட்டு கடும் யுத்தத்திற்காக தன்னை அர்பணித்த உன்னத இலங்கையர்களான முப்படை வீரர்களுக்காக அரசின் வரவு செலவு நிதி ஒதுக்கீட்டின் மூலம் நாடு முழுவதும் படைவீரர்களினால் தற்போது நிர்மாணிக்கப்படுகின்ற முழுமைப்பெறாத வீடுகளை அவர்கள் வாழ்வதற்கு ஏற்ற வகையில் அமைத்துக்கொடுப்பதற்காக இக்கருத்திட்டம் பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றுத.

## 5.2 படைக்கல சேவை உறுப்பினர்களின் நலனோம்பல் பிரிவு

எமது தாய் நாட்டின் ஒருமைப்பாட்டிற்காகவும் இறைமைக்காகவும் போராடிய முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்பு சேவையில் தற்போது கடமைப் புரிபவர்கள் ஓய்வு பெற்ற படைவீரர்களுக்காக நலனோம்பல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்புடுகின்றன. அதற்காக கீழ்வரும் கடமைகள் நிறைவேற்றப்படுகின்றன.

- .காணிகள் இல்லாத படை வீரர்களுக்கு வீடுகள் நிரமாணிப்பதற்குர்கு காணிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- படைவீரர்களின் பிள்ளைகள் அரச பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளப்படும் போது எழுகின்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக செயற்படுதல்.
- படையினரின் வாழ்க்கைத் துணைக்கான அரச சேவை இடமாற்றம் பெற்றுக்கொடுப்பதற்கு உதவுதல்..
- படைவீரர்களின் காணிகள் தொடர்பிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவுதல்.
- படைவீரர்களுக்கான நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.

| பொறுப்புக்கள் | செயற்பாடுகள் | செயலாற்றுகை | | |
|---|---|---|---|---|
| வினைத்திறனை மேம்படுத்தல். | கனணி மூலமாக செயற்திறன் மிக்கதாக கடிதங்களை பகிர்ந்தளித்தல். | | கிடைத்தல் | அனுப்புதல் |
| | | பு.தபால் | 11,065 | 11,412 |
| | தனிப்பட்ட தகவல்களை இற்றைப்படுத்திக் கொள்ளல். | கையில் | 32,162 | 36,948 |
| | | தபால் | 29,200 | 24,380 |
| | | முழுமைப்படுத்தப்பட்ட தகவல்கள் அடங்கிய கோப்புகள்-300 | | |
| | தாமதமாகாத செலுத்தல்களை அடைத்தல். விலைச்சீட்டுகளுக்கான அனுமதியினை வழங்கல். | நிர்வாகப்பிரிவு | | |
| | | 3500 | | |
| சரியான தீர்வுக்கான தகவல் முகாமைத்துவ தொகுதிகளை உருவாக்குதல் மற்றும் புதுப்பித்தல். | 1.மனித வள முகாமைத்துவ தொகுதி | 29 | | |
| | • புதிய நியமனங்கள் வழங்கள் | | | |
| | • ஓய்வு பெறுதல் | 11 | | |
| | • புதவி உயர்வு | 07 | | |
| | • வேதன உயர்வினை பெற்றுக்கொடுத்தல் | 300 | | |
| | 2.வாகன முகாமைத்துவ தொகுதி வாகனங்களை கையகப்படுத்தல் திருத்துதல் விற்றல் வாடகைக்கு பெறுதல். | வாகனங்கள் திருத்துதல் -100<br>புதிதாக கொண்டு வரப்பட்ட வாகனங்கள்-02<br>ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கிய வாகனங்கள்-35 | | |
| மனித வளம் அறிவு மற்றும் திறன்களினால் மேம்படுத்தல். | பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல் வசதிகள் வழங்கல். | நிகழ்ச்சி | பங்கேற்பு | |
| | பயிற்சி பட்டறைகள் ஏற்பாடு செய்தல். | 05 | 300 | |
| | நலனோம்பல் செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல். | 05 | 1035 | |
| | பபுயிற்சியாளர்களுக்கு 06 மாத பயிற்சியினை வழங்கல். | 62 | | |

5.1 அட்டவணை: படையினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள்

| நமக்காக நாம் "சத்விரு சங்ஹிந்த" முழுமையான வீட்டுத் கருத்திட்ட பயனாளிகளின் எண்ணிக்கை-2016 | | | | | |
|---|---|---|---|---|---|
| **மாவட்டம்** | **தரைப்படை** | **கடற்படை** | **வான்படை** | **நிர்மானிப்பதற்கு திட்டமிடப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை** | **2016 ஆம் ஆண்டிற்குள் நிர்மானித்து கையளிக்கப்பட்ட வீடுகள்** |
| அம்பாரை | 30 | 12 | 8 | 50 | 35 |
| களுத்துரை | 30 | 12 | 8 | 50 | கருத்திட்டத்தை ஆரம்பிக்க முடியவில்லை |
| பொலனறுவை | 30 | 12 | 8 | 50 | 41 |
| அனுராதபுரம் | 30 | 12 | 8 | 50 | கருத்திட்டத்தை ஆரம்பிக்க முடியவில்லை |
| மிகிந்து செத் மெதுர | 9 | - | - | 9 | 9 |
| மொத்தம் | 129 | 48 | 32 | 209 | 85 |

5.2 அட்டவணை "நமக்காக நாம்" வீட்டுக் கருத்திட்டம்

| நமக்காக நாம் "சத்விரு சன்ஹிந்த" முழுமைபெறாத வீட்டுக் கருத்திட்ட பயனாளிகளின் எண்ணிக்கை-2016 | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | தரைப்படை | கடற் படை | வான் படை | முழுமைப்படுத்த திட்டமிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | 2016 ஆண்டிற்குள் நிர்மானப்பணிகளை நிறைவு செய்து கையளிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை |
| பொலனறுவை | 15 | 6 | 4 | 25 | 20 |
| கம்பஹா | 15 | 6 | 4 | 25 | இவ் மாவட்டங்களில் திட்டமிடப்பட்ட முழுமைப்பெறாத வீடுகளை நிர்மாணிக்க முடியாமல் போனது. |
| நுவரெலியா | 15 | 4 | 4 | 24 | |
| மாத்தலை | 12 | 6 | 3 | 21 | |
| கொழும்பு | 15 | 6 | 4 | 25 | |
| கேகாலை | 12 | 6 | 3 | 21 | |
| காலி | 12 | 6 | 4 | 22 | |
| அனுராதபுரம் | 15 | 6 | 4 | 25 | |
| ரத்தினபுரி | 15 | 6 | 4 | 25 | |
| கண்டி | 12 | 6 | 4 | 22 | |
| குருணாகலை | 15 | 6 | 4 | 25 | |
| மட்டகலப்பு | 6 | 4 | 4 | 14 | |
| பதுளை | 12 | 2 | 2 | 16 | |
| மொத்தம் | 171 | 70 | 48 | 289 | 20 |

5.3 அட்டவணை: நமக்காக நாம் "சத்விரு சன்ஹிந்த" முழுமைபெறாத வீட்டுக் கருத்திட்ட பயனாளிகளின் எண்ணிக்கை-2016

நமக்காக நாம் சத்விரு சன்ஹிந்த வீட்டுக் கருத்திடடததின் கீழ் 2016 ஆம் ஆண்டு செயற்படுத்திய கடந்த வருடங்களில் நிறைவு செய்யப்படாத கருத்திட்ட வேலைகள்

| முழுமையான வீடுகள் | |
|---|---|
| மாவட்டம் | நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை |
| மாத்தரை | 96 |
| அம்பாந்தொட்டை | 12 |
| அனுராபுரம் | 19 |
| மொத்தம் | 127 |

| பகுதியளவு பூர்த்தியடையச் செய்யும் வீடுகள் | |
|---|---|
| மாவட்டம் | கட்டுமானம் நிறைவு செய்யப்பட்ட முழுமையற்ற வீடுகளின் எண்ணிக்கை |
| மாத்தரை | 25 |
| அம்பாந்தொட்டை | 27 |
| மொத்தம் | 52 |

5.4 அட்டவணை: செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள்

நமக்காக நாம் நிதியத்தின் ஊடாக படைவீரர்ளுக்கு வீடுகள் நிர்மணித்து கையளிக்கும் கையளிக்கும் கருத்திட்டத்தின் முன்னேற்றம் குறைவடைந்தமைக்கான காரணங்கள்

- மீளமைத்தல் செயற்பாடுகளின் போது ஏற்படுகின்ற தாமதங்கள்
- விலைக்கு வாங்கும் செயற்பாடுகளின் போது ஏற்படுகின்ற தாமதங்கள்
- வேலைக் குழுக்களின் பற்றாக்குறைக் காரணமாக ஏற்படுகின்ற நிர்வாகப் பணித் தாமதங்கள்
- கடந்த வருட கருத்திட்டங்களில் நிறைவுசெய்யப்படாத செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

### 5.2.1 படையினரின் பகுதியளவு பூர்த்தியடையச் செய்யும் வீட்டுக் கருத்திட்டம்

2016 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்தின் ஒதுக்கீடு ரூ. 200 மில்லியன

| இலக்கம் | மாவட்டம் | தெரிவுசெய்யப்பட்டுள்ள எண்ணிக்கை | தரைப்படை | கடற் படை | வான் படை |
|---|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 13 | 10 | 2 | 1 |
| 2 | புத்தலம் | 11 | 4 | 0 | 7 |
| 3 | கம்பஹா | 29 | 22 | 6 | 1 |
| 4 | குருணாகலை | 43 | 13 | 23 | 7 |
| 5 | களுதுரை | 13 | 7 | 3 | 3 |
| 6 | அம்பாந்தொட்டை | 3 | 2 | 1 | 0 |
| 7 | பதுளை | 16 | 14 | 1 | 1 |
| 8 | மொனராகலை | 10 | 8 | 0 | 2 |
| 9 | கேகாலை | 30 | 17 | 12 | 1 |
| 10 | இரத்தினபுரி | 7 | 4 | 0 | 3 |
| 11 | அம்பாரை | 4 | 1 | 2 | 1 |
| 12 | காலி | 15 | 7 | 6 | 2 |
| 13 | கண்டி | 23 | 18 | 3 | 2 |
| 14 | நுவரெலியா | 6 | 5 | 1 | 0 |
| 15 | அனுராபுரம் | 27 | 14 | 10 | 3 |
| 16 | மாத்தலை | 13 | 11 | 2 | 0 |
| 17 | பொலனறுவை | 5 | 1 | 2 | 2 |
| 18 | வவுனியா | 1 | 1 | 0 | 0 |
| 19 | மாத்தரை | 8 | 4 | 0 | 4 |
| | | 277 | 163 | 74 | 40 |

5.5 அட்டவணை2016 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட படையினர் பயனாளிகளின் எண்ணிக்கை

### 5.2.2 புடைக்கலச் சேவை உறுப்பினர்களின் நலனோம்பல் பிரிவு

| | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | காணியின் பெயர் | பகிர்ந்தளிக்கப்பட்ட காணி பகுதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | மாத்தலை | தம்புளை | திகம்பதக கிராம அதிகாரி பிரிவிற்குட்பட்ட காணி | 216 |
| 02 | அம்பாரை | உஹன | பாலம் முகாம் கிராம அதிகாரி பிரிவிற்குட்பட்ட சமனபத்த காணி | 50 |
| 03 | குருணாகலை | கல்கமுவ | முககல்கமுவ கிராம அதிகாரி பிரிவிற்குட்பட்ட கொஜராகம காணி | 65 |

5.6 அட்டவணை :இராணுவ வீரர்களுக்கு காணிகள் வழங்கும் கருத்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்படும் காணிகளின் விபரம்

## 5.3 எதிர்பார்க்கப்படும் முன்மொழிவுகள்

### 5.3.1 நிர்வாகப்பிரிவு

- அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு தேவையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை இனங்கண்டு அதற்கமைய கற்கை நெறிகளை ஏற்பாடு செய்தல்.
- பயிற்சி நிகழ்சி நிரல்களில் அமைச்சின் உத்தியோகத்தர்களை பங்குபற்றச்செய்வதற்கு ஆர்வமூட்டுவதன் ஊடாக அவர்களின் சேவைகளை செயற்திறன் மிக்கதாக்குதல்.
- பிரிவுகளில் புரியும் கடமைகளுக்கு வழிகாட்டல் கையேடுகள் தயாரித்தல்.
- பயிற்சி தரவுத் தொகுதியினை அமைத்தல்.
- முறையாக கோப்புகளை முகாமைத்துவம் செய்வதற்கு உரிய முறையினைப் பயன்படுத்தல்.ஊதாரணம் அசைவு பத்திரங்கள் பயன்படுத்தல்
- மனித வளங்களை வினைத்திறன் மிக்கதாக பயன்படுத்திக்கொள்வதற்கு விசேட திறமைகளை இனங்காணல்.
- நலநோம்பல் செயற்பாடுகளை விருத்திசெய்தல்.
- செயற்பாடுகளை இலகுவாக்கல்.
- உதாரணம் -பிரச்சினைகளை இனங்கானலும் தீர்வுகளை கண்டறிதலும்

### 5.3.2 நமக்காக நாம் வீட்டுக் கருத்திட்டம்

நமக்காக நாம் வீட்டுக் நிதியத்தின் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் அடைந்துக் கொள்வதற்காக கீழ்வரும் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

**கருத்திட்டம் இல - 01**

⌗ முழுமையான வீடுகளை நிர்மானித்தல் ∴ முழுமைப்பெறாத வீடுகளை நிர்மாணிப்பதற்கு இதற்கான நிதி ஒதுக்கீடு

பொருள் உதவி மற்றும் வேலைக் குழுக்களைப் பெற்றுக் கொடுத்தல்.

தகுதி பெற்ற பயனாளிகள் - நமக்காக நாம் பயனாளிகளை தெரிவு செய்வதற்காக நியமிக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக் குழுவின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட கீழ்வரும் படை வீரர்கள் ஆவர்.

I. 100% அங்வீனமுற்ற படை வீரர்கள்

II. தொழில் புரிய முடியாத 75% க்கு மேல் அங்கவீனமுற்ற படை வீரர்கள்

III. தொழில் புரிய முடியாத இறந்த/காணாமற்போன படை வீரர்களின் நெருங்கிய உறவினர்கள்

**கருத்திட்டம் இல - 02**

முழுமையடையாத வீடுகளை வசிப்பதற்கு ஏற்ற வகையில் நிறைவு செய்வதற்காக நிதி உதவி வழங்குதல்.

தகுதி பெற்ற பயனாளிகள்- நமக்காக நாம் நிதியத்தின் முகாமைத்துவ குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக் குழுவின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட படை வீரர்கள்

**கருத்திட்டம் இல – 03**

⌗ காணி விலைக்கு வாங்குதல்∵வீடு அமைத்தல் அல்லது சீர் திருத்துவதற்குகாக அரசினால் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களில் கடன்கள் பெற்றுக்கொண்ட படைவீரர்கள் அக்கடன் சுமையில் இருந்து மீளுவதற்காக வழங்கும் நிதியுதவியில் 50% ஐ 60 தவணைகளில் மீள் செலுத்தும் அடிப்படையில் நிதியுதவி வழங்குதல்.

தகுதி பெற்ற பயனாளிகள்- நமக்காக நாம் நிதியத்தின் முகாமைத்துவ குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக் குழுவின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட படை வீரர்கள்

### 5.3.3 நிதி ஒதுக்கீடு

நமக்காக நாம் நிதியத்தின் நிலையான வைப்பு மற்றும் திரைசேறி பட்டியல் வைப்பிற்காக வருடாந்தம் கிடைக்கும் வட்டித்தொகையான .225 மில்லியன் ருபா கீழ்வரும் அடிப்படையில் இத்திட்டங்களுக்கு பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

கருத்திட்டத்திற்காக பயன்படுத்தும் முழுத்தொகையினை முப்படை உறுப்பினர்களின் சதவிகிதத்திற்கு ஏற்ப ஒதுக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

| சேவைகள் | பயன்படுத்த எதிர்பார்க்கப்படும் தொகை( மில்லியன் ருபா) |
|---|---|
| தரைப்படை | 135.0 |
| கடற்படை | 56.25 |
| வான்படை | 35.75 |
| மொத்தம் | 225.0 |

5.7 அட்டவணை :தகுதி பெற்ற பயனாளிகள் (சேவைகள் அடிப்படையில்)

| கருத்திட்டம் | தரைப்படை | கடற்படை | வான்படை | மொத்தம் |
|---|---|---|---|---|
| கருத்திட்ட இலக்கம் 01<br>நிதியத்தின் மூலம் முழுமையான வீடுகளை நிர்மானிப்பதற்காக வேலை குழு மற்றும் நிதியுதவி வழங்கல். | 30 | 12 | 8 | 50 |
| கருத்திட்ட இலக்கம் 02<br>முழுமைப்பெறாத வீடுகளை முழுமைப்படுத்துவதற்காக ரூ.750,000.00 நிதியுதவி வழங்கல். | 60 | 25 | 15 | 100 |
| கருத்திட்ட இலக்கம் 03<br>வீட்டுக் கடன்களில் இருந்து மீளுவதற்காக அதிகபட்சம் 1,000,000.00 கீழ் நிதியுதவி வழங்கல். | 45 | 20 | 10 | 75 |
| மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை | | | | 225 |

5.8 அட்டவணை: மேற்கண்ட ஒழுங்குமறையின் கீழ் பயன் அடைபவர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை

### 5.3.4 படையினரின் முழுமையபெறாத வீட்டுக் கருத்திட்டம்

- சத்விரு சன்ஹிந்த படையினரின் முழுமையடையாத வீட்டுக் கருத்திட்டம்- கட்டம் 7

சத்விரு சன்ஹிந்த படையினரின் முழுமையடையாத வீட்டுக் கருத்திட்டம்- கட்டம் 7 ற்கான அரசாங்கத்தின் வரவு செலவு நிதி ஒதுக்கீட்டின் படி 400 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
7 ஆம் கட்டத்திற்காக இலங்கை தரைப்படை இலங்கை கடற்படை இலங்கை வான்படையில் இருந்து கீழ்வரும் 510 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

- தரைப்படை - 306
- கடற்படை - 127
- வான்படை - 77

### 5.3.5 செயற்பாட்டுத்திட்டம்

| செயற்பாடுகள் | கால எல்லை | பொறுப்புக் கூற வேண்டியவர்கள் |
|---|---|---|
| வீட்டின் ஆரம்ப சோதனை மற்றும் மதிப்பீட்டினை நேரடியாக அமைச்சிக்கு மற்றும் பிரதேச ரீதியிலான விலைக்கு வாங்கும் முகாம்களுக்கு சமர்ப்பித்தல் | 2017 மார்ச் 01 ஆம் திகதிக்கு முன் | மாவட்ட தொடர்பு படுத்தும் அதிகாரிகளினால் |
| அமைச்சிகளினாலும் மற்றும் பிரதேசங்கனினாலும் விலைக்கு வாங்குதல் | 2017 மே 01 ஆம் திகதிக்கு முன் | முகாம்கள் ∴பிரிவு ∴கருத்திட்டத்தின் பிரதேச விலைக்கு வாங்குதலை மீளமைத்தல் |
| பிரதேச மற்றும் அமைச்சின் ஊடாக விலைக்கு பெற்றுக்கொண்ட பொருட்களை பயனாளிகளுக்கு பகிர்ந்தளித்தல் | 2017 ஜீன் 15 ஆம் திகதிக்கு முன் | போருட்களை பகிர்ந்தளிப்பதற்காக நியமிக்கப்படடுள்ள ஒவ்வெரு மாவட்டங்களில் அமைந்துள்ள முகாம்களில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் மாவட்ட தொடர்புபடுத்தும் அதிகாரிகள் (மேற்பார்வை) |
| அனைத்து விலைக்கு வாங்கள் கணக்குகளை நிறைவு செய்தல் | 2017 ஆகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன | முப்படை நிதி பணிப்பாளர்கள் |
| அனைத்து இறுதி அறிக்கைகளையும் சமர்ப்பித்தல் | 2017 செப்தம்பர் 01 ஆம் திகதிக்கு முன் | மாவட்ட தொடர்புபடுத்தும் அதிகாரிகளினால் படையினர் சேவை பணிப்பாளர்∴நலன்புரி பணிப்பாளர்கள் (மேற்பார்வை) |

5.9 அட்டவணை : செயற்பாட்டுத்திட்டம்

## 5.3.6 படைக்கல சேவையினர் மற்றும் நலன்புரி பிரிவு

| | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | காணியின் பெயர் | பகிர்ந்தளிக்கவுள்ள காணியின் அளவு |
|---|---|---|---|---|
| 01 | காலி | ஆக்மீமன | அமுகொடுவ பிரிவிற்குட்பட்ட காணி ஹல்கஸ்முல்ல பிரிவிற்குட்பட்ட காணி | 05 ஏக்கர் |
| 02 | அனுராதபுரம் | கல்னேவ | இல- 473 முஸ்னவ துலானே இலக்கம்-956 பிரிவின் 15 ஆம் துண்டம் (கட்டம்-2) | 46 துண்டம் |
| | | பதவிய | இல-14 போகா வெவ துலானே குடா ரத்மலே சிறிய வீதியின் இருபக்க காணி | 30 துண்டம் |
| 03 | பொலனறுவை | எலகெர | தியபெதும பிரிவு பெரகும்கம காணி | 152 துண்டம் |
| 04 | மாத்தலை | தம்புள்ளை | திகம்பதக பிரிவு காணி (கட்டம் 2) | 126 துண்டம் |
| | | லக்கல-பல்லேகம | .402 சீ வெளிவரனாகொள்ள பிரிவு மொரகாபோடாவ காணி | 18 துண்டம் |
| 05 | குருணாகலை | கல்கமுவ | இல-60 மஹகல்கமுவ மாகாணப் பிரிவு கோஜராகம காணி (கட்டம் 2) | 48 துண்டம் |
| | | ரஸ்நாயகபுர | இல-303 உடஹேனேகம பிரிவு அ.க.பி 2405 இல் 1 ஆம் துண்டத்தின் பிரிவு | 33 துண்டம் |
| | | நிகரவெடிய | போகொள்ளாகம பிரிவு அ.க.பி 1986 11 ஆம் துண்டத்தின் பிரிவு | 55 துண்டம் |
| 06 | புத்தலம் | ஆனமடுவ | இல-658 சீ திவுல்வெவ பிரிவு சியம்பலாகஹஹென காணி | 57 துண்டம் |
| | | வனாதவில்லுவ | அழுத் எலவழுன் குளம பிரிவு அயிலிகாடு காணியின் பிரிவு | 65 துண்டம் |
| | | முந்தலம | இல-609 ஏ புபுது கம பிரிவு காணி | 85 துண்டம் |
| 07 | பதுலை | பண்டாரவலை | மக எல்ல பிரிவு வனசிரிகம காணி | 20 துண்டம் |

5.10 அட்டவணை :2017 ஆம் ஆண்டு படையினருக்காக பகிர்ந்தளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு






# 6. சிவில் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு

## 6.1 மேலோட்டமான பார்வை

சிவில் பாதுகாப்பு பிரிவிற்கு வழங்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றும் போது கீழ்வரும் அடிப்படை இலக்குகளை அடைந்துக்கொள்ளும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்டது.

- பாதுகாப்பான சிவில் சமூகமொன்றினைக் கட்டியெழுப்புதல்.
- வணிகத் துறையில் வெடிப்பொருட்கள் பயன்படுத்தும் போது பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- ஒழுங்குபடுத்தப்பட்ட தனியார் பாதுகதாப்புச் சேவை வசதிகளை வழங்குதல் மற்றும் சமுத்திரப் பாதுகாப்பு சேவை வசதிகளை வழங்கும் நிறுவனங்களை உறுதிப்படுத்தல்.
- படைக்கலச் சேவை பொலிஸ், சிவில் பாதுகாப்பு படை உறுப்பினர்களுக்கு மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்கு கல்வி மற்றும் தொழில் அபிவிருத்தி வாய்ப்புகளை வழங்கல்.
- சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் நிறுவன ,நிர்வாக மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உதவிப்புரிதல்.

## 6.2 2016 ஆம் ஆண்டு செயலாற்றுகை

மேற்கண்ட இலக்குகளை அடைந்துக்கொள்ளும் நோக்கோடு இப்பிரிவினால் 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் 2016.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் கீழ்வரும் விடயங்கள் நிறைவேற்றப்பட்டன.

- 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மட்டும் ஜீன் மாதங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட அனுமதியின்றிய தீ ஆயுதங்களை அரசுக்கு ஒப்படைக்கும 2 வேலைத்திட்டங்களின் கீழ் அனுமதியின்றிய தீ ஆயுதங்கள் 846 இனை அரசு பொறுப்பேற்று அழிப்பதற்காக இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது
- துப்பாக்கிக் கட்டளைச் சட்டத்தை தற்கால தேவைக்கு ஏற்றவாறு மீளமைப்பதற்கான வரைபினை உறுவாக்கி சட்ட வரைபு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.
- 15 வருடங்கள் திருத்தம் செய்யப்படாத வெடிப்பொருட் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட கட்டணங்கள் தற்போதைய பொருளாதார நிலமைகள் மற்றும்

- பொருத்தமான வகையில் திருத்தப்பட்டு புதிய வர்த்தமான அறிவித்தல் வெளயீட்டினை நிறைவு செய்து 2016.10.01 ஆம் திகதியில் இருந்து புதிய கட்டணம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் மூலம் வெடிப்பொருட்கள் துறையில் பெற்றுக்கொண்ட வருடாந்த வருமானம் குறைந்தது 300% வளர்ச்சியினை காணக்கூடியதாக இருந்தது.
- துப்பாக்கி உறுதிப்பத்திரம் மற்றும் வெடிப்பொருள் உறுதிப்பத்திரம் விநியோகிக்கும் வேலைத்திட்டத்தினை கனணி மயப்படுத்துவதற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையம் வேலைத்திட்டங்களை தொடங்கியதோடு குறித்த கனணி மயபப்படுத்தும் வேலைத்திட்டமானது 2017 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படக்கூடும்.
- சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வு ஒழுங்கு முறையினை ஏற்படுத்தி ஊதியம் மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| செயற்பாடு | 2016<br>நிறைவு | 2017<br>மிகுதி |
|---|---|---|
| வெடிப்பொருள் அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கல் | 4088 | - |
| வெடிப்பொருள் உத்தரவுப்பத்திரம் விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கல் | 2209 | - |
| மொத்த வியாபாரிகளுக்கு வெடிப்பொருட்களை விலைக்கு வாங்குவதற்கு அனுமதி வழங்கல் | 642 | - |
| வாணங்கள் மற்றும் யானை வெடி உற்பத்திக்காக வெடிப்பொருற்களை பெற்றுக்கொள்ளல் | 80 | - |
| தீப்பெட்டி உற்பத்திக்காக வெடிப்பொருற்களை பெற்றுக்கொள்வதற்கு அனுமதியினை பெற்றுக்கொள்ளல் | 89 | - |
| வேளிநாட்டு கப்பல்களின் பாதுகாப்பிற்காக இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களுக்கு வீசா விநியோகித்தல் | 21 | - |
| வேளிநாட்டு பிரமுகர்களுக்கு அனுமதி வழங்கல் | 18 | - |
| தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனங்களின் பதிவுகளை புதுப்பித்தல் | 352 | 03 |
| ஆபாயகரமான கொள்கலன்களைக் கொண்ட கப்பல்களை செலுத்துவதற்கு அனுமதி வழங்கல் | 1316 | - |
| இருண்ட கண்ணாடிகளுக்கு அனுமதி வழங்கல் (வாகனங்கள்) | 348 | 03 |
| சிவில் பாதுகாப்பு பிரிவு ஊழியர்களின் -வருடாந்த சம்பள உயர்வினை செலுத்துவதற்கு பரிந்துரை மற்றும் அனுமதி வழங்கல் | 43 | - |
| சிவில் பாதுகாப்பு பிரிவு ஊழியர்களின இடமாற்றம் தொடர்பான கடமைகள் | - | 02 |
| விவசாய பாதுபாதுகாப்பு / விளங்கு வேளான்மைக்காக புதிய தீ ஆயுதங்களை கோரல் /உத்தரவுப்பத்திரம் வழங்கல் | 07 | 125 |
| தற்காப்பிற்காக -38 மற்றும் 9 mm ஆயுதங்களை கோரல் | 53 | 83 |
| 38 மற்றும் 9 mm ஆயுதங்களுக்கான உத்தரவுப்பத்திரத்தினை புதுப்பித்தல் | 1256 | 349 |
| அரச நிறுவனங்களின் பாதுகாப்பிற்காக ஆயுதங்கள் கோரல் | 157 | |
| தனியார் நிறுவனங்களின் பாதுகாப்பிற்காக ஆயுதங்கள் கோரல் | 102 | |
| அரச வங்கிகளின் பாதுகாப்பிற்காக ஆயுதங்கள் கோரல் | 425 | - |
| தனியார் வங்கிகளின் பாதுகாப்பிற்காக ஆயுதங்கள் கோரல் | 20 | - |
| விளையாட்டு அலுவல்களுக்காக ஆயுதங்கள் கோரல் | 08 | 29 |
| வாயு ரைபல் இறக்குமதி செய்தல் | 9229 | - |
| விளையாட்டு கழகங்களுக்கு ஆயுதங்களை விநியோகித்தல் - புதிய | 08 | - |
| பழுதடைந்த தீ ஆயுதங்களுக்கு பதிலாக புதிய தீ ஆயுதங்களை விநியோகித்தல் | 32 | 15 |
| 65 வயது பூர்த்தியடைந்த தீ ஆயுத உரிமையாளர்களின் குடும்பத்திற்கு தீ ஆயுதத்தினை கையளிப்பதற்கான விண்ணப்பப்பத்திரம் / உத்தரவுப்பத்திரம் விநியோகித்தல் | 167 | 101 |
| இலவச தீ ஆயுத உத்தரவுப்பத்திரம் விநியோகித்தல்- மக்கள் பிரதிநிதிகள் (பாராளுமன்ற உறுப்பினர்கள் ) | 35 | - |
| இலவச தீ ஆயுத உத்தரவுப்பத்திர மக்கல் பிரதிநிதிகள்(மா.சபை) | 58 | - |

6.1 அட்டவணை: சிவில் பாதுகாப்பு பிரிவு-2016.01.01 ஆம் திகதி முதல் 2016.12.31 ஆம் திகதி வரையான முன்னேற்றம்

| | பணிகள் துப்பாக்கிக்கட்டளைச் சட்டத்துக்குறிய கடமைகள் | முன்னேற்றம் | 2017 ஆம் ஆண்டிற்கான மிகுதி பணிகள் மற்றும் சவால்கள் |
|---|---|---|---|
| 01 | தற்காப்பிற்காக கைத்துப்பாக்கி மற்றும் ரிவால்வர் விநியோகம் | தற்போது வரை 1608 தீ ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட தீ ஆயுதங்களில் நீக்கப்பட்ட 1394 | 1. 83விண்ணப்பப்பத்திரங்கள் குறைப்பாடுகளுடன் கிடைக்கப்பெற்றதோடு அக்குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br>2. உத்தரவுப்பத்திரம் புதுப்பிப்பதற்காக 138 உள்ளன. அச்செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| 02 | விவசாயம் மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக துப்பாக்கி விநியோகம் | 1. விவசாய பாதுகாப்பிற்காக 07 தீ ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.<br>2. பழுதடைந்த தீ ஆயுதங்களுக்கு பதிலாக புதிய தீ ஆயுதங்களை விநியோகத்தில் -32 ஆகும்<br>3. 65 வயதிற்கு மேற்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு தீ ஆயுதங்களை கையளித்தல் - 167 ஆகும் | 1. விவசாய பாதுகாப்பு விண்ணப்பப்பத்திரங்கள் 125 கிடைக்கப்பெற்றுள்ளன. இக்குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன<br>2. குடும்பத்தினருக்கு வழங்கிய விண்ணப்பப்பத்திரங்கள் 72 குறைப்பாடுகளுடன் இருந்தன. அக்குறைப்பாடுகள் நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. |
| 03 | விளையாட்டு அலுவல்களுக்காக வழங்கிய தீ ஆயுதங்கள் | தேசிய ரைபல் சங்கம் மற்றும் தேசிய குறிப்பார்த்து சுடும் விளையாட்டு சம்மேளனத்தின் கீழ் உள்ள விளையாட்டு சங்கங்கள் 15 ஆகும். அச்சங்கங்களுக்கு புதிய 08 ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. | 29 விண்ணப்பப்பத்திரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| 04 | வாயு ரைபல் விநியோகித்தல் | 1. வாயு ரைபல் 9229 விநியோகிக்கப்பட்டுள்ளது<br>2. புதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் 07ஆகும். | வாயு ரைபல் மற்றும் வாயு கைத்துப்பாக்கிகளின் உற்பத்தி இந்நாட்டில் இல்லை. இப்பிரிவு மேம்படுத்தப்பட வேண்டியதாகும். |
| | பணிகள் | முன்னேற்றம் | 2017 ஆம் ஆண்டிற்கான மிகுதி பணிகள் மற்றும் சவால்கள் |
| 05 | அரசிற்கு சொந்தமான தீ ஆயுதங்களை விநியோகித்தல் | 1. 35 மக்கள் பிரதிநிதிகளுக்கு (பாராளுமன்ற உறுப்பினர்கள்) தீ ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.<br>2. மாகாண சபை உறுப்பினர்களுக்காக 58 தீ ஆயுத உத்தரவுப் பத்திங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன | |
| | பணிகள் தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவன சட்டம் | | |
| 06 | தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனங்கள் | 1. புதிவு செய்த மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கை 352 ஆகும்<br>2. அரச நிறுவனங்களுக்கு ஆயுதம் விநியோகித்தல் 157 ஆகும்<br>3. அரச வங்கிகளுக்கு ஆயுதம் விநியோகித்தல் 425 ஆகும்<br>4. தனியார் வங்கிகளுக்கு 20 ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன<br>5. தனியார் நிறுவனங்களுக்கு 102 ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. | தனியார் பாதுகாப்பு சேவையில் ா.டுப்பட்டுள்ள உத்தியோத்தர்களுக்கு தகுந்த ஒழுங்கு முறையுடன் சர்வதேச மட்டத்தில் தொழில் வாண்மையை உருவாக்குவதற்கு NVQ கற்கை நெறியினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| 07 | வருமானம் | தீ ஆயுதம்/ தோட்டாக்கள் மற்றும் வெடிப்பொருட்கள் விநியோகித்ததில் 2016 ஆம் ஆண்டு 20.5 மில்லியன் ரூபா ா.ட்டப்பட்டது | |
| 08 | துப்பாக்கிக் கட்டளைச் சட்டம் | இச்சட்டம் தற்காலத்திற்கு பொருந்தும் வகையில் திருத்தியமைப்பதற்கு அமைச்சரவைக் குறிப்பு 2017.01.04 ஆம் திகதி அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவை அனுமதி கிடைத்ததன் பின்பு வரைபினை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| | பணிகள்/ வெடிப்பொருள் சட்டம் | | |

| | | | |
|---|---|---|---|
| 09 | வெடிப்பொருள் கட்டளைச்சட்டம் | கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. | சட்டத்தினை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதோடு சட்ட வரைபாக்குனருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 10 | துப்பாக்கி உத்தரவுப் பத்திரம் மற்றும் வெடிப்பொருள் உத்தரவுப் பத்திரம் விநியோகிக்கும் வேலைத்திட்டத்தினை கனணி மயப்படுத்தல். | ஆராய்ச்சி அபிவிருத்தி மத்திய நிலையத்துடன் (CRD) வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன | இந்நிகழ்ச்சி திட்டத்தை செயற்படுத்துவதற்காக 25 கனணிகளை பெற்றுக்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. மாவட்ட செயலாளர் காரியாலயத்துடன் இணைந்து செயற்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. |
| | பணிகள்/ சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்குறிய கடமைகள் | முன்னேற்றம் | 2017 ஆம் ஆண்டிற்கான மிகுதி பணிகள் மற்றும் சவால்கள் |
| 11 | சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமைப் புரியும் உறுப்பினர்களுக்காக ஓய்வூதியம் பெற்றுக் கொடுத்தல் | இதற்கான அமைச்சரவை அனுமதியோடு தற்போது செயற்படுவதுடன் 2015.04.23 தினத்தில் நேரடி சேவையில் ா.டுப்பட்டிருந்த/ இருக்கின்ற சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுக்கு குறித்த ஓய்வூதியம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | எனவே 2015.04.23 ஆம் திகதிக்கு முன்பு ஓய்வு பெற்ற இறந்த மற்றும் அங்கவீனமுற்ற சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுக்காக ஓய்வூதியம் வழங்குவது தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன. உரியவர்களுடன் கலந்துரையாடி குறித்த சலுகைகள் வழங்கப்படவுள்ளன. |
| 12 | சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு ஊழியர்களை சேர்துத்துக்கொள்ளும் ஏற்பாடுகள். | இது தொடர்பாக ஊதியம் மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழுவிற்கு உரிய பதவி உயர்வு ஒழுங்கு முறையினை அமைத்து அனுமதி பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | |
| 13 | ரக்னா லங்கா நிறுவனத்தை நிறைவு செய்தல். | 2016.12.15 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் படி ரக்னா லங்கா நிறுவனத்தை நிறைவு செய்தற்கான அனுமதி கிடைக்கப்பெற்றது | இச்சந்தர்ப்பத்தில் ரக்னா லங்கா நிறுவனத்தை நிறைவு செய்தல் பொறுத்தமானது அல்ல என சட்டமா அதிபரினால் ஆலோசனை வழங்கப்பட்டதோடு அது தொடர்பில் மீண்டும் அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டது |
| 14 | ரக்னா லங்கா நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் | 1300 க்கு மேற்பட்ட நிலம் மற்றும் கடற் பாதுாகப்பு உத்தியோத்தர்கள் சேவைப் புரிந்ததோடு கடற் பாதுகாவளர்களை இலங்கை கடற்படைக்கும் நிலப் பாதுகாவளர்களை சிவில் பாதுகாப்பு திணைக்களத்துடன் அல்லது SLRDC க்கும் இணைத்துக் கொள்வதற்கு கலந்தாலோசிக்கப்படுகின்றது | |
| 15 | கடற் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்தல். | கடற் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக நிறுவனமொன்றினை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | |

6.2 அட்டவணை: தற்பாதுகதப்பு /சொத்துக்களைப் பாதுகாக்க வழங்கப்பட்டுள்ள கைத்துப்பாக்கி/ரிவால்வர்

# 7. நிதிப் பிரிவு

## 7.1 மேலோட்டமான பார்வை

பாதுகாப்பு அமைச்சின் கணக்கு பிரிவின் கீழ் இயங்கும் உப பிரிவுகள்

- கொள்வனவு பிரிவு
- கொடுப்பனவு பிரிவு
- நிதிப் பிரிவ
- கடன் பிரிவு
- சம்பள பிரிவு

அதற்கு இனங்க கணக்கு பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்

- அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் திணைக்களங்களின் நடவடிக்கை செயற்பாடுகளும் மற்றும் கருத்திட்டங்களுக்காக கொள்வனவு செயற்பாடுகள் திட்டமிடல் கண்காணிப்பு, கொள்வனவு அனுமதி மற்றும் ஒப்பந்த நிர்வாக செயற்பாடுகள்
- ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீடு மற்றும் மேலதிக மதிப்பீடுகள் தயாரித்தல்
- வருடாந்த முன் தேவைகள் நிமித்தம் திறைச்சேரிக்கு முன்வைத்தல், திறைசேரியின் மாதாந்த முன் தேவை கணக்கு பிரிவு திறைசேரி கணக்குடன் ஒப்பபிடல்
- மாதாந்த சாரம்ச அறிக்கை தயாரித்த திறைசேரிக்கு சமர்பித்தல் அமைச்சின் கணக்கு திறைச்சேரி கணக்குடன் ஒப்பிடல்
- ஒதுக்கீட்டு கணக்கு தயாரித்தல்
- வெடிப்பொருள் மற்றும் தீ ஆயுதங்களின் வருவாய் கணக்கு தயாரித்தல் (1003/07/05 கணக்கு)
- அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களுக்கு உத்தியோக பூர்வ வங்கி கணக்கு ஆரபித்தல். மற்றும் திருத்தங்கள் தொடர்பாக திறைச்சேரி மற்றும் வங்கியுடன் கருத்து பரிமாற்றம்
- சொத்து கொள்வனவு செய்வதற்காக கொடுப்பனவுகள்
- ஒதுக்கீடு ஒதுக்குதல், மேலதிக ஒதுக்கீட்டை கோரல் மற்றும் நிதி ஒதுக்கீடு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு மாற்றீடு செய்தல்
- தேசிய பாதுகாப்பு நிதியத்துக்கு சம்மதப்பட்ட நடவடிக்கை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்
- அபிவெனுவேன் அபி நிதியத்துக்கு கிடைக்கும் நன்கொடைகள் மற்றும் ஏனைய வருவாய் சேகரிப்பு, கணக்கில் இடல், வீட்டு திட்டத்திற்காக பயனுள்ள வகையில் மேற்கொள்ளல்

## 7.2 2016 ஆம் ஆண்டு செயலாற்றுகை

2016 வரவு செலவு திட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சிக்கு மீண்டு வரும் செலவினத்திற்காக ரூபா 5,893 மில்லியன் ஒதுக்கீட்டு அளவு மற்றும் மூலதன செலவுக்காக ரூபா 11,521 மில்லியன் ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டு கொடுக்கப்பட்டள்ளது. அதற்கு இனங்க 2016.12.31 திகதிக்கு பாதுகாப்பு அமைச்சின் நிதி முன்னேற்றம் பின்வருமாறு.

| செலவு | 2016 ஒதுக்கீடு | 2016.12.31 திகதிக்கு செலவு | % |
|---|---|---|---|
| மீண்டு வரும் | 5,899,762,000 | 3,302,628,817 | 56 |
| மூலதனம் | 11,576,635,000 | 3,470,429,594 | 30 |
| மொத்தம் | 17,476,397,000 | 3,979,191.18 | 38 |

7.1 அட்டவணை : பாதுகாப்பு அமைச்சின் நிதி முன்னேற்றம்

### 7.2.1 கொடுப்பனவு பிரிவினால் மேற்கொள்ளும் நடவடிக்ககைகள் மற்றும் 2016.12.31 திகதி வரைமுன்னேற்றம்

இவ் அமைச்சின் கீழ் உள்ள பின்வரும் நிறுவனங்களுக்கு சம்பந்தப்பட்ட வவ்சர்

- பத்திர கொடுப்பனவு பிரிவுக்கு சமர்பித்தல்
- அமைச்சின் நிர்வாக சபை
- அமைச்சின் நிர்வாக மற்றும் நிர்வாக சபை
- அரச வேவு சேவை
- பாதுகாப்பு நிறைவேற்று அதிகாரி அலுவலகம்
- அபிவிருத்தி மற்றும் ஆய்வுகள் நிறுவனம்
- ஊடக மத்திய நிலையம்

2016..01.01 திகதி தொடக்கம் 2016.12.31 திகதி வரை கொடுப்பனவு பிரிவுக்கு வவ்சர் பத்திரம் 11300 அளவு மட்டும் கிடைக்க பெற்றுள்ளது. இவ் வவ்சர் பத்திரம் அனைத்துக்குமாக கொடுப்பனவு வழங்க பட்டுள்ளது. 2016 வருடம் கொடுப்பனவு பிரிவுக்கு கிடைக்கபெற்ற வவ்சர் தொடர்பாக குறிப்பிட்ட கால வரையரையில். கொடுப்பனவ பிரிவின் நடவடிக்கை பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டது

- கொடுப்பனவு பிரிவுக்கு கிடைக்கும் அனைத்து வவ்சர் பத்திரங்கள் கனணியில் தரவு பதியப்பட்டு கொடுப்பனவின் பின் அதற்கான காசோலை பத்திர இலக்கம் கணனியில் பதியப்பட்டுள்ளது.

- அமைச்சினால் வெளி நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் காசோலை பத்திரம் 100 வீதம் அச்சிடப்பட்டு பெற்று கொடுப்பதற்காக முடிந்ததால் மிகவும் தெளிவாக நிறுவனம் தொடர்பாக நம்பிக்கை மிகவும் உருதிப்படுத்தப்பட்டுள்ளது.
- அதற்கு மேலாக மேலதிகமான நிறுவனம் இவர்களுடைய கணக்குக்க வெளியில் சிலிப் கொடுப்பனவு முறையில் கொடுப்பனவு செய்வதினால் மிகவும் பயன் உறுதியாக காணப்படுகின்றது.
- குறிப்பிட்ட அளவு ஒதுக்கீடு இன்மையால் 2016 வருடத்திற்கு சம்பந்தப்பட்ட கொடுப்பனவு ரூபா. 25,757,874.53 அளவை 2017 வருடத்திற்குள் கொடுப்பனவு மேற்கொள்ளல்.

## 7.2.2 கணக்கு பிரிவினால் மேற்கொள்ளப்படும் கடமைகள் மற்றும் 2016.12.31 திகதி முன்னேற்றம்

வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டு திட்டம் மற்றும் முழுமையான மதிப்பீடு தயாரித்தல்.

- வருடாந்த ஒதுக்கப்பட்ட நிதி தேவைக்காக திறைசேரிக்கு முன்வைத்து அனுமதி பெற்றுக்கொண்டு மாதாந்தம் திறைசேரியில் ஒதுக்கீட்டு நிதியை பெற்றுக்கொள்ளல் மற்றும் கணக்கு பகுதிக்கு ஒதுக்கீட்டு நிதியை விலக்கள்
- மாதாந்தம் ஒன்றினைந்த கணக்கு சாரம்சத்தை தயாரித்து திறைசேரிக்கு சமர்பித்தல் மற்றும் அமைச்சின் கணக்கு, திறைச்சேரி கணக்குடன் ஒப்பிடல்.
- ஒதுக்கீட்டு கணக்கு தயாரித்தல்
- வெடிப்பொருள் மற்றும் தீ ஆயுதங்கள் அனுமதி பத்திரம் (1003.'.07.'.05.'. கணக்கு) தயாரித்தல்
- அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள திணைக்களங்கள், நிறுவனங்களுக்கு தேவையான மேலதிக ஒதுக்கீட்டை பெற்றுக்கொள்ளல், ஒதுக்கீட்டை விலக்குதல் மற்றும் மாற்றீடு செய்தல்
- 2016 வருடத்தில் கீழ் குறிபிட்ட அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு நிதி முகாமைத்துவ சார்ந்த நடவடிக்கை மேற்கொள்ளல்.
  - பாதுகாப்பு தலைமையகம நிர்மாண பணி திட்டம்
  - மூலோபாய பாதுகாப்பு தொடர்பாடல் திட்டம்
  - தனிநபர் அடையாள செயலாளர் அலுவலகம்
- அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களுக்க உத்தியோக பூர்வ வங்கி கணக்க ஆரபித்தல், மூடுதல் மற்றும் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளல் போன்றவற்றுக்கு சம்பந்தப்பட்ட வங்கி மற்றும் திறைசேரியுடன் தொலைதொடர்பாடல் மேற்கொள்ளல்
- பாதுகாப்பு நிதியத்துக்கு சம்பந்தப்பட்ட நடவடிக்கை மேற்கொள்ளல்

| | 2015 வருடம் ரூபா | | 2016 வருடம் டிசம்பர் 31 திகதிக்கு ரூபா | |
|---|---|---|---|---|
| | ஒப்புதல் முற்பண எல்லை | ஒதுக்கப்பட்ட நிதி வரவு | ஒப்புதல் முற்பண எல்லை | ஒதுக்கப்பட்ட நிதி வரவு |
| மீண்டுவரும் | 2,073.32 | 1,567.53 | 4,589.09 | 1,974.39 |
| மூலதனம் | 10,352.25 | 2,737.43 | 8,703.69 | 4,875.95 |
| அ.அ.மு.பீ.கணக்கு | 47.48 | 45.16 | 50.0 | 32.0 |

7.2. அட்டவணை 2016 ஆண்டிற்குள் முற்பண எல்லை

| வருடம் | முதிப்பீட்டு ரூபா (மில்லியன்) | ஊண்மையான வருவாய் ரூபா (மில்லியன்) |
|---|---|---|
| 2011 | 12 | 10.088 |
| 2012 | 12.25 | 10.08 |
| 2013 | 12.25 | 11.871 |
| 2014 | 12.5 | 12.88 |
| 2015 | 12.5 | 12.96 |
| 2016 | 12.75 | 13.73 |

7.3 அட்டவணை வெடிப்பொருட்கள் மற்றும் தீ ஆயுதங்களுக்கான உத்தரவுப்பத்திரம் (1003/07/03/கணக்கு)

### 7.2.3 கொள்வனவு பரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மற்றும் 2016.12.31 திகதிக்கு முன்னேற்றம்

முப்படைகள் மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் அனைத்து திணைக்களங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்கு தொடர்புடைய கொள்வனவு நடவடிக்கை இவ் பிரிவினால் மேற்கொள்ளப்படும். இதன் கீழ் முப்படைகளுக்கு தொடர்புடைய ரூபா 200 மில்லியன் மேலான பெருமதியுடைய கொள்வனவு நடவடிக்கை. ஆமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவு குழு- (ளுஊயுீஊ) மற்றும் அமைச்சின் கொள்வனவு செயற்பாடு (ஆீஊ) இவ் பிரிவினால் மேற்கொள்ளப்படும். சம்பந்தப்பட்ட கொள்வனவு தொடர்பாக அனைத்து செயற்பாடுகளும் இவ் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு இனங்க இவ் கால வரையரையில் கீழ் குறிப்பிட்ட கொள்வனவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

| இலக்கம் | நிறுவனம் | கொள்வனவு நிலை | கொள்வனவு அளவு | பெருமதி ரூபா மிலயன் | வருடத்தினுள் வழங்கப்பட்ட அளவு |
|---|---|---|---|---|---|
| 01 | இலங்கை இராணுவம் | SCAPC | 04 | 2,748 | 03 |
| 02 | இலங்கை விமானப்படை | SCAPC | 03 | 388 | 01 |
| 03 | பாதுகாப்பு தலைமையகம் நிர்மானம் | SCAPC | 05 | 1,769 | 01 |
| 04 | அரச வேவு சேவை | SCAPC | 01 | 265 | 01 |
| 05 | பாதுகாப்பு தலைமையகம் நிர்மானம் | MPC | 02 | 120 | 02 |
| 06 | இலங்கை விமானப்படை | MPC | 03 | 402 | 02 |
| 07 | பாதுகாப்பு அமைச்சு | MPC | 169 | 321.5 | 169 |

7.4 அட்டவணை பெறுகை நடவடிக்கைகள்- தேசிய நிதியம்

| இலக்கம் | நிறுவனம் | கொள்வனவு நிலை | கொள்வனவு அளவு | பெருமதி ரூபா மில்லியன் | வருடத்தினுள் வழங்கப்பட்ட அளவு |
|---|---|---|---|---|---|
| 01 | இலங்கை இராணுவம் | SCAPC | 01 | 1,176 | - |
| 02 | இலங்கை கடற்படை | SCAPC | 01 | 8,184 | - |
| 03 | இலங்கை விமானப்படை | SCAPC | 03 | 874 | 01 |
| 04 | இலங்கை விமானப்படை – ருCே சமாதான நடவடிக்கை | SCAPC | 11 | 11,150 | 03 |

7.5 அட்டவணைஇந்தியா மற்றும் ஏனைய கடன் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைகள

#### 7.2.3.1 நி.ஒ. அனுமதியை பெற்றுகொடுத்தல்

இதன் கீழ் நி.ஒ.136 அனுமதி பெற்றுக்கொடுத்தல். இவ் கால வரையரையயில் கீழ் குறிப்பிட்டவாரு அனுமதி பெற்று கொடுக்கப்பட்டது.

| இலக்கம் | நிறுவனங்கள் | வழங்கப்பட்ட அனுமதியின் அளவு |
|---|---|---|
| 01 | இலங்கை இராணுவம் | 88 |
| 02 | இலங்கை கடற்படை | 14 |
| 03 | அரச வேவு சேவை | 18 |

7.6 அட்டவணை நி.ஒ அனுமதி வழங்கல்

### 7.2.3.2 கடன் கடிதங்களுக்காக ஒப்புதல் பெற்றகொடுத்தல்

இவ் கால வரையரையில் கீழ் குறிப்பிட்டவாரு கடன் கடிதங்களுக்காக ஒப்புதல் பெற்றுக்கொடுத்தல் மேற்கொள்ளப்பட்டது

| இலக்கம் | நிறுவனங்கள் | அனுமதிவழங்கப்பட்ட அளவு |
|---|---|---|
| 01 | இலங்கை இராணுவம | 13 |
| 02 | இலங்கை கடற்படை | 59 |
| 03 | இலங்கை விமானப்படை | 34 |
| 04 | பாதுகாப்பு தலைமையக நிர்மானம் | 09 |

7.7 அட்டவணை: கடண் கடிதத்திற்காக அனுமதி அளித்தல்

இதற்கு மேலாக முப்படைகளுக்கு சம்பந்தப்பட்ட வாகனம் வாடகை முறை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் ஊநீநுஊ ஒப்புதல் பெற்றுக்கொடுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

## 7.2.4 சம்பள பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மற்றும் 2016.12.31 திகதிக்கு மேம்பாடு

அமைச்சின் அனைத்து உத்தியோகத்தனர், அரச வேவு சேவை. அடங்களாக அமைச்சுக்க ஒதுக்கப்பட்ட அனைத்து செயற்திட்டங்களுக்கும் சம்பளம் தயாரிக்கப்பட்டுதல், மேலதிக நேர கொடுப்பனவு வழங்கள், பிரயாண செலவ (தேசிய மற்றும் வெளிநாட்டு) கொடுப்பனவுகளை வழங்கள்.

மேற்கொள்ளல் மற்றும் இதற்கு சம்பந்தப்பட்ட ஆவனங்களை விரைவாக தயாரித்து ஓய்வூதிய திணைக்களத்திடம் சமர்பித்தல்.

- சம்பள படிவம் அனுப்புவதற்கு பதிலாக சிலிப் முறையின் கீழ் சம்பந்தப்பட்ட வங்கிக்கு செலுத்துவதால் குறிப்பிட்ட தினத்தில் சம்பளத்தை பெற்றுக்கௌக் கூடியதாக அமையும்
- ஆமைச்சு அடங்களாக இதன் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களின் அதிகாரிகளின் சம்பள அதிகரிப்பு, அ.நி.சு 03.ஂ.2016 ஏற்ப அமைச்சின் உத்தியோகத்தினரின் சம்பளம் திருத்தியமைக்கப்படல் சம்பளம் அதிகரிப்பு, மற்றும் நிலுவை சம்பளங்களை வழங்குதல்.

## 7.2.5 கடன் முற்கொடுப்பனவு பிரிவினால் மேற் கொள்ளப்படும் செயற்பாடுகள் மற்றும் 2016.12.31 திகதியின் முன்னேற்றம்

அரச உத்தியோகத்தரின் நல்வாழ்வுக்காக அரசினால் சலுகை வட்டி முறையின் கீழ் இவ் அமைச்சு மற்றும் அரச வேவ சேவை, இராஜங்க பாதுகாப்பு அமைச்சு, தேசிய மாணவருக்கான படையணி, மற்றும் மொழிப்பயிற்சி மத்திய நிலையங்களில் சேவையில் உள்ள அதிகாரிகளுக்காக கடன் வசதி பெற்றுக்கொடுத்தல் மற்றும் அதற்காக தேவையான வசதிகளை பெற்றுக்கொடுத்தல்.

2016 வருத்திற்கான ஒதுக்கீட்டு சட்டத்தின் முன்கொடுப்பனவு “பீ” கணக்குக்காக கீழ்’ குறிப்பிடப்பட்ட அளவுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

| வரம்பு.ஂஉண்மை ஒதுக்கீட்டு மதிப்பு | அதிகபட்ச செலவு வரம்பு | கிடைக்கப்பெற்ற குறைந்தப்பட்ச வரம்பு | பற்று மீதியின் உச்ச வரம்பு |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டு சட்டத்தின் அதிகார வழங்கல் வரம்பு 2016 | 50 | 35 | 275 |
| ஒதுக்கீட்டு சட்டத்தின் அதிகார வழங்கல் வரம்பு 2017 | 60 | 45 | 275 |
| 2016.01.01 தொடக்கம் 2016.08.31 உண்மையான ஒதுக்கீட்டு வரம்பு | 40 | 30 | 150 |
| 2016.01.01 தொடக்கம் 2016.12.31 உண்மையான மதிப்பு | 56 | 47 | 139 |

7.8 அட்டவணை 2016 வருத்திற்கான “பீ” கணக்கு வரம்பு

- 2016 ஓய்வு பெற்ற அதிகாரிகள் 32 ஓய்வூதிய கொடுப்பனவு வழங்க நடவடிக்கை மேற் கொள்ளல் மற்றும் ஓய்வூதிய சம்பளம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை

அரச உத்தியோகத்தினரின் நலன்புரிக்காக இவ் பிரிவினால் 2016 வருடத்தில் மேல் குறிப்பிட்ட வரம்பின் கீழ் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்காக அரசின் ஒதுக்கீட்டில் கீழ் பெற்று கொடுக்கப்பட்ட கடன் தொடர்பான சாரம்சம் பின் வரும்மாறு.

| கடன் வகை | அரச வேவு சேவை அதிகாரிகளுக்காக(ரு) | | ஆமைச்சின் அதிகாரிகளுக்காக(ரு) | | இராஜங்க அமைச்சு அதிகரிகளக்காக(ரு) | | மாணவா படையணிக்காக (ரு) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| காலம் | 2016.01.01-2016.08.31 | 2016.09.01-2016.12.31 | 2016.01.01-2016.08.31 | 2016.09.01-2016.012.31 | 2016.01.01-2016.08.31 | 2016.09.01-2016.12.31 | 2016.01.01-2016.08.31 | 2016.09.01 - 2016.12.31 |
| விசேட முற்கொடுப்பனவு | 2.5 | - | 0.32 | - | 0.012 | - | 0.012 | - |
| விழா முன்கொடுப்பனவு | 12.0 | 0.25 | 2.0 | 0.091 | 0.25 | 0.02 | 0.8 | - |
| ஆபத்து கடன் | 10.4 | 7.1 | 8.9 | 5.4 | 1.6 | 0.094 | 1.3 | 2.2 |
| மோ.வண்டி கடன் | - | - | 0.072 | 0.006 | - | - | - | - |
| கடன் மீட்பு கடன் | - | 0.015 | 0.030 | - | - | - | - | - |
| மொத்தம் | 24.9 | 7.365 | 11.322 | 5.497 | 1.862 | 0.114 | 2.112 | 2.2 |

7.9 அட்டவணை வழங்கப்பட்ட கடண் தொகை

- இதற்கு அமைய 2016.01.01 திகதி தொடக்கம் 2016.12.31 வருடத்தினல் மேல் குறிப்பிடப்பட்ட அதிகாரிகளின் சுப நிகழ்வுகளுக்காக கடனாக பெற்றுக்கொடுத்த முழு கடன் தொகை ரூபா. 56,230,313 ஆகும்.
- 2016.01.01 திகதி தொடக்கம் 2016.12.31 திகதி வரை வர்தக வங்கிகளுக்கு கடன் பெற்று கொடுப்பது தொடர்பாக அனுப்பிவைக்கப்பட்ட விண்னப்ப படிவம் சம்பந்தமாக விண்னப்படிவம் 30 ஆகும்.
- மேல் குறிப்பிட்ட கால வரையரைக்கான அரச அதிகாரிகளின் முன் கொடுப்பனவு கணக்கின் புதிய கடன் வழங்கள், மேம்படுத்தப்பட்ட மற்றும் பாரமரிக்கப்பட்ட வருகின்றன.
- நி.சு.506 (டீ) அமைவாக 2016.12.31 திகதிக்கு அரச முன்கொடுப்பனவு “பீ” கணக்கின் உள்ளவாறு 2017.03.31 திகதி கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

### 7.2.6 பொருட்கள் மற்றும் விநியோக பிரிவினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

- பாதுகாப்பு அமைச்சின் நோக்கம் மற்றும் குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்ள ஒழுங்கு விதிகள் கட்டளைகளின் சட்டத்திற்கு அமைய பொருளாதார அடிப்படையில் திறனாக பொருட்கள் கொள்வனவு மற்றும் கலஞ்சியப்படுத்தல், சம்பந்தப்பட்ட பிரிவுக்கு ஒப்பபடைப்பு மற்றும் ஆவணப்படுத்தல்.
- வருடாந்த விநியோகத்தினா் பதிவு செய்தல் ஊடாக இவ் அமைச்சுக்கு மற்றும் இதன் கீழ் உள்ள அனைத்து திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தேவையான பொருட்கள் கொள்வனவு செய்ய வசதி ஏற்படுத்தல் மற்றும் வழிக்காட்டல்.
- வருடாந்த பொருட்கள் ஆய்வு நடவடிக்கை மற்றும் பொருற்கள் அகற்றல் நடவடிக்கை மேற்கொள்ளதல் ஊடாக இவ் அமைச்சு மற்றும் இதன் கீழ் செயற்பாடும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடைய பொருட்களின் தன்மையை பாதுகாத்தல், தேவையில்லா பொருட்களை அகற்றல்.
- இவ் அமைச்சு மற்றும் இதன் கீழ் செயற்படும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் சொத்துக்களுக்கு மற்றும் பொருப்பாக்கப்பட்டுள்ள சொத்துக்களுக்கு சேதம் தொடர்பாக நி.சு 102 முறைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல் அதற்கு இனங்க நி.சு 104 (3) பிரகாரம் விரைவான ஆரம்ப அறிக்கை மற்றும் ஆய்வு சபை அறிக்கை கோரப்பட்டு அதற்கு பொருப்பாக்கப்பட்டவரிடம் இருந்து நஷ்டம் அறவிடுவதன் ஊடாக அரசின் நஷ்டத்தை குறைத்தால்.
- நிலையான சொத்து முகாமை அமைப்பின் ஊடாக அமைச்க்கு உரித்தான சொத்துக்களை முகாமைத்தவம் செய்தல்.
- நுகர்வு பொருட்கள் விநியோகம் மற்றும் அட்டவணைப்படுத்தல் தொடர்பாக நடவடிக்கை முறையை மேற்கொள்ளல்.
- நி.சு 115 உரித்தின் கீழ் இவ் அமைச்சு மற்றும் இதன் கீழ் உள்ள நிறவனங்கள் மற்றும் திணைக்களங்களின் கால தாமதமான கொடுப்பனவுகள் தொடர்பாக ஆய்வு செய்து பார்த்து அவ் கொடுப்பனவுகளை பிரச்சினை இன்றி தீர்தலின் ஊடாக அரசின் வெளி தலையீடுகளை குறைத்தல்.

- நி.சு 835 உரித்தின் கீழ் இவ் அமைச்சு இதன் கீழ் செயற்படும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் தேவையான வீடுகளை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ள சம்பந்தப்பட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் குத்தகை வழங்களுக்காக அனமதியை பெற்றக்கொடுத்தல்.
- நி.ஒ 855 உரித்தின் கீழ் இவ் அமைச்சு இதன் கீழ் இயங்கும் திணைக்களம் மற்றும் நிறுவனங்களின் தேவைகளை கருத்தில் கொண்டு அதற்கான பொருத்தமான முறையில்
- செய்தி தாள்கள் கொள்வனவு செய்ய தேவையான அனுமதியை பெற்றுக்கொடுத்தல்.
- ரூபா இரண்டு லச்சத்திற்கு மேலான மதிப்பீடப்பட்ட வகனம் மற்றும் அயந்திர உபகரணங்கள் புதுபித்தலுக்கான கொள்வனவு வழிகாட்டியின் உரித்து 9.3.1 (ஆ) கீழ் அனுமதி பெற்றக்கொடுத்தல

## 7.3 ஏதிர்வரும் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் இலக்குகள

| | செய்ய எதிர்பார்க்கப்படும் பணிகள் | நோக்கம் | ஏதிர்பாக்கும் இலக்கு |
|---|---|---|---|
| 01 | விநியோகத்தனர் பதிவு செய்தல் மற்றும்விலக்கல் அட்டவணைப் படுத்தல் | பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்னளுக்கும் கொள்வனவு செயற்பாடுகளுக்கு தேவையான வசதிகளை தயாரித்தல் | ரூபா 40 மில்லியனுக்கு அதிகமான வருவாய் எதிர்பார்ப்பு |
| 02 | கோள்வனவ செயற்பாடுகள் | அலுவலக பகுதி மற்றம் வெளி நிறுவனத்தில் கடமைகளை நிறைவேற்ற தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கள் | திறமையான கொள்வனவை பெற்றுக்கொடுத்தல் |
| 03 | பொருட்கள் விநியோகம்,களஞ்சியப்படுத்தல் | திறமையான மற்றும் பயனுள்ள முறையில் பொருற்கள் விநியோகம், கொள்வனவு மற்றும் களஞ்சியப்படுத்தல் | விரயம் மற்றும் துஷ்பிரயோகம் குறைத்துகொள்ளல் மற்றும் அட்டவணைப்படுத்தல் |
| 04 | பொருட்கள் ஆய்வு, விலக்கல் மதிப்பீடு செய்தல் மற்றம் ஏலம் விடல், பரதான பொருட்கள் தொடர்பாக தேவையான தரவுகளை திறைச்சேரிக்கு பெற்றுக்கொடுத்தல் | அரசிற்கு உரித்தான பொருட்கள் பாதுகாப்பு, பாவனையில் ஒதுக்கப்பட்ட பொருட்களை தேவையான நிறுவனங்களுக்கு பெற்றகொடுத்தல் மற்றும ஏலம் இடல் பயண்படுத்த முடியாத பொருட்களை அழித்தல் | அரச சொத்துக்களை பாதுகாத்தல் முறையற்ற பாவனையை தடுத்தல், தெறிந்து கொள்ளல், அட்டவணைப்படுத்தல் மற்றும் அரசுக்க வரவாயை ஈட்டி கொடுத்தல் |
| 05 | காணமற்போன மற்றும் நஷ்டம் தொடர்பாக நி.ஒ விதிகளின் படி நடவடிக்கை மேற்கொள்ளல் | ஆரசின் சொத்துக்களக்க ஏற்படும் சேதம் தொடர்பாக பொருப்புடைய நபரை கண்டு பிடித்து அதற்கு ஏற்ப நஷ்யீட்டை அறவிடல் மற்றும் அவ்வாரற்ற சந்தர்ப்பத்தில் நி.ஒ. பிரகாரம் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளல் | அரச சொத்துக்களக்கு ஏற்படும் சேதங்களை குறைத்துகொள்ளல் |
| 06 | ஆயைா சொத்து முகாமை மூலம் நிலையான சொத்துக்களை முகாமை செய்தல் | ஆமைச்சினால் பெற்றக்கொள்ளப்பட்ட அசையா சொத்துக்களை தேவையான சந்தர்ப்பத்தில் தேவையான நிலையங்களக்கு பெற்று கொடுத்தல் இவைகளின் சரியானதை தெறிவு செய்வது மற்றும் உறுதி செய்தல் | அரச சொத்துகளை பாதுகாப்புடன் கையாளுதல் செய்வதற்கு பின் புலத்தை அமைத்தல் |
| 07 | நி.ஒ. 115 கீழ தாமதமான ரசீத்துக்களுக்கு தீர்வினை வழங்குதல் | தாமதமான கொடுப்பனவுகளுக்கான காரணத்தை தெளிவுப்படுத்தி கொள்ளல் | அரசின் வெளி கடமைகளை குறைத்துக்கொள்ளல் |
| 08 | வீட்ட வாடகை நி.ஒ 835 கீழ் | போதியவழங்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் கடமையை மேற்கொள்ளுதல் | குறைந்த ஒதுக்கீட்டின் பயனுள்ள முறையில் கடமை மேற்கொள்ளுதல் |
| 09 | சேய்தி தாள்கள் கொள்வனவு நி.ஒ.855 கீழ் | ஆதிகாரிகளுக்க தேவையான செய்தி தகவல்கள் மற்றும் செய்தி அறிந்துக்கொள் செய்தல் | முறையான முகாமையின் செய்தி தாள்களை பெற்று விநியோகம் செய்தல் |
| 10 | ரூபா இரண்டு லச்சத்திற்கு மேலான மதிப்பீடப்பட்ட வகனம் மற்றும் இயந்திர உபகரணங்கள் புதுபித்தலுக்கான கொள்வனவு வழிகாட்டியின் உரித்து 9.3.1 கீழ் அனுமதி பெற்றுக்கொடுத்தல். | வாகனம் இயந்திர உபகரணங்கள் பருதுபார்த்தல் முறையாக செய்ய வசதிகள் ஏற்படுத்தி கொடுத்தல் | குறைந்தளவான ஒதுக்கீட்டில் சம்பந்தப்பட்ட கடமை மேற்கொள்ளுதல் மற்றும் விரையத்தை குறைத்தல் |

7.10 அட்டவணை 2017 எதிர்பார்க்கப்படும் இலக்கு

# 8. உள்ளக கணக்காய்வு பிரிவு

## 8.1 மீள்நோக்கு

2016 ஆம் ஆண்டு உள்ளக கணக்காய்வு பிரிவின் செயலாற்றுகை அறிக்கை 2017 ஜனவரி 24 திகதிஇவ்வாண்டில்கீழ்வரும்உள்ளக கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

| நிறுவனம் | கணக்காய்வு பிரிவுகள் மற்றும் கணக்காய்வு மேற்கொண்ட திகதி |
|---|---|
| பாதுகாப்பு அமைச்சு | நிதிப் பிரிவு<br>களஞ்சியசாலை<br>செலுத்தற் பிரிவு<br>நிர்வாகப்பிரிவு (விடுமுறைப் பரிசீலனை)<br>சேவா வனிதா பிரிவு (நிதி பரிசீலனை)<br>நிர்வாகப்பிரிவு (தண்ணீர் பட்டியல், மின்சார பட்டியல், மற்றும் தொலைபேசி பட்டியல் செலுத்தலை பரிசீலனை செய்தல்<br>போக்குவரத்துப் பிரிவு<br>நிர்வாகப்பிரிவு (விடுமுறைப் பரிசீலனை)<br>விசேட கணக்காய்வு பரிசீலனை<br>அரச வெடிப்பொருட்கள் களஞ்சியசாலை (வெளிசர)<br>சிவில் பாதுகாப்பு திணைக்களம் அம்பாரை படை காரியாலயம்<br>சிவில் பாதுகாப்பு திணைக்களம் உஹன படை காரியாலயம் |
| தேசிய மாணவச் சிப்பாய்கள் படையணி | பிரதான காரியாலயம் (பெறுகைப் ,பிரிவு களஞ்சியசாலை, போக்குவரத்துப் பிரிவு) |
| பாதுகாப்பு அமைச்சு மற்றும் முப்படைத் தலைமையகங்கள் நிர்மாணிக்கும் கருத்திட்டம் (அகுரேகொட) | பெறுகைப் பிரிவு |
| ரக்னா பாதுகாப்பு லங்கா (தனியார்) நிறுவனம் | ரக்னா லங்கா கேட்டரிங் சர்விஸ் (2016.08.16) |
| இலங்கை கடற்படை | உணவு பெறுகைப் பிரிவு மற்றும் உணவுப் பொருட்கள் களஞ்சியசாலை |
| சந்தஹிரு சேய நிர்மாணக் கருத்திட்டம் | வருடாந்த கணக்கு |
| ஸ்ரீ ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் | வருடாந்த நிதி வெளிப்படுத்தல் |
| இலங்கை வான்படை | வழங்கல் மற்றும் போக்குவரத்துப் பிரிவு |
| பாதுகாப்பு சேவை கட்டளைகள் மற்றும் உயர் உத்தியோகத்தர் கல்வி | பெறுகைப் பிரிவு |
| கடற்கரையோர பாதுகாப்பு திணைக்களம் | செலுத்தப்பட்ட வவுசர்களை பரிசீலித்தல் |
| மிகிந்து செத் மெதுர | செலுத்தற் பிரிவு |
| படையினர் சேவை அதிகார சபை | பெறுகைப் பிரிவு |
| பாதுகாப்பு சேவை கல்லூரி | கணக்குப் பிரிவு மற்றும் நிர்வாகப்பிரிவு |

## 8.2 பிரச்சினைகளும் சவால்களும்

- றித்த நிறுவனங்களின் தகவல்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள்.
- உள்ளக கணக்காய்வு செயற்பாட்டில் போதியளவு பயிற்சியின்மை.
- உரிய பிரிவுகளுடன் ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பாடலில் சிரமங்கள்.
- நடைமுறையில் உள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள. இற்றைப்படுத்தப்படாமை.

## 8.3 எதிர்பார்க்கப்படும் முன்மொழிவுகள

- 2016 ஆம் ஆண்டின் இறுதி பருவ கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம் 2017 ஜனவரி மாதம் 24 ஆம் திகதி நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது

# 9. சர்வதேச உறவுகள் பிரிவு

## 9.1 மேலோட்டமான பார்வை

பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதியானது பாதுகாப்புச் செயலாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் இயங்குவதுடன், பாதுகாப்புச் செயலாளரின் வெளிநாட்டு உறவுடன் தொடர்புபட்ட சகல முக்கியமான அம்சங்களையும் கையாள்வது இதன் பணியாகும். இப்பகுதியானது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் வெளிநாட்டு உறவுகளுடன் தொடர்புபட்ட வேலைகளுக்கும் உதவி வழங்குகிறது. இப்பகுதியானது சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவிநிலையிலுள்ள இலங்கை வெளிநாட்டு சேவையைச் சேர்ந்த சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர் ஒருவரால் தலைமைதாங்கப்படுகிறது.

அமைச்சினது சர்வதேச உறவுகள் பகுதியானது பாதுகாப்புச் செயலாளருடனான கலந்தாய்வின்போது சர்வதேச பரிமாணங்களைக் கொண்டுள்ள தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய பிரச்சினைகள் மீதான பாதுகாப்புக் கொள்கை நிலைமைகளை வழங்குகிறது.

சர்வதேச உறவுகள் பகுதியானது வழக்கமாக பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது :

பாதுகாப்புடன் தொடர்புபட்டதாக வெளிநாடுகளிலிருந்து உள்வருகின்ற மற்றும் வெளிச்செல்கின்ற முக்கியமான அம்சங்களை ஒருங்கிணைத்தல்; வெளிநாட்டுப் பிரமுகர்களுடன் பாதுகாப்புச் செயலாளரின் சகல தொடர்பாடல்களையும் கையாளுதல்; வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் ஒருங்கிணைத்தலும் தேவையின் நிமித்தம் பாதுகாப்பு உள்ளீடுகளை வழங்குதலும்; பாதுகாப்புச் செயலாளரால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு விஜயங்களுக்குக் கொண்டுசெல்லும் பொருட்கள் / உரையாற்றும் விடயம் பற்றிய துணுக்குகள் / உரைகள் / நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றைத் தயாரித்தலும் அத்தகைய விஜயங்களில் எட்டப்படும் முடிவுகளை பின்பற்றுதலும்; அதிமேதகு சனாதிபதி, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் போன்றவர்களால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு விஜயங்களுக்கான பாதுகாப்பு உள்ளீடுகளைத் தயாரித்தல்; வெளிநாடுகளுடன் ஏற்படுத்தப்படுகின்ற பாதுகாப்பு உடன்படிக்கைகள் / புரிந்துணர்வு ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்ட வேலைகளை ஒருங்கிணைத்தல்; ஐக்கிய நாடுகள் பொதுக் கூட்டத்தொடருக்கான (UNGA) பாதுகாப்பு உள்ளீடுகளை வழங்குதல்; ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் எழுகின்ற பாதுகாப்புடன் தொடர்புபட்ட பிரச்சினைகளுக்கான பிரதிபலிப்புகளை ஒருங்கிணைத்தல்; போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்களுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம் (UNODC) மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அலுவலகம் (UNHCR) ஆகியவற்றுடன் பாதுகாப்பு அமைச்சின் இடைவினைகளை ஒருங்கிணைத்தல்; பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை (ஐ.நா. பாதுகாப்புச் சபை ஒழுங்குவிதிகள் 1267, 1373, 1540, போன்றவை) மீதான தேசிய புலனாய்வுத் தலைமை அலுவலகத்திற்கு உதவுதல் மற்றும் ஐ.நா.பயங்கரவாத எதிர்ப்பு நிறைவேற்றுப் பணிப்பகத்துடன் இடைவினைகளை ஒருங்கிணைத்தல்; பாதுகாப்பு அமைச்சின் இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை நெறிப்படுத்தல்; SAARC, BIMSTEC, சங்கரி-லா உரையாடல், ASEAN பிராந்திய அமையம் (ARF), பாலி செயன்முறை போன்ற பிராந்திய ஒழுங்கமைப்புகளுடன் பாதுகாப்பு தொடர்பான விடயங்களை ஒருங்கிணைத்தல்; சீனா மற்றும் இந்தியாவுடனான வருடாந்த பாதுகாப்பு உரையாடல் வேலைகளை ஒருங்கிணைத்தல்; இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவுக்கிடையிலான முத்தரப்பு கடல் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை வேலைகளை ஒருங்கிணைத்தல்; ஆட்கடத்தல் மற்றும் ஏனைய சர்வதேசக் குற்றங்கள் மீதான அவுஸ்திரேலியா- இலங்கை இணைந்த பணிக் குழுவின் வேலைகளை ஒருங்கிணைத்தல்; ஆயுத வர்த்தகம் மற்றும் ஆயுதப் பரவலுடன் தொடர்புடைய சர்வதேச கலந்துரையாடல்கள் மீதான கொள்கை நிலையினைத் தயாரித்தல்; சர்வதேச ஒப்பந்தங்களுக்கான பாதுகாப்பு உள்ளீட்டைத் தயாரித்தல் மற்றும் மாநாடுகள் [உதாரணம் : சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச மாநாடு (ICCPR)] ; ஐ.நா. விசேட நடைமுறை ஆணை வைத்திருப்பவர்களால் வெளிப்படுத்தப்படும் கவலைகள் மீது பாதுகாப்புத் தாபனங்களிலிருந்து கிடைக்கும் பிரதிபலிப்புகளை ஒருங்கிணைத்தல்; பாதுகாப்புத் தாக்கங்களைக் கொண்டுள்ள வெளிநாட்டுக் கொள்கை விடயங்கள் மீதான அமைச்சரவை அவதானிப்புகளைத் தயாரித்தல்; சர்வதேச பரிமாணத்தைக் கொண்டுள்ள பாதுகாப்பு விடயங்கள் மீது அமைச்சரவைக்கான அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் குறிப்புகளைத் தயாரித்தல்; ஏனையவர்களுக்கு மத்தியில் வலிந்து மற்றும் கட்டாயப்படுத்தி காணாமலாக்கப்பட்டோர் மீதான ஐ.நா. பணிக் குழு (UN WGEID) மற்றும் நியாயத்திற்கு அப்பாற்பட்ட தடுப்புக்காவல் மீதான ஐ.நா. பணிக் குழு (UN WGAD) ஆகியவற்றுக்கான பிரதிபலிப்புகளின் தொகுப்பு மீதான தேசிய புலனாய்வுத் தலைமை அலுவலகத்தின் வேலைகளுக்கு உதவுதல்; லங்கா லொஜிஸ்டிக்

அன்ட் டெக்னோலொஜி லிமிட். (LLTL) வெளிநாட்டு அரசாங்கங்களுடனான தனது வேலைகள் தொடர்பாக விடுக்கும் கோரிக்கைக்கு உதவுதல்; மற்றும் வெளிப் பாதுகாப்புச் சூழல் மீதான பாதுகாப்பு அமைச்சின் கொள்கைத் திட்டமிடல் பிரிவுக்கு கொள்கை உள்ளீடுகளை வழங்குவதும் இருதரப்பு, பிராந்திய மற்றும் உலகளாவிய தந்திரோபாய அபிவிருத்திகளும்.

## 9.2 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முக்கிய விடயங்கள்

### ஐக்கிய அமெரிக்கா - இலங்கை பங்குடமை கலந்துரையாடல் (PD) – 2016 பெப்ரவரி 26, வாசிங்டன் டி.சி., அமெரிக்கா.

அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதியானது அமெரிகாவிலுள்ள வாசிங்டன் டி.சி. இல் 2016 பெப்ரவரி 26 இல் நடைபெற்ற ஐக்கிய அமெரிக்கா - இலங்கை பங்குடமை கலந்துரையாடலின் (PD) தொடக்க விழாவில் பொறி. கருணாசேன ஹெட்டியாராச்சியின் பங்குபற்றலை ஒருங்கிணைத்திருந்தது. பங்குடமைக் கலந்துரையாடலானது ஐக்கிய அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையேயான ஒத்துழைப்பின் ஒருங்கிணைப்பை நிரூபிப்பதுடன் வழமையான மற்றும் கட்டமைக்கப்பட்ட நிகழ்வின் ஊடாக பரந்த உணர்வினை மேலும் வலிமையானதாக்குவதற்கும் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கும் உதவுகிறது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு முயற்சிகளை வலுப்படுத்துவதற்கு இரு நாடுகளும் இணங்கியுள்ளன. எமது ஆயுதப் படைகளுக்கு குறிப்பாக கடற்படை, விமானப் படை மற்றும் கரையோர காவல் படை ஆகியவற்றுக்கு இந்தப் பரப்பில் இயல்திறனையும் ஆற்றலையும் கட்டியெழுப்பு வதற்கான தேவையை செயலாளர் அவர்கள் எடுத்துக் காட்டியிருந்தார்.

கூட்டத்தில், ஐ.நா. அமைதிகாக்கும் நடவடிக்கைகளை நோக்கிய கூடுதல் பங்களிப்புக்கு இலங்கை வழங்கிய உறுதிமொழியை அமெரிக்கா வரவேற்றிருந்தது. அத்துடன் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு தொடர்ச்சியாக ஆதரவளிப்பதாக ஐக்கிய அமெரிக்கா உறுதிமொழி வழங்கியது.

பரம்பலற்ற நோக்கங்களின் உதவியுடன் ஏற்றுமதிக் கட்டுப்பாடு மற்றும் தொடர்புடைய எல்லைப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒத்துழைப்பினை விரிவாக்குவதே பிரதிநிதித்துவத்தின் நோக்கமாகும். கூட்டத்தில், பாரிய பயங்கரவாத எதிர்ப்பும் புலனாய்வு ஒத்துழைப்பும் மற்றும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளல் அதேபோன்று அதிகரிக்கின்ற சர்வதேச அச்சுறுத்தல்கள் கருதி இயல்திறனைக் கட்டியெழுப்புதல் போன்றவற்றுக்கான தேவையை இரு நாடுகளும் அங்கீகரித்திருந்தன. இரு நாடுகளும் பணமோசடி, பயங்கரவாதிகளின் நிதியீட்டம் மற்றும் தீவிர வன்முறை போன்றவற்றுக்கு எதிராக தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்குவது என்ற தமது உறுதிமொழிகளை வழங்கியிருந்தன. திறந்த மற்றும் பாதுகாப்பான இணையவெளி ஒன்றை ஊக்குவிப்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை அங்கீகரித்தல், மற்றும் புடாபெஸ்ட் மாநாட்டிற்கான ஒரேயொரு தெற்காசிய நாட்டுத் தரப்பாக இலங்கையின் நிமிர்வு, இணையப் பாதுகாப்பு மற்றும் போர் இணையக் குற்றம் போன்றவற்றுக்கான சந்தர்ப்பங்களை ஆராய்வதற்கு இரு தரப்பும் இணங்கியுள்ளன.

### DEFEXPO 28-31 மார்ச் 2016, கோவா, இந்தியா






அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதியானது, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ ருவான் விஜேவர்த்தன மற்றும் 2016 மார்ச் 28 முதல் 31 வரை இந்தியாவில் நடைபெற்ற DEFEXPO இற்கான பிரதிநிதி ஆகியோரின் விஜயத்தை ஒருங்கிணைத்திருந்தது. பாதுகாப்புச் செயலாளர் பொறி. கருணாசேன ஹெட்டியாராச்சி அவர்களும் இராஜாங்க அமைச்சரின் விஜயத்தில் சேர்ந்துகொண்டார். DEFEXPO இந்தியா 2016 என்பது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் தரை, கடல் மற்றும் உள்வாரியான தாயகப் பாதுகாப்பு முறைமையின் ஒன்பதாவது கண்காட்சித் தொடராகும். 15 நாடுகளின் கூடாரங்களுடன் 32 நாடுகளைச் சேர்ந்த இருநூறுக்கும் மேற்பட்ட வெளிநாட்டுக் கம்பனிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டன. இது காட்சிப்படுத்துநர்களுக்கு தமது பிந்தைய தொழினுட்பவியல்கள் மற்றும் உற்பத்திகளை காட்சிப்படுத்துவதற்கான ஒரு தளத்தை வழங்கியிருந்ததுடன் பரஸ்பர நன்மைகளுக்கான சந்தையையும் வியாபாரச் சாத்தியக்கூறுகளுகளையும் ஆராய்வதற்கான வாய்ப்பையும் வழங்கியிருந்தது. கண்காட்சியை

ஒட்டிய இடத்தில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் இலங்கைப் பிரதிநிதி ஆகியோர் இந்திய பாதுகாப்பு அமைச்சர் கௌரவ மனோகர் பரிக்கர் மற்றும் இந்திய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ ராயோ இந்திரஜித் சிங் ஆகியோரை இருவேறு சந்தர்ப்பங்களில் சந்தித்திருந்தனர். இச்சந்திப்பின்போது இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பரஸ்பரம் தொடர்புடையதுமான விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டன. இதற்கு மேலதிகமாக, 2016 DEFEXPO இன் இன்னொரு பக்கத்தில் கொரிய பாதுகாப்பு கையகப்படுத்தல் அமைச்சர் சாங் மையோங்-ஜின் ஐயும் இராஜாங்க அமைச்சரும் பாதுகாப்புச் செயலாளரும் சந்தித்திருந்தனர். இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரின் விஜயத்தின்போது இலங்கை கடற்படைக்காகக் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற மேம்பட்ட கடலோர ரோந்துக் கப்பல் மீது செய்யப்படும் முன்னேற்றங்களை உறுதிசெய்வதற்காக கோவா கப்பல் கட்டுமிடத்தையும் பார்வையிட்டனர்.

பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதி இவ்விஜயத்தின் சகல விடயங்களையும் ஒருங்கிணைத்திருந்தது.

### மலேசியாவில் நடைபெற்ற 15 ஆவது பாதுகாப்புச் சேவைகள் ஆசிய கண்காட்சி மற்றும் மாநாடு - 18 - 21 ஏப்ரல் 2016

பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதியானது 2016 ஏப்ரல் 18 தொடக்கம் 21 வரை மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற 15 ஆவது பாதுகாப்பு சேவைகள் ஆசிய கண்காட்சி மற்றும் மாநாட்டில் (DSA) இராஜாங்க பாதுகாப்பு அமைச்சர் கௌரவ ருவான் விஜேவர்த்தனவினால் மேற்கொள்ளப்பட்ட பிரதிநிதித்துவப் பங்கேற்றலை ஒருங்கிணைத்திருந்தது. இந்நிகழ்வின் ஒரு பக்கத்தில் இராஜாங்க அமைச்சர் அவர்கள் மலேசியாவின் பாதுகாப்பு அமைச்சர் டரோ சேரி ஹிசம்முதீன் துன் ஹுசைன் அவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இக்கலந்துரையாடல் இரு நாடுகளினதும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நடைபெற்றது. பாதுகாப்புத் தலைமை அதிகாரி எயார் சீப் மார்ஷல் கோலித குணதிலக அவர்களும் இவ்விஜயத்தில் இணைந்து கொண்டிருந்தார். DSA ஆனது 1988 இல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து உலகின் சிறந்த ஐந்து பாதுகாப்பு கண்காட்சிகளில் ஒன்றாக வளர்ந்துள்ளதுடன் இது ஆசியாவின் மிகப்பெரிய கண்காட்சியுமாகும். 30 நாடுகளைச் சேர்ந்த தொழிற்றுறையில் முன்னணி வகிக்கும் கிட்டத்தட்ட அறுபது பேர் இவ்வருட நான்கு நாள் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

DCA 2016 உடன் இணைந்த விதத்தில் இராணுவத் தலைவர்களின் வட்டமேசைக் கலந்துரையாடல்கள் (ChART), புத்ரஜய அமையம், இணையப் பாதுகாப்பு அமையம், மனிதாபிமான உதவி மற்றும் இடர் மீட்பு (HADR) அமையம் மற்றும் இரசாயன உயிரியல் அணுகுண்டு வெடிப்புகள் - CBRNE அமையம் ஆகியன உள்ளிட்ட பல்வேறு செயலமர்வுகளும் மாநாடுகளும்கூட நடத்தப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதி இவ்விஜயத்தின் சகல விடயங்களையும் ஒருங்கிணைத்திருந்தது.

### 15 ஆவது IISS சங்கரி-லா கலந்துரையாடல்: ஆசிய பாதுகாப்பு உச்சிமாநாடு, 3-5 யூன் 2016, சிங்கப்பூர்

15ஆவது IISS சங்கரி-லா கலந்துரையாடல்: ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் முன்னோட்ட பாதுகாப்புத் தொடர்புகள் ஆசிய பாதுகாப்பு மாநாடு 2016 யூன் 3 தொடங்கம் 5 வரை சிங்கப்பூரில் நடைபெற்றது. இக்கலந்துரையாடல் பிராந்தியப் பாதுகாப்புக் கட்டமைப்பின் பிரதான கூறாக தன்னைத் தாபித்திருந்ததுடன் பிராந்தியம் மற்றும் உலக நாடுகளுக்கிடையிலிருந்து பாதுகாப்பு அமைச்சர்கள், தலைமைப் பாதுகாப்பு அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சர்களின் நிரந்தரத் தலைமைகள், புலனாய்வுத் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள், சிந்தனையாளர் குழாத்தின் கல்வியியலாளர்கள் மற்றும் பிரதிநிதிகள், ஆகியோருடன் இணைந்து முன்னோக்கிச் செல்கிறது. பிரதான உரையினை (ஓய்வுபெற்ற) ஜெனரல் சான்-ஓ-சா, தாய்லாந்தின் பிரதம மந்திரி அவர்கள் ஆற்றியிருந்தார். அவர் தனது உரையில், பிராந்திய ஒத்துழைப்பிற்கான வழிகாட்டல்கள் பற்றியும் எந்தவொருவரும் பின்னடையாது ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பதற்கான புதிய சமநிலை ஒன்றுக்கான தேவை பற்றியும் எடுத்தியம்பியிருந்தார். “ஆசியாவின் சிக்கலான பாதுகாப்புச் சவால்களை எதிர்கொள்ளல்” என்ற தொனிப்பொருளில் ஆரம்ப உரையை நிகழ்த்திய பாதுகாப்பிற்கான அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் டாக்டர். அஸ்ரன் காட்டர் அவர்கள் “கட்டமைக்கப்பட்ட பாதுகாப்பு வலையமைப்பு” ஒன்றினைத் தாபிப்பதன் ஊடாக ஆசிய பசுபிக் பிராந்தியம் “உயர்ச்சியும் செழிப்பும் வெற்றியும் அடையுமென அமெரிக்கா நம்புவதாகத் தெரிவித்திருந்தார். கலந்துரையாடலின் ஒரு மையப் புள்ளியாக இருந்த தென் சீனக் கடல் பிரச்சினைக்கு பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகளை கண்டறிவதற்கான தேவையை பல பிரதிநிதிகளும் மீண்டும் மீண்டும் கூறியிருந்தனர்.

பாதுகாப்புச் செயலாளர் பொறி. கருணாசேன ஹெட்டியாராச்சி அவர்கள் கலந்துரையாடலுக்கான இலங்கைப் பிரதிநிதிகளுக்குத் தலைமைதாங்கியிருந்தார். கலந்துரையாடலின்

மற்றொரு பக்கத்தில் கனேடிய தேசிய பாதுகாப்பு அமைச்சர் கௌரவ ஹர்ஜித் சிங் சஜ்ஜான், ஓய்வுபெற்ற கௌரவ மைக்கேல் பல்லோன் - ஐக்கிய இராச்சியத்தின் பாதுகாப்புக்கான இராஜாங்கச் செயலாளர், ரஷ்ய பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கௌரவ அனரொலி அன்டனோவ், சிங்கப்பூரின் நிரந்தரப் பாதுகாப்புச் செயலாளர் திரு. சாங் ஜெங் கிட் மற்றும் அமெரிக்க கடற்படை நடவடிக்கைகள் தலைவர் அட்மிரல் ஜோன் எம். ரிச்சட்சன், ஆகியோருடன் செயலாளர் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தார். இந்த இருதரப்புக் கலந்துரையாடல்கள் கடல்சார் பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் புலனாய்வுப் பரிமாற்றங்கள், பாதுகாப்புப் பெறுகைகள், பயிற்சி மற்றும் இயல்திறனைக் கட்டியெழுப்புவதற்கான உதவி மற்றும் பாதுகாப்பு அமையங்களில் பங்குபற்றுதல் போன்றவற்றின் மீதான குறிப்பிடத்தக்க வலியுறுத்தல்களுடனான நாடுகளின் அக்கறையுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்டவையாகும். செயலாளர் அவர்கள் 2015 சனவரி தொடக்கம் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலுள்ள காணிகளை விடுவித்தல் மற்றும் பாதுகாப்பு கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் போன்றவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது என்பதை சுருக்கமாகக் கூறியிருந்தார்.

கலந்துரையாடலின் மற்றுமொரு பக்கத்தில் பாதுகாப்புத் தலைமை அதிகாரி எயார் சீப் மார்ஷல் கே.ஏ. குணதிலககூட அவுஸ்திரேலிய பாதுகாப்புப் படைத் தலைவர் எயார் வைஸ் மார்ஷல் மார்க் பின்ஸ்கின் மற்றும் சிங்கப்பூர் பாதுகாப்புப் படைத் தலைவர் மேஜர் ஜெனரல் பெரி லிம் செங்ஜிவூவ் ஆகியோரைச் சந்தித்து பரஸ்பர அக்கறையுள்ள விடயங்கள் மீதான பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடியிருந்தார்.

சிங்கப்பூருக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மதிப்புக்குரிய நிமால் வீரரத்ன, எயார் சீப் மார்ஷல் கே.ஏ. குணதிலக, பாதுகாப்புத் தலைமை அதிகாரி ரியர் அட்மிரல் எஸ்.எஸ். ரணசிங்க, கடற்படையின் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் பி.ஏ. பெரேரா, இராணுவத்தின் பணிப்பாளர் நாயகம், விமானப் படையின் தளவாட வழங்கல்கள் பணிப்பாளர் எயார் வைஸ் மார்ஷல் டி.எல்.எஸ். டயஸ் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளர் (வெளிநாட்டு அலுவல்கள்) திருமதி. சசிகலா பிரேமவர்த்தன ஆகியோர் இலங்கைப் பிரதிநிதிகள் தரப்பில் கலந்துரையாடலுக்கான செயலாளருடன் சேர்ந்துகொண்டனர்.

பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதி இவ்விஜயத்தின் சகல விடயங்களையும் ஒருங்கிணைத்திருந்தது.

**SLNS சயுரலா இன் வெள்ளோட்டம் – 10 யூன் 2016, கோவா, இந்தியா**

பாதுகாப்புச் செயலாளர் பொறி. கருணாசேன ஹெட்டியாராச்சி அவர்கள் 2016 யூன் 10 ஆந் திகதி இந்தியாவிலுள்ள கோவா கப்பல் கட்டுதளத்தில் இலங்கை கடற்படைக் கப்பல் (SLNS) சயுரலா இன் வெள்ளோட்ட விழாவினை அலங்கரித்திருந்தார். கடற்படை கலாசாரத்தின்படி, பாதுகாப்பு அமைச்சின் சேவா வனிதா அலகின் (MoD SVU) தலைவர் திருமதி. வசந்தா குணவர்த்தன SLNS சயுரலா ஐ வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார். கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னகூட இவ்விழாவில் பிரசன்னமாகியிருந்தார். மேம்படுத்திய கடலோ ரோந்துக் கப்பல் (AOPV) SLNS சயுரலா வை பூர்த்தி செய்யும்போது சுமார் 74 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகியிருக்கும். AOPV யும்கூட உலங்குவானூர்தித் தளத்தைக் கொண்டிருந்ததுடன் 2350 தொன் கொள்ளளவைச் சுமந்து செல்லும் ஆற்றலையும் கொண்டிருந்தது. இக்கப்பல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 4500 கடல் மைல்கள் பயணஞ்செய்யும் திறனைக் கொண்டிருப்பதுடன் 18 அதிகாரிகள் மற்றும் 100 மாலுமிகள் வரை தங்கக்கூடிய இடத்தையும் கொண்டுள்ளது. இது 105 மீற்றர் நீளமும் 13.6 மீற்றர் அகலத்தையும் கொண்டது.

இந்திய பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள வானூர்தியியல் மற்றும் பாதுகாப்பு உற்பத்தி ஆகியவற்றின் இணைச் செயலாளரான சிறி சஞ்சய் பிரசாத், இந்தியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர், அதிமேதகு எசல வீரக்கோன் மற்றும் திருமதி வீரக்கோன், கடற்படைச் சேவை கொடி அதிகாரியும் கோவா பகுதி கட்டளையிடல் கொடி அதிகாரியுமான ரியர் அட்மிரல் மற்றும் திருமதி புனீட் குமார் பாகல், இந்தியக் கடற்படையின் முன்னாள் தளபதிகள், அட்மிரல் (ஓய்வுபெற்ற) அருண் பிரகாஷ் மற்றும் அட்மிரல் (ஓய்வுபெற்ற) சுரேஷ் மேதா, கோவா சிப்யார்ட் லிமிட்டெட்டின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் ரியர் அட்மிரல் மற்றும் திருமதி. சேகர் மிட்டல், இந்திய அரசாங்கத்தின் பிரமுகர்கள் மற்றும் விசேட விருந்தினர்கள், இந்திய மற்றும் இலங்கை கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இவ்விஜயத்திற்கான நிகழ்வுகளை இலங்கைக் கடற்படை ஒழுங்குசெய்திருந்ததுடன் அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதியானது பங்குபற்றல் மற்றும் ஏனைய தளவாட வழங்கல் ஒழுங்குகளின் ஒருங்கிணைப்புக்கு உதவியது.

**இலங்கையில் நிலைபேறான சமாதானம் மீதான செயலமர்வு: "சமாதானத்தை நிலைநிறுத்துவதில் காணப்படும் சவால்கள் மீதான பிரதிபலிப்பும் அமைச்சின் வகிபாகமும்", 9 - 10 யூன் 2016, பாதுகாப்பு கட்டளை சேவைகள் மற்றும் உத்தியோகத்தர் கல்லூரி, மாகோல தெற்கு**

பின்வரும் சிபாரிசுகள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, பாதுகாப்பு கட்டளைச் சேவை மற்றும் உத்தியோகத்தர் கல்லூரி (DSCSC) ஆகியவற்றுடன் இணைந்து பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதி, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, நியூயோக்கில் உள்ள அரசியல் அலுவல்களுக்கான ஐ.நா. அலுவலகம் ஆகியவற்றால் செய்யப்பட்டதுடன் மேலுள்ள கருப்பொருள் பற்றிய ஒரு செயலமர்வை கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகம் ஒழுங்கமைத்திருந்தது. இச்செயலமர்வின் நோக்கம் சிரேஷ்ட இலங்கை இராணுவ அதிகாரிகளுடன் முரண்பாட்டுக் காலப்பகுதி ஒன்றின் ஊடாகச் சென்று சமாதானத்திற்கு மாறிய வேறு நாடுகளின் இராணுவத்திடமிருந்து நிபுணத்துவ அனுபவங்களை பரிமாறிக்கொள்ளுதல் ஆகும்.

கைடோ அன்றீஸ் மதீஸ் - ஜேர்மனி (இராணுவ நிறுவகம், ஜேர்மனி), திரு. பிலிப் பர்னபாஸ் அபாகோ – ஐக்கிய இராச்சியம் - ஐ.நா. (வசதியளிப்பாளர்) வின் அரசியல் அலுவல்கள் (DPA) திணைக்களத்தின் சிரேஸ்ட இடையீட்டு ஆலோசகர்களின் தயார் நிலை அணியின் உறுப்பினர், திரு. பிரெண்டன்மக் அலிஸ்டர் - ஐக்கிய இராச்சியம் - ஐ.நா. (வசதியளிப்பவர்) வின் அரசியல் அலுவல்கள் (DPA) திணைக்களத்தின் சிரேஸ்ட இடையீட்டு ஆலோசகர்களின் தயார் நிலை அணியின் உறுப்பினர், திரு. பினோச் பஸ்நாயட், நேபாளம் (முன்னால் இராணுவ அதிகாரி), திரு. ஜவயர் மார்டின் உர்வினாபரடீஸ் / சிலி (முன்னாள் இராணுவ அதிகாரி), திரு. பீலிக்ஸ் அலெக்சான்டர் மேயர் - ரீயீசெக் / ஒஸ்ரியா (முன்னாள் இராணுவ அதிகாரி) மற்றும் திருமதி எலன் அல்ராடி, அரசியல் அலுவல்கள் திணைக்களம் - நியூயோர்க் உள்ளிட்ட உண்மை, நீதி, ஈடுசெய்தல் மற்றும் மறுவாழ்வுக்கு உத்தரவாதமளித்தல் என்பன மீதான விசேட பதிவாளர் திரு. பப்லோ டி கிரீப் இனால் ஐ.நா. அணி தலைமைதாங்கப்பட்டது.

ஏனைய நாடுகளின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு மேலதிகமாக, இச்செயலமர்வில் அரசாங்கத் தினால் எதிர்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுச் செயன்முறை மீதான விபரங்களைக்கூட பங்குபற்றுநர்கள் வழங்கியிருந்தனர்.

### ஆட்கடத்தல் மற்றும் ஏனைய சர்வதேச குற்றங்கள் மீதான இணைந்த பணிக்குழுவின் (JWG) 3 ஆவது கூட்டம்

ஆட்கடத்தல் மற்றும் ஏனைய சர்வதேச குற்றங்கள் மீதான இணைந்த பணிக்குழு 2016 யூன் 14 இல் பாதுகாப்பு அமைச்சில் சந்தித்திருந்தது. இணைந்த பணிக்குழு ஒன்றுகூடிய 3 ஆவது சந்தர்ப்பம் இதுவாகும். இது, ஆட்கடத்தல் மற்றும் ஏனைய சர்வதேச குற்றங்களுக்கு எதிராகப் போராடுவதை மையப்படுத்தி கட்டமைக்கப்பட்ட கலந்துரையாடல் ஒன்றை இயலச்செய்யும் பொருட்டு இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பின் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறக்கின்ற வகையில் தற்போதைய இரு நாட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்களினாலும் 2012 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அவுஸ்திரேலியாவை நோக்கி நெறிப்படுத்தப்பட்ட பல ஆட்கடத்தல் முயற்சிகளை வெற்றிகரமாகத் தடுப்பதற்காக தொடர்ச்சியான தகவல் மற்றும் புலனாய்வுகளைப் பகிர்வதற்கான முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கு இலங்கை அதிகாரிகளுக்கு முடிந்திருந்ததாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பொறி. கருணாசேன ஹெட்டியாராச்சி அவர்கள் தனது ஆரம்பக் குறிப்புரையில் தெரிவித்திருந்தார். JWG வலுவாக இருப்பதற்கான ஒத்துழைப்பை உருவாக்குவதற்கான அரசியல்சார் உறுதிமொழியையும் அதில் அவர் சேர்த்திருந்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான பணக்கார மற்றும் மக்களுக்கிடையிலான தொடர்புகளும் திடமான முதலீடும் மற்றும் தற்போதிருக்கும் வர்த்தகத்தின் சமத்துவத்தன்மை ஆகியன தொடர்பில் இரு நாடுகளுக்குமிடையிலான ஒப்பந்தத்தின் பரந்துபட்ட விடயங்கள் மீது இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் மேன்மைதங்கிய பிரைஸ் ஹட்ஸசன் உரையாற்றியிருந்தார். அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு மற்றும் தந்திரோபாயம் பற்றியும் பாதுகாப்புச் செயலாளருடன் இடம்பெற்ற பலதரப்பட்ட கலந்துரையாடல்களிலும் உயர்ஸ்தானிகரால் எடுத்துக்காட்டப்பட்டது.

அவுஸ்திரேலிய குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதிச் செயலாளர் (கொள்கை) திருமதி. ரஸல் நோபல், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (பாதுகாப்பு) திரு. எஸ். ஹெட்டியாராச்சி ஆகியோர் JWG கூட்டத்தின் இணைத் தலைவர்களாகும். அவுஸ்திரேலியாவின் வலுவான ஒரு பங்காளியாக பல ஆண்டுகளாக ஆட்கடத்தலுக்கு எதிராகப் போராடுவதில் விரிவான ஒத்துழைப்பை நல்கியதற்காக அவுஸ்திரேலியா இலங்கைக்கு நன்றியைத் தெரிவிப்பதாக பிரதிச் செயலாளர் குறிப்பிட்டிருந்தார். ஆட்கடத்தல் முயற்சிகள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல் மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பைக் விளக்கியதுடன் இரு நாடுகளும் அவை தொடர்பில் திருப்தியுடன் இருக்க முடியாது என்றும் தொடர்ச்சியாக அவதானத்துடன் இருக்க வேண்டும் என்பதையும் அவர் கூறியிருந்தார்.

புலனாய்வு, கொள்கை, கண்டறிதல், மனநிறைவின்மை மற்றும் மீள்வருகைகள், தந்திரோபாயத் தொடர்பாடல்கள் (பொதுமக்கள் விழிப்புணர்வு) மற்றும் அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியேற்றுவதற்கான பிரேரிக்கப்பட்ட துரிதமான பொறிமுறை ஆகிய பரப்புகளை உள்ளடக்கிய

ஆட்கடத்தலுக்கு எதிரான ஒத்துழைப்பை நிறைவேற்றுவதிலுள்ள பிரச்சினைகளின் வீச்செல்லை பற்றி ஆராயப்பட்டது; கடலில் சர்வதேச குற்றங்களுக்கு எதிராகப் போராடுதல் (கடற்கொள்ளை உள்ளிட்ட), தேடுதல் மற்றும் இடர்மீட்பு மற்றும் பாதுகாப்பான கடல் பயணம் ஆகியன உள்ளிட்ட ஏனைய கடல்சார் ஒத்துழைப்பு; ஆட்கடத்தல்காரர்களை விசாரணை செய்தல் மற்றும் குற்ற வழக்குத் தொடுத்தல், ஆட்கடத்தலுக்கு எதிரான சட்டத்தை வலுப்படுத்தலும் ஒத்திசைவாக்குவதும் என்பன போன்ற பரப்புகளில் சட்ட ஒத்துழைப்பு; பாலி செயன்முறை மற்றும் கொழும்பு RILON (பிராந்திய குடிவரவு தொடர்பு அலுவலர் வலையமைப்பு) செயன்முறை மீதான முன்னேற்றம் உள்ளிட்ட பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் எல்லை முகாமைத்துவ இயல்திறனை கட்டியெழுப்புதல் போன்ற குடிவரவு மற்றும் எல்லை முகாமைத்துவப் பிரச்சினைகள், எதிர்கால ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள். ஆட்கடத்தல் மற்றும் ஏனைய சர்வதேச குற்றங்கள் விடயம் தொடர்பில் முன்மொழியப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் மீதான கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

JWG இன் கீழ் செய்யப்பட்டிருந்த பரந்துபட்ட முன்னேற்றத்தை இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டிருந்ததுடன் எதிர்காலத்தில் வலுவான ஒத்துழைப்பினைத் தொடர்வதற்கும் சம்மதித்திருந்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதி இவ்விஜயத்தின் சகல விடயங்களையும் ஒருங்கிணைத்திருந்தது.

### 7 சியாங்சன் அமையம், பீஜிங், சீனா, 11-12 அக்டோபர் 2016

பீஜிங்கில் நடைபெற்ற 7 ஆவது சியாங்சன் அமைய மாநாட்டில் பாதுகாப்புச் செயலாளர் பொறி. கருணாசேன ஹெட்டியாராச்சி கலந்துகொண்டிருந்ததுடன் ‘‘உலகளாவிய ஆளுகையில் இராணுவங்களின் வகிபாகம்’’ என்னும் தொனிப்பொருளில் மாநாட்டின் இரண்டாவது முழுமை அமர்விலிலும் உரைநிகழ்த்தியிருந்தார்.

2006 இல் இராணுவ அறிவியலுக்கான சீனக் கூட்டமைப்பினால் ஆரம்பிக்கப்பட்ட சியாங்சன் அமையமானது ஆசியான் பாதுகாப்பு பிரச்சினைகள் மீதான 1.5 உயர் இறுதி (high-end) கலந்துரையாடல் தள வழித்தடமாக இருக்கிறது. இவ்வாண்டிற்கான கருப்பொருளாக ‘‘பாதுகாப்புக் கலந்துரையாடல் மற்றும் ஒத்துழைப்பின் ஊடாக சர்வதேச உறவுகளின் ஒரு புதிய வகையை கட்டியெழுப்பல்’’ எனும் தொனிப்பொருள் இருந்ததுடன் ‘‘உலகளாவிய ஆளுகையில் இராணுவங்களின் வகிபாகம்’’, ‘‘ஒத்துழைப்பின் ஊடாக ஆசிய பசுபிக் வலயத்தின் புதிய பாதுகாப்புச் சவால்களுக்கு பதிலிறுத்தல்’’, ‘‘கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு’’ மற்றும் ‘‘சர்வதேச பயங்கரவாத அச்சுறுத்தல்களும் எதிர் நடவடிக்கைகளும்’’ ஆகிய நான்கு தலைப்புகள் முழுமை அமர்வுகளில் கலந்துரையாடப்பட்டன. இப்பாதுகாப்பு தனிக் கூட்டுக் குழுவுக்கு இராணுவ அறிவியலுக்கான சீனக் கழகம் மற்றும் சர்வதேச தந்திரோபாய ஆய்வுகளுக்கான சீன நிறுவகம் ஆகியவை அனுசரணை வழங்குகின்றன.

இவ்வமையத்தின் வேறொரு பக்கத்தில் ஜெனரல் சாங் வாங்குவான், மாநிலக் கவுன்சிலர் மற்றும் சீன மக்கள் குடியரசின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரின் மரியாதை நிமித்தமான அழைப்பினை செயலாளர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தார். பாதுகாப்புத் துறை ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக இலங்கைக்கான தொடக்க விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு அமைச்சருக்கு செயலாளர் அவர்கள் இலங்கை சனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் சார்பாக அழைப்பொன்றை விடுத்திருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதி இவ்விஜயத்தின் சகல விடயங்களையும் ஒருங்கிணைத்திருந்தது.




### பாதுகாப்புச் செயலாளரின் உத்தியோகபூர்வ விஜயமும் 2 ஆவது சீன - இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்புக் கலந்துரையாடலும் - 12-15 அக்டோபர் 2016

சீன அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் பாதுகாப்புச் செயலாளர் பொறி. கருணாசேன ஹெட்டியாராச்சி சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இவ்விஜயத்தின்போது, சீனாவின் மத்திய இராணுவ சபையின் (CMC) இணைந்த அலுவல் திணைக்கள பிரதித் தலைவர் அட்மிரல் சண் ஜியாங்குவா உடன் 2 ஆவது சீனா - இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு கலந்துரையாடலின் இணைத் தலைமையை செயலாளர் வகித்திருந்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பின் முழுமையான செயலெல்லையும் இக்கூட்டத்தில் மீளாயப்பட்டது.

உயர் மட்ட பரிமாற்றங்கள், இராணுவ உதவிகள், பயிற்சி வாய்ப்புகள், பாதுகாப்புச் சிந்தனையாளர குழாங்களுக்கிடையிலான கூட்டிணைப்பு புலனாய்வு ஒத்துழைப்பு, கூட்டு இராணுவ நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்புச் செயலமர்வுகளில் பங்குபற்றல்,

வேலைப்பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவை உள்ளிட்ட பாதுகாப்பு ஒத்துழைப்பின் முழுமையான வரம்பெல்லையை இரு தரப்பினரும் மீளாய்வு செய்திருந்தனர். ஒட்டுமொத்த இருதரப்பு தொடர்புகளில் ஒத்துழைப்பின் முக்கியமான ஒரு தூணாக பாதுகாப்பு இருப்பதை பிரதிநிதிகள் எடுத்துக்காட்டிய அதே வேளை இக்கோளத்தில் வலுச் சமநிலையினை தொடர்வதற்கும் இணக்கம் ஏற்பட்டது.

இக்கூட்டத்தில் RMB யுவான் 120 மில்லியன் பெறுமதியான இரு உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டன. அவற்றுள் ஒன்று, கடலோர ரோந்துக் கப்பல் (போர்க்கப்பல் ஒன்றிலிருந்து அமைப்பு மாற்றம் செய்யப்பட்ட) ஒன்றின் ஏற்பாட்டிற்கானது மற்றையது இலவச இராணுவ உதவிக்கான ஏற்பாட்டிற்கானது.

விமானப் படை தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி, கடற்படை தலைமை அதிகாரி ரியர் அட்மிரல் எஸ்.எஸ்.ரணசிங்க, இலங்கை இராணுவ தன்னார்வப் படையின் படைத்தலைவர் மேஜர் ஜெனரல் எச்.சி.பி. குணதிலக, பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (வெளிநாட்டு அலுவல்கள்) திருமதி. எஸ்.எஸ். பிரேமவர்த்தன மற்றும் பீஜிங்கில் உள்ள இலங்கைத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோர் உள்ளிட்ட தரப்பினர் இக்கலந்துரையாடலுக்கான இலங்கைப் பிரதிநிதிகளாக இருந்தனர்.

**நான்காவது வருடாந்த இலங்கை - இந்திய பாதுகாப்புக் கலந்துரையாடல், 2016 நவெம்பர் 03.**



இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையிலான நான்காவது வருடாந்த பாதுகாப்புக் கலந்துரையாடல் கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சில் 2016 நவெம்பர் 3 ஆந் திகதி இடம்பெற்றது. இக்கூட்டத்திற்கான இந்தியப் பிரதிநிதிகளுக்கு இந்தியப் பாதுகாப்புச் செயலாளர் சிறி ஜி. மோகன் குமார் அவர்களும், இலங்கைப் பிரதிநிதிகளுக்கு இலங்கை பாதுகாப்புச் செயலாளர் பொறி. கருணாசேன ஹெட்டியாராச்சி அவர்களும் தலைமைதாங்கியிருந்தனர். பாதுகாப்புக் கலந்துரையாடல் செயன்முறையானது வருடாந்த அடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பின் ஒட்டுமொத்த பரப்பையும் பாதுகாப்பு ஒத்துழைப்பையும் மீளாய்வு செய்யும் நோக்குடன் 2012 இல் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் ஒட்டுமொத்த இருதரப்பு ஒத்துழைப்பின் முக்கியமானதும் ஒருங்கிணைந்ததுமான ஒரு பகுதி பாதுகாப்பாகும் என்பதுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பின் மேம்பாட்டின் ஊடாக இந்து சமுத்திரத்தின் முக்கிய தந்திரோபாய ஒத்துழைப்பினையும் இலங்கை பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டியிருந்தார். இந்தச் சூழலில் பாதுகாப்புக் கலந்துரையாடல் பொறிமுறையினுள் மேற்கொள்ளப்படும் பணிகளின் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

வரலாறு, கலாசாரம், இனம் மற்றும் நாகரீகம் ஆகியவற்றின் பகிர்வின் மூலம் இந்தியா மற்றும் இலங்கைக் கிடையிலான தனிப்பட்ட உறவு மற்றும் சமத்துவமான, விரிவான மக்களிலிருந்து மக்களுக்கான இடைவினைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டிருந்தார். தந்திரோபாய மற்றும் பாதுகாப்பு அக்கறைகள் மற்றும் இரு நாடுகளினதும் கரிசினைகள் ஆகியன நெருக்கமாக இடைத்தொடர்புற்றிருப்பதுடன் பாதுகாப்புக் கரிசினைகளின் பொதுவான நிலைமையானது வலுவான இருதரப்பு உறவுகளைக் கட்டியெழுப்புவதன் பொருட்டு தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கான அடிப்படைகளை அமைத்துள்ளது என்பதையும் அவர் தெரிவித்திருந்தார்.

பயிற்சி மற்றும் இயல்திறனைக் கட்டியெழுப்புகின்ற பரப்புகளில் விரிவான கலந்துரையாடல்கள் நடைபெற்றன; ஆயுதப் படைகளுக்கிடையிலான தந்திரோபாயக் கலந்துரையாடல்; இராணுவத்திலிருந்து இராணுவத்திற்கான ஒத்துழைப்பு; கடல்சார் எல்லை விழிப்புணர்வு; IMBL உடனான கடல்சார் கண்காணிப்பு; பாதுகாப்பு உபகரணம்; பாதுகாப்பு சிந்தனையாளர் குழாம்களுக்கிடையிலான தந்திரோபாயச் சமுதாயம் மற்றும் இடைவினைகளுக்கு இடையிலான நன்மையளிக்கும் பாதுகாப்பு வழிகள், கரையோரக் காவல் ஒத்துழைப்பு மற்றும் கலந்துரையாடல்.

இக்கலந்துரையாடலுக்கான இந்திய பிரதிநிதிகள் குழுவில் இந்திய உயர்ஸ்தானிகர் எச்.ஈ.வை.கே. சின்ஹா, இந்தியக் கடற்படையின் கடற்படைப் பிரதித் தலைவர் வைஸ் அட்மிரல் ஜி. அசோக் குமார், இந்திய விமானப் படையின் எயார் மார்ஸல் ஆர்.கே.எஸ். பதுரியா, இந்திய இராணுவத்தைச் சேர்ந்த லெப்டினன் ஜெனரல் எஸ்.கே.பட்டல், இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் திரு. அரிந்தம் பாக்ஸி, பாதுகாப்பு அமைச்சின் பணிப்பாளர் சிறீ பிரதீப் குமார் மற்றும் கொழும்பு இந்திய உயர்ஸ்தானிகராலய பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் பிரகாஷ் கோபாலன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

கலந்துரையாடலுக்கான இலங்கைப் பிரதிநிதிகள் குழுவானது, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (பாதுகாப்பு) திரு. எஸ். ஹெட்டியாராச்சி, பாதுகாப்புத் தலைமை அதிகாரி எயார் சீப் மார்ஷல் கே.ஏ. குணதிலக, இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஏ.டபி.ஜே.சி. த சில்வா, இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஆர்.சி. விஜேகுணரத்ன, இலங்கை விமானப் படையின் தலைமை அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் சுமங்கல டயஸ், இலங்கை கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் ஜி.டி.ஏ.எஸ். விமலதுங்க, தேசிய புலனாய்வுத் தலைவர் (ஓய்வு பெற்ற) டி.ஐ.ஜி. ஆன ஏ.என்.சிசிர மென்டிஸ், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தெற்காசிய மற்றும் சார்க் பிரிவின் பணிப்பாளர் நாயகம் திரு. அசோக கிரிஹகம, பாதுகாப்பு அமைச்சின் வெளிநாட்டு அலுவல்கள் கிளையின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி. சசிகலா பிரேமவர்த்தன மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தெற்காசிய மற்றும் சார்க் பிரிவின் பணிப்பாளர் திருமதி. அன்சுல் ஜான் ஆகியோரை உள்ளடக்கியிருந்தது.

பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச உறவுகள் பகுதி இவ்விஜயத்தின் சகல விடயங்களையும் ஒருங்கிணைத்திருந்தது

# 10. பாதுகாப்பு அமைச்சின் ஊடக மையம

## 10.1 மேலோட்டமான பார்வை

சுயாதீன நாடொன்றின் கட்டாயத் தேவையான தேசிய பாதுகாப்பை பாதுகாக்கும் நோக்கில் பாதுகாப்புடன் தொடர்புடைய செய்திகளை சேகரித்தல் மற்றும் அவற்றை ஆய்வு செய்து சரியானதும் நேர்த்தியானதுமான செய்திகளை உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு வழங்குதல். பல்வேறு ஊடகங்கள் மூலமாக வெளியிடப்படும் தவறான செய்திகளை சரிசெய்து உரிய முறையில் உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு வழங்குதலும் இந்த ஊடக மையத்தின் ஊடாக நடைபெறுகின்றது.

### 10.1.1 பொறுப்புக்கள்

- தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட செய்திகள் மற்றும் தகவல்களை ஒன்றுதிரட்டி வேகமாகவும் உடனுக்குடனும் ஊடகங்களுக்கு வழங்குதல்.
- தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக காணப்படும் செய்திகளை அடையாளங்காணுதல் மற்றும் அவற்றை ஊடகங்கள் மூலமாக நிவர்த்தி செய்தல்.
- தேசிய பாதுகாப்பு தொடர்பான தகவல்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் பிரிவுகளுடன் தொடர்பு கொண்டு சரியான முறையில் ஊடகங்களுக்கு பெற்றுக் கொடுக்க வழி செய்தல்.
- பாதுகாப்பு அமைச்சு, மற்றும் அமைச்சின் கீழ உள்ள முப்படைகள் உட்பட ஏனைய நிறுவனங்கள் உடனான தொடர்புகளை மேம்படுத்தல்.
- எதிர்கால தேவைகளின் போது கவல்களை பெற்றுக் கொள்வதற்காக செய்தித்தாளை சேகரித்து பாதுகாத்து களஞ்சியப்படுத்தல், ஆவண காப்பகம் ஒன்றை பேணுதல்.
- பாாதுகாப்பு அமைச்சின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக ஊடகத்துறையினருடன் தொடர்பு கொண்டு ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்ளுதல்
- தேவைகள் ஏற்படும் சந்தர்பத்தில் எழுத் மூலமாக மற்றும் வாய் மொழி மூலமாக ஊடக அறிக்கைகளை வெளியிடுதல்.

## 10.2 அட்டவணை - 2016

இந்த ஊடக மையத்தின் ஊடாக 11 செய்தியாளர் மாநாடுகளும், 35 ஊடக அறிக்கைகளும் 53 ஊடக செய்தி சேகரித்தல் நிகழ்வுகளும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

| மாதம் | ஊடக மாநாடு | ஊடக அறிக்கை | ஊடகப் பிரச்சார ம் |
|---|---|---|---|
| ஜனவரி | 01 | 01 | 06 |
| பெப்ரவரி | - | 02 | 06 |
| மார்ச் | 01 | 05 | 06 |
| ஏப்ரல் | 01 | 08 | 08 |
| மே | 01 | 03 | 04 |
| ஜூன் | 01 | 03 | 02 |
| ஜூலை | 01 | - | - |
| ஆகஸ்ட் | 01 | 08 | 03 |
| செப்டெம்பர் | 03 | 01 | 02 |
| ஒக்டோபர் | - | 01 | 10 |
| நவம்பர் | 01 | 02 | 04 |
| டிசம்பர் | - | 01 | 02 |
| மொத்தம் | 11 | 35 | 53 |

10.1 அட்டவணை: ஊடைக மையத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட செய்தியாளர் மாநாடுகள் மற்றும் ஊடக அறிக்கைகள்

ஊடக மையத்திற்கு தேவையான நிதி மற்றும் மூலப் பொருட்கள் 2008 முதல் 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் 103-01-06 என்ற ஒதுக்கீட்டின் மூலம் பாதுகாப்பு அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டது. என்றாலும் 2015ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகள் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட வரவு செலவு ஒதுக்கீட்டிலிருந்து பெறப்பட்டது. ஊடக மையத்திற்கான தேவைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணிப்பாளரின் எழுத்து மூல வேண்டுகோளுக்கு அமைய வழங்கப்பட்டது.

ஊடக மையத்தின் மாதாந்த சிறு தேவைகளுக்காக சில்லறைக் காசேடாக ரூபாய். 5000.00 பெற்றுக் கொடுக்கப்படுவதோடு அவற்றின் செலவுகள் பற்றிய விபரங்களை பற்றுச்சீட்டுக்களுடன் ஒவ்வொறு மாத இறுதியிலும் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒப்படைத்தல்.




10.1 நிரல் படம் சில்லறைக் காசேட்டின் பயன்பாடு




10.2 நிரல் படம் : தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய அச்சு ஊடக செய்திச் சுருக்கம் - 2016




10.3 நிரல் படம் : தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய தொலைக்காட்சி செய்திச் சுருக்கம் - 2016




10.4 நிரல் படம்: தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய வானொலி செய்திச் சுருக்கம் - 2016




10.5 நிரல் படம்: தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய இணையத்தள செய்திச் சுருக்கம் - 2016




10.6 நிரல் படம்: 2016 குற்ற அறிக்கை ஆய்வின் சாரம்சம்

## 10.3 சவால்கள் மற்றும் பிரச்சினை

- ஊடக பிரச்சாரம் மற்றும் பொது மக்கள் தொடர்புகள் என்பன காலத்தின் கட்டாய தேவையாகும். அத்துடன் இந்நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைவதற்காக பல்வேறு பட்ட முரண்பாடுகள் ஊடக மையத்தினால் அடையாளங் காணப்பட்டுள்ளது. இதற்கமைய தேசிய தேவைகளை கருத்திற் கொண்டு சிவில் மற்றும் இராணுவ தொடர்புகளை மேம்படுத்துதல் இந்நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. நல்லாட்சியை பேணுவதற்காக தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு பொது மக்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொடுத்தல்.
- பாதுகாப்பு அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இந்த ஊடக மையமானது தேசிய பாதுகாப்புத் தொடர்பான சரியான தகவல்களை உடனடியாக பொதுமக்களுக்கு வெளியிடும் வகையில் செயற்படும் நிறுவனமாகும்.
- இந்த ஊடக மையத்தினூடாக மும்மொழிகளிலும் ஊடக அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. எனினும் தற்பொழுது தமிழ் ஊடக இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஊடகவியலாளர் மாத்திரம் இருப்பதுடன் சிங்களம் மற்றும் ஆங்கில ஊடக இணைப்பு நடவடிக்கைகளுக்கான ஊடகவியலாளர்கள் எமது நிறுவனத்திற்குள் இல்லாமையினால் நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் சர்வதேச ஊடகங்களில் வெளியிடப்படும் சரியான தகவல்களை மற்றும் முறையான வகையில் தகவல்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் கண்காணிப்பதற்கு தொழில்சார் நபர்கள் இல்லாமை.
- ஊடகத் தேவைகள் மற்றும் ஏனைய ஊடக செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தேவையான புகைப்படவியலாளர்கள் வீடியோ கமராக்கள் , புகைப்பட கமராக்கள் , ஒலிப்பதிவு இயந்திரங்கள் அறிவிப்பாளர்கள் மற்றும் அறிக்கையிடுதல் போன்ற திறமையுடையவர்கள் இந்த ஊடக மையத்திற்கு இல்லாமை
- பொதுமக்கள் மற்றும் நிறுவனத்துக்கு இடையிலுள்ள ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானதாகும். இந்த நிறுவனத்தில் ஊடகத்துறை சார்ந்த அறிவுள்ள ஊழியர்கள் இல்லாமையினால் நிறுவனத்துக்கும் பொதுமக்களுக்குமிடையிலான தொடர்புகள் மட்டுப்படுத்தப்பட்டு காணப்படுவதால் ஊடகப் பிரச்சாரங்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் குறைவாக காணப்படுகின்றன.

## 10.4 எதிர்பார்க்கப்படும் முன்மொழிவுகள்

- தேசிய ஊடக பயிற்சி நிலையத்துடன் இணைந்து ஊடக மையத்திலுள்ள அதிகாரிகளுக்கு தேவையான பயிற்சிகள், கற்கைகளை வழங்குதல்
- தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தேசிய பாதுகாப்புக்கு மற்றும் முப்படையினருக்கும் அச்சறுத்தல் ஏற்படும் வகையில் வெளியிடப்படும் பொய்யான மற்றும் தவறான கருத்துக்களை முறியடிக்கும் வகையில் உடனடியான ஊடக அறிக்கைகளை வெளியிடுதல்.
- சகல அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் உடனான நட்புறவு தொடர்பை மேம்படுத்துவதற்காக மாநாடு ∴ வேலைத்திட்டங்களை ஏற்பாடுகள் செய்தல்.
- முப்படை ∴ இலங்கை பொலிஸ் ∴ சிவில் பாதுகாப்பு படை ஆகியவற்றின் ஊடக பிரிவுகளை ஒன்றிணைத்து அவர்களுக்குத் தேவையான பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்த ஏற்பாடு செய்தல்.
- நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்களில் தொடர்பில் தவறான பிரச்சாரங்கள் கொண்டுச் செல்லப்படும் சந்தர்ப்பத்தில் அது அது தொடர்பிலான உண்மை தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கும் பொருட்டு உடனடியாக செயற்படும் வகையில் குழு வொன்றை உருவாக்குவதுடன் அதற்கு தேவையான உபகரணங்களையு பெற்றுக் கொள்ளல். (வாகன வசதியுடன்)
- அரசகரும மொழிகள் திணைக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தி ஊடக மையத்தின் ஊழியர்களுக்கு மும்மொழி பயிற்சிகளை வழங்க திட்டமிடல்.
- முப்படை / இலங்கை பொலிஸ் / பொலிஸ் விஷேட அதிரடிப்படை / சிவில் பாதுகாப்பு படை ஆகியவற்றின் ஊடாக முன்னெடுக்கப்படும் தேசிய பாதுகாப்பு மற்றும் அதனுடன் சார்ந்த செயற்பாடுகள் தெமாடர்பாக மாதாந்தம் அல்லது காலாண்டு சஞ்சிகை அல்லது பத்திரிகை வெளியிடுதல்.
- தேசிய பாதுகாப்பு மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தகவல்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு (சைபர் தாக்குதலிருந்து பாதுகாப்பதற்கு) தேவையான உபகரணங்களை ஊடக மையத்திற்கு பெற்றுக் கொள்ளல்.

# 11. இராணுவ தொடர்பு அலுவலகம்

## 11.1 மேலோட்டமான பார்வை

பாதுகாப்பு அமைச்சர் எனும் வகையில் அதிமேதகு ஜனாதிபதியினாலும் மற்றும் பாதுகாப்பு செயலாளரினாலும் வழங்கப்படும் அறிவிப்புகள், முடிவுகள் மற்றும் உத்தரவுகளை பரஸ்பர புரிதல் மற்றும் வினைத்திறனான நடவடிக்கைகளை உறுதிப்படுத்தல் எனும் நோக்கில் முப்படை மற்றும் பிற நிறுவனங்கள் இடையே ஒருங்கிணைப்புக்களை ஏற்படுத்தி செயற்படுவது இப்பிரிவின் முக்கிய வகிபாகம் ஆகும்.

அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்படும் கொள்கை முடிவுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பவற்றுடன் ஒதுக்கீடு செய்யப்பட்ட வளங்களின் வரையறைகளை மீறிச் செல்லாத வகையில் அங்கீகரிக்கப்பட்ட பணிகள் மற்றும் திட்டங்கள் நிறைவேற்றுதல் என்பனவாகும்.

### 11.1.1 கடமைப் பொறுப்புகள்

- அரச செயல்பாடுகளுக்கு உதவி வழங்குதலும் ஒருங்கிணைப்பு செய்தலும்
- வெளிநாட்டு பிரமுகர்களின் விஜயத்தின் போது உதவி வழங்குதலும் ஒருங்கிணைப்பு செய்தலும்
- அமைச்சுக்களுக்கு முப்படைகளின் தேவைகளின் போது ஒத்துழைப்பு வழங்கல்
- தனியார் / வணிக நிறுவனங்களின் தேவைகளின்போது முப்படைகளின் நிபுணத்துவம் மற்றும் வளங்கள் என்பனவற்றை பயன்படுத்துவதன் மூலம் உதவியளித்தலும் ஒருங்கிணைப்பு செய்தலும்
- இராஜதந்திர பிரிவுகளுடனான ஒத்துழைப்பினை ஒருங்கிணைத்தல், அந் நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு இராணுவ ரீதியிலான உதவிகளை அளித்தல்
- இராணுவ நிறுவனங்கள் மற்றும் சுற்றுப் பயணங்கள் மேற்கொள்ள தடை செய்யப்பட்டுள்ள பகுதிகளை அணுக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரஜைகளுக்கு வழிகாட்டுதலும் ஒருங்கிணைப்பு செய்தலும்
- தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் காரணிகள் தொடர்பாக ஆராய்தல்

### 11.1.2 பிரதான விடயங்கள்

- இராணுவ முகாம்கள் மற்றும் இராணுவ குழும நிறுவனங்களுக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு பிரமுகர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் .
- கப்பல்கள் மற்றும் விமானங்கள் ஆகியவற்றுக்கு இராஜதந்திர அனுமதி வழங்குதல்
- இராணுவ விமானங்களுக்கு விமான அனுமதி வழங்குதல்
- விமானங்கள், விமான உதிரிப்பாகங்கள், இயந்திரப்படகுகள், உள்,வெளி படகு இயந்திரங்கள், மற்றும் விசேட இராணுவ கருவிகளின் இறக்குமதிகளின்போது அனுமதி பெற்றுக்கொடுத்தல்
- இராணுவ சீருடைத்துணி மற்றும் உருமறைப்பு சாதனங்களின் உற்பத்தி/ இறக்குமதி/ ஏற்றுமதி மற்றும் கொண்டு செல்லல் ஆகியவற்றின் போது அனுமதி பெற்றுக்கொடுத்தல் .
- முப்படையினருடன் தொடர்புடைய உத்தியோக பூர்வ வைபவங்களின் போது ஒத்துழைப்பு வழங்குதல், அரசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மற்றும் **வெளிநாட்டு** ஊடகங்கள் என்பவற்றிலிருந்து வருகை தரும் வெளிநாட்டுக் குழுக்கள்/ புத்திஜீவிகள்/பிரமுகர்கள் ஆகியோருக்கு வழிகாட்டுதலும் ஒருங்கிணைப்பு செய்தலும்
- அரச அமைச்சுக்களுக்கு முப்படைகளின் உதவிகள் வேண்டப்படும் வேளையில் பரிமாற்றம் செய்தல்
- தனியார் / வணிக நிறுவனங்களின் தேவைகளின்போது முப்படையினரின் நிபுணத்துவம் மற்றும் வளங்களை பெற்றுக் கொடுப்பதன் மூலம் உதவியளித்தலும் ஒருங்கிணைப்பு செய்தலும்
- இராஜதந்திர பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து செயற்படல், இராஜதந்திர செயற்றிட்டங்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடனான மாதாந்த சந்திப்பு என்பனவற்றிற்கு இராணுவ உதவியளித்தல்
- அபாயகரமான பொருட் கொண்டுசெல்கையின் போது அனுமதியளித்தல்
- சேவையில் உள்ள வீரர்களுக்கு தொழிற்பயிற்சி திட்டங்களை ஒழுங்கு செய்தல் .
- பாதுகாப்பு அமைச்சரின் ஏனைய பிரிவுகளின் வேண்டுகோளுக்கிணங்க உதவிகளை வழங்கல்
- அனுராதபுர மகாமெவனவ பூங்காவின் சந்தஹிரு செய எனும் திட்ட நிர்மாணப்பணிகளினை ஒருங்கிணைத்தல்

- இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் உயர் அரச அதிகாரிகளுடைய விமான / கடல் நகர்வுகளுக்காக இலங்கை விமானப்படை மற்றும் இலங்கை கடற்படை ஆகியவற்றுடன் ஒருங்கிணைபினை ஏற்படுத்தல்.
- தடைசெய்யப்பட்ட இராணுவ உபகரணங்களுடைய அனுமதிக்காக இலங்கை சுங்கத்திணைக்களத்துடன் ஒருங்கிணைபினை மேற்கொள்ளல்
- பாதுகாப்பு அமைச்சு அல்லது அமைச்சசின் கீழ் செயற்படும் ஏனைய நிறுவனங்களில் இராணுவ அதிகாரிகளின் இணைப்பிற்கான ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்
- வெளிநாட்டு தலைவர்கள் வருகையின் போது அதற்கான ஒழுங்கினையும், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறும் ஆரம்பகட்ட கலந்துரையாடலின் பின்னர் பின்வரும் உதவி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
- உத்தியோக பூர்வ வரவேற்பினை மேற்கொள்ளும் வகையில் 19/21 பீரங்கி வேட்டுக்கள் தீர்த்தல்.
- உத்தியோக பூர்வ மோட்டார் சைக்கிள்கள் பவணியினை மேற்கொள்வதற்கான ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.
- முப்படையினர், சீஎஸ்டி, காவல்துறை ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படும் கலாசார நிகழ்வின்போது ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.
- வைபவ ரீதியான அணிவகுப்பு மரியாதையினை மேற்கொள்வதட்கான ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.
- பாண்டாரனாயக சர்வதேச விமானநிலையத்தில் நாட்டுக்கு வருகைதரும் போதும் நாட்டை விட்டு புறப்படும் போதும் அரச மரியாதை செலுத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல்.
- பாராளுமன்ற வளாகத்தினுள் யுத்த வீரர்களின் நினைவுச்சின்னங்களுக்கு மலர் வளைய அஞ்சலி செலுத்துவதற்கான ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.
- பிரமுகர்கள் தங்கியிருக்கும்போது மருத்துவக்குழுவினரை இணைப்புச் செய்தல்
- பிரமுகர்கள் தேவைகேற்ப பொருத்தமான உள்ளூர் விமான சேவையினை வழங்குவதற்கான ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.
- கட்டுநாயக்கா இலங்கை விமானப்படை வளாகத்தில் விஷேட விமானங்கள் தரை இறங்குவதற்கும் பாதுகாப்பு வழங்குவதற்கும் அனுமதி வழங்குதல்.
- பிரமுகர்கள் புறப்படும் முன்னர் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்த தேவையான ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.
- அரச நிகழ்வுகளை மேற்கொள்ள காலிமுகத்திடலை பெற்றுக்கொள் வதற்கு துறைமுக அதிகாரசபையுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.
- கொழும்பில் விஷேட பகுதிகளில் தொலைக்காட்சி நாடகம் படப்பிடிப்பு மற்றும் புகைப்படங்கள் எடுத்தல் ஆகியவற்றுக்கு அனுமதியளித்தல்
- காலிமுகத்திடல் மற்றும் வெளிச்சவீடு ஆகிய பகுதிகளில் படப்பிடிப்புக்கான அனுமதி வழங்கல்
- வருடாந்த பௌத்த ரஷ்மி நிகழ்வுகள், வெசாக் மற்றும் பொசன் போயா தின நடவடிக்கைகள் மற்றும் நிர்மாணபணிகளுக்காக நிபுணத்துவம் பெற்ற இராணுவ வீரர்கள் மற்றும் வேலையாட்களை வழங்குதல்
- வெளிநாட்டு இராணுவ பயிட்சிக்குழு வருகையினை ஒருங்கிணைப்பதுடன் விமான நகர்வுகள், கலந்துரையாடல்கள் மற்றும் ஏனைய விடயங்களை ஒருங்கிணைக்கும் செயற்பாடுகளினை மேற்கொள்ளல்.
- பாதுகாப்புக்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல்.
- ஞாபகார்த்த நிகழ்வுகளின் போது உதவி வழங்குதல்
- பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்பு ஒழுங்குகளை நிருவகித்தல்
- கொழும்பு மற்றும் அதனை அண்டியுள்ள நடைபாதைகளை பராமரிக்கும் பணிகளினை அவதானித்தல் மற்றும் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.
- சமூக மற்றும் பொது நிகழ்வுகளில் கமடான் பங்குபற்றுவதற்காக அனுமதி வழங்கல்.
- அரச நிகழ்வுகளுக்கு முப்படையினரின் பேண்ட் வாத்தியக்குழுவினை வழங்கள்.
- அரச நிகழ்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் அவற்றினை ஒருங்கிணைக்கும் செயற்பாடுகளினையும் மேற்கொள்ளல்.
- தேவைக்கேற்ப இராணுவப்படையினரை வழங்கல்.
- அழைப்பிதழ்கள் தயாரித்தல், இருக்கை ஒழுங்குகள் மற்றும் அவற்றினை ஒருங்கிணைத்தல். ( உ + ம் . வெற்றி அணிவகுப்பு )
- மேலும் அதிமேதகு ஜனாதிபதியினாலும் மற்றும் பாதுகாப்பு செயலாளரினாலும் வழங்கப்படும் ஏனைய செயற்திட்ட வேளைகளை ஒருங்கிணைதத்தல்





## 11.2 அட்டவணை - 2016



- பாராளுமன்ற மைதானம் மற்றும் நடை பாதை
- நாவல வெட்லேன்ட் பூங்கா மற்றும் நடை பாதை
- விஹாரமகதேவி பூங்கா மற்றும் நடை பாதை
- திவத உயன மற்றும் அதை சூழ உள்ள நடை பாதை
- சுதந்திர சதுக்கம் மற்றும் நடை பாதை



நாட்டுக்கு வருகைதந்த வெளிநாட்டு கப்பல்கள்

2016ம் ஆண்டுகளில் கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கு வருகைதந்த வெளிநாட்டு கப்பல்களுக்கு பின்வரும் அடிப்படையில் இராஜதந்திர அனுமதி வழங்கப்பட்டுள்ளது

| தொடர் இல | நாடுகள் | கப்பல்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இந்தியா | 7 |
| 2 | பாகிஸ்தான் | 2 |
| 3 | துருக்கி | 1 |
| 4 | ஜப்பான் | 7 |
| 5 | மாலைதீவு | 1 |
| 7 | உண்மையான விமானங்களை பயிற்சிக்குப் பயன்படுத்துவதால் அதிகசெலவு ஏற்படும் என்பதால் பைலட் பயிற்சிக்கு வழங்குவதற்கு K8 விமானப் பயிற்சிப் போலியை வடிவமைத்தல். விமானப் பயிற்சிப் போலியானது பயிற்சிச் செலவினைக் குறைக்கிறது. இது உள்ளுர் பொறியியலாளர்களின் உதவியுடன் விருத்தி செய்யப்படுகிறது. | 100 மில்லியன் வரை செலவாகும். எவ்வாறாயினும், வர்த்தகரீதியில் கிடைக்கக்கூடிய போலிகளை பயிற்சித் தேவைகளுக்காக இணக்கமாக்கு வதற்கு கஷ்டமாக இருப்பதுடன் CRD ஆல் விருத்தி செய்யப்படும் K8 போலிகள் உள்ளுர் பயிற்சித் தேவைகளுக்குப் பொருந்தக்கூடியவாறு இலகுவாகவும் இருக்கிறது. |
| 8 | வான் போக்குவரத்துக் கட்டுப்படுத்திகளுக்கான பயிற்சிப் போலி<br>பயிற்சிச் செலவைக் குறைக்கும் நோக்குடன் வான் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு நிலையங்களில் ஊடாட்டப் பயிற்சிக்கான போலியொன்றை விருத்தி செய்வதற்கான ஆய்வு | வான் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பயிற்சிக்காக வர்த்தக ரீதியில் கிடைக்கக்கூடிய பயிற்சிப் போலிக்கான செலவு கிட்டத்தட்ட 20 மில்லியன் ஆகும். எனவே இச்செயற்றிட்டம் பணத்தைச் சேமிக்க உதவும். |
| 9 | Guided Rocket and Missile முறைமை விருத்திச் செயற்றிட்டம்<br>இச்செயற்றிட்டத்தின் நோக்கம் ரொக்கெற் முறைமைகளில் வழிகாட்டப்பட்ட தொழினுட்பத்தை கொள்வனவு செய்தலும் மேம்படுத்தலும் ஆகும். இது ரொக்கெற் ஏவுதல், முயலுதல் மற்றும் வழிநடத்தல் ஆகியவற்றின் முதலாவது படிமுறையாக இருக்கும். | இது பின்வருவனவற்றை இயலச் செய்யும் ;<br>இலங்கையினுள் ரொக்கெற் மற்றும் ஏவுகணை தொழினுட் பத்தைத் தாபிப்பதற்கு<br>தேசிய பாதுகாப்பு நோக்கத்திற்காக தேவையான உயர் நுட்ப ஆயுதங்களை வர்த்தகரீதியில் உற்பத்தி செய்வதற்கு<br>நாட்டிற்கான அந்நியநாட்டுச் செலாவணியைப் பாதுகாப்பதற்கு |
| 10 | Quod Copters மற்றும் UAVS இற்கான ஐதரசன் எரிபொருட் கல அபிவிருத்தி<br>இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பறப்பு தடவைகளை அதிகரிப்பதற்கு quad copter மற்றும் UAVs களில் பயன் படுத்தக்கூடிய உயர் வினைத்திறனும், குறைந்த எடையும், உயர் கொள்ளளவும், நீண்ட நாள் உழைக்கக்கூடிய ஐதரசன் எரிபொருள் கலங்களை விருத்தி செய்தலும் | இக்கலங்கள் (பற்றரிகள்) உயர் செலவுமிக்கவை என்பதுடன் பராமரிப்புக்கு உயர் தொழினுட்பமும் தேவைப் படும். இச்செயற்றிட்டத்தின் பிரதான நோக்கம் தேவையான தொழினுட்பத்தைப் பெறுதலாகும். |
| 11 | இலத்திரனியல் வரையறைக்கான இலக்குகள் மற்றும் சுடுதல் மதிப்பீடு அபிவிருத்தியும் புனரமைப்பும்<br>இச்செயற்றிட்டத்தின் நோக்கம் உயர் நுட்ப உபகரணங்களுடன் பனாகொட முகாமில் இலத்திரனியல் சுடு வீச்சினை நவீனப்படுத்துவதுடன் துல்லியமான பயிற்சி முறைமையை தாபித்தலும் | குறைந்த செலவில் இவ்வகை முறைமையை விருத்தி செய்வதற்கு தேவையான தொழினுட்பத்தையும் அறிவையும் CRD பெற்றுள்ளது. |
| 12 | Armor Tank போலி முறைமை அபிவிருத்தி<br>இச்செயற்றிட்டத்தின் நோக்கம் யுத்த தாங்கிப் படையணிக்கு பயிற்சிக்காக யுத்ததாங்கி ஒன்றை விருத்தி செய்வதாகும். | யுத்ததாங்கிகள், சுடுதல் மற்றும் இயக்கங்கள் மீதான யுத்ததாங்கிப் பயிற்சிக்கு இப்போலி முறைமை வகைசெய்யும். |

| | | |
|---|---|---|
| 13 | Development of virtual reality parachute jumper and skydiver training Simulator<br><br>முப்படையையும் சேர்ந்த பரசூட்டில் இருந்து குதிப்போருக்கு அவர்கள் உண்மையான சூழலை எதிர்கொள்வதற்கு முன்பாக அவர்களுக்கு மெய்நிகர் (மாய) மெய்மையுணர்வுச் சூழலை வழங்குவதற்கு மெய்நிகர் மெய்மையுணர்வு வான் கரணமடிப் பவர் மற்றும் பரசூட்டில் குதிப்பவர் ஆகியோருக்கான போலிகளை வடிவமைத்தல். முறைமை கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள பயிற்றுவிப்பாளர்களை அனுமதிப்பதுடன் இதனை குறைந்த செலவுடன் விருத்தி செய்யவும் முடியும். | தலைமை கண்காணிப்பு உணரி குறியிடல் மேம்பாடும் பார்வைப் பிரிப்புகளும் நடைபெறுகின்றன. இச்செயற் றிட்டம் 2016 ஆம் ஆண்டு முடிய முன் நிறைவு செய்யப்பட்டு பயிற்சிக்காக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது |
| 14 | Braille to Sinhala Converter<br>இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பார்வையற்றவர்கள் தமது பரீட்சை முடிவுகளை இலகுவாகவும் வினைத்திறனுடனும் பெறுவதற்கு கணினியை அடிப்படையாகக் கொண்ட முறைமை ஒன்றை விருத்தி செய்வதாகும். | இம்முறைமை பார்வையற்றோர் தமது கல்வியை முறையாகத் தொடர்வதற்கு வழிசெய்யும். |
| 15 | Under Water Surveillance & Detection System<br><br>கடற்பரப்பில் உள்ளக நடவடிக்கைகளைத் தெரிவிப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணமாகும். இது கடற் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு உதவி செய்யும். ஆய்வின் கட்டம் 1 நிறைவடைந்துள்ளதுடன் தரவுச் சேகரிப்பு நடைபெறுகிறது. | |
| 16 | நாட்பட்ட சிறுநீரக நோயாளிகளுக்கான பூகோள தகவல் முறைமை<br><br>இச்செயற்றிட்டம் சிறுநீரக நோயாளிகளின் தரவுத்தளத்தை விருத்தி செய்வதற்கு வடிவமைக்கப்படுகிறது. இதனை சிறுநீரக நோயுடன் போராடும் சம்பந்தப்பட்ட சுகாதார அதிகாரிகளும் பயன்படுத்தலாம் | இம்முறைமை சிறுநீரக நோயாளிகளின் தரவினைப் பெறுவதற்கும் பகுப்பாய்வு செய்வதற்குமென கணினி மயப்படுத்தப்பட்ட சாதனம் ஒன்றாக விருத்திசெய்யப்படுகிறது. |
| 17 | HF/VHF, UHF Radio Transceiver இன் வடிவமைப்பும் அபிவிருத்தியும்<br><br>இவ்வாய்வின் நோக்கம் உள்ளூர் தொடர்பாடலுக்காக பாதுகாப்பான வானொலித் தொகுதியொன்றை விருத்தி செய்வதாகும். | அம்பிளிபயர் அலகின் மேம்பாடுகள் மற்றும் குறிமுறையாக்க மாதிரியின் அபிவிருத்தி என்பன நடைபெறுகின்றன. இச்செயற்றிட்டத்தை 2016 இறுதிக்குள் நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது. |

16.2 அட்டவணை : 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 2017 ஆம் ஆண்டிற்கும் கொண்டுசெல்லப்பட்ட செயற்றிட்டங்கள்

| | | |
|---|---|---|
| i. | **புகையிரதக் கண்காணிப்பு மற்றும் தகவல் முறைமை**<br><br>இச்செயற்றிட்டத்தின் நோக்கம் இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு அறையின் நிர்வாக நோக்கங்களுக்காக ஜி.பி.எஸ். தொழினுட்பத்தைப் பயன்படுத்தி புகையிரதங்களின் வழித்தடத்தை அடையாளம் காண்பதாகும். இது இலங்கைப் புகையிரதத் திணைக்களத் தால் நிதியிடப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு செயற்றிட்டமாகும். | அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் இச்செயற்றிட்டத்தை 2017 ஆம் ஆண்டில் புகையிரதத் திணைக்களத்தின் சகல புகையிரதங்களையும் உள்ளடக்கும் வகையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. |
| ii. | **யுத்தகளத்தில் பெறப்படும் புலனாய்வுகளை** ஒருங்கிணைத்தலும் (IPB), DSCSC இற்கான பயிற்சிப் போலியை விருத்தி செய்தலும்<br>பணியாளர் கல்லூரியின் பயிற்சி நோக்கங்களுக்காக ஜி.ஐ.எஸ். அடிப்படையிலான யுத்த விளையாட்டு மென்பொருள் ஒன்றை விருத்தி செய்தல் | இச்செயற்றிட்டத்தை 2017 ஆம் ஆண்டில் பணியாளர் கல்லூரியிடம் ஒப்படைக்க எதிர்பார்க்கப்படுகிறது. |
| iii. | **களனிவெளி புகையிரத மார்க்கத்தின் புனரமைப்பு**<br><br>கொழும்பு உபநகர புகையிரதச் செயற்றிட்ட (CSRP) நோக்கத்திற்காக CRD இனால் விருத்தி செய்யப்பட்ட குவாட் கொப்டர்ஸ் ஐப் பயன்படுத்தி களனிவெளி புகையிரத மார்க்கத்தின் வான்வழிப் படங்கள் மற்றும் நிகழ்படங்களை எடுப்பதற்கான ஒரு செயற்றிட்டமாகும். இது போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சினால் வழிநடத்தப்படுகிறது. | களனிவெளி புகையிரத மார்க்கப் புதுப்பிப்பு வேலையை ஆரம்பிப்பதற்காக களனிவெளி புகையிரத மார்க்கத்தின் வான்வழிப் படங்களையும் நிகழ்படங்களையும் வழங்குதல் |
| iv. | சிவில் பாதுகாப்புத் திணைக்களம்<br>இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பாதுகாப்பு அமைச்சின் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களின் தரவுகளைச் சேமிக்கவும் பகுப்பாய்வு செய்யவுமென தரவுத்தளம் ஒன்றை விருத்தி செய்தல் | இச்செயற்றிட்டத்தின் மென்பொருள் விரைவில் கையளிக்கப்படும். |
| | | |

16.3 அட்டவணை : 2016 இல் வேறு அரச நிறுவனங்களிலிருந்து பொறுப்பேற்கப்பட்டு 2017 இல் கையளிக்க எதிர்பார்க்கப்படும் செயற்றிட்டங்கள்

### 16.2.2 முப்படையினர் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவகங்களுக்கு CRD இனால் நடத்தப்பட்ட பயிற்சிகள்

- GIS தொழினுட்பம் தொடர்பாக முப்படையினர், பொலிஸ், விசேட அதிரடிப் படை, குற்றவியல் விசாரணைகள் திணைக்களம் மற்றும் அரச புலனாய்வுத் திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்த 50 உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- CRD இனால் விருத்தி செய்யப்பட்ட ரெஜிமென்டல் கணக்கீட்டு மென்பொருள் தொடர்பில் 600 அதிகாரிகள் மற்றும் 2500 ஏனைய பதிவி நிலையினர் ஆகியோருக்கு பயிற்சி வழங்கப்பட்டது.
- பாதுகாப்பு அமைச்சுக்காக அஞ்சல் முகாமைத்துவ முறைமை மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அது பற்றிய பயிற்சியும் வழங்கப்பட்டது.







### 16.2.3 கிடைக்கப்பெற்ற விருதுகள்

2016 இல் பின்வரும் விருதுகள் CRD இற்கு வழங்கப்பட்டன.

- தேசிய சிறந்த தர ICT விருது – 2016 - “ வெள்ளி” – தொற்று நோய் ஆய்வு மற்றும் கண்காணிப்பு முறைமை
- தாய்வானில் நடைபெற்ற பிரதிநிதித்துவ ஆசிய பசுபிக் ICT கூட்டணி விருது (APICTA விருது) இலங்கையிலிருந்தான ஒரேயொரு பிரதிநிதித்துவம் இதுவாகும்



## 16.3 2016.01.01 தொடக்கம் 2016.12.31 வரையான காலப்பகுதியில் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சினைகள், சவால்கள் பற்றிய பொதுவான மதிப்பீடு

- CRD ஆனது MOD இல் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மட்டுமே ஆய்வுச் செயற்றிட்டங்களுக்குத் தேவைப்படும் உருப்படிகள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தேவைப்பாட்டைக் கொண்டிருக்கிறது. இவ்வாறு தேவைப்படும் குறிப்பிட்ட சில உருப்படிகள் மற்றும் உபகரணங்களைப் பெறும்போது உயர் விலை கூறப்படுதல், குறிப்பிட்ட பொருட்களுக்கான வழங்குநர்கள் கிடைக்காமை, ஓடர் செய்யப்பட்ட உருப் படிகள் மற்றும் உபகரணங்களை வழங்குவதில் காணப்படும் தாமதம் போன்ற காரணங்களால் கஸ்டங்களை எதிர்நோக்குகின்றது. எனவே திறந்த சந்தையில் போட்டிமிக்க வழங்குநர்களிடமிருந்து உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்கான ஒரு பொறிமுறையை ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவை வலியுறுத்தப்படுகின்றது.
- பெரியளவிலான பிந்தைய தொழினுட்பங்களைப் பயன்படுத்தி, முப்படைகள் மற்றும் ஏனைய அரசாங்கத் திணைக்களங்களுக்கான ஆய்வுச் செயற்றிட்டங்கள் CRD இனால் முன்னெடுக்கப்பட்டதால் அவற்றுக்கு இடமளிப்பதற்காக இருக்கக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவாக காணப்படவில்லை.

## 16.4 எதிர்பார்க்கப்படும் முன்மொழிவுகள்

- முழுமையான ஆய்வு நிறுவகத்தைத் தாபித்து, சகல பகுதிகளினதும் முழுமையான தொழிற்பாடுகளை இயலச்செய்வதற்காக நவீன ஆய்வுகூட வசதிகளுடன்கூடிய 6 மாடிக் கட்டடத்தின் நிர்மாணத்தை ஆரம்பித்தல்
- CRD யிற்கான விசேடத்துவமிக்க ஆளணியினரை நேரடியாகச் சேர்த்துக்கொள்வதற்கான ஆயத்தங்களைச் செய்தல்
- CRD யின் ஆய்வு அலுவலர்களுக்கான விசேட ஆய்வுக் கொடுப்பனவை வழங்குவதற்கு ஒழுங்குகளைச் செய்தல்
- CRD செயற்றிட்டங்களில் பல்கலைக்கழகங்களின் உள்ளுறை முதிர் மாணவர்களுக்கு வசதியளிப்பதற்கு தேவையான ஒழுங்குகளைச் செய்தல்
- லங்கா லொஜிஸ்டிக் அன்ட் டெக்னோலொஜி லிமிட்டெட் ஊடாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முடிவுப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்குப் பொருத்தமான பொறிமுறையை விருத்தி செய்தல்
- மத்திய வீச்சு ஆளில்லா விமானத்திற்கான (MRUAV) மேம்பாடுகளை பூர்த்திசெய்தலும் அதனை வெளிநாட்டுச் சந்தைகளில் தாக்கல் செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்தலும்
- CRD இனை ஒரு சுயாதீனத் தாபனமாக மீளவும் தாபித்தல்

# 17. ஒன்றினைந்த சேவை மொழிப்பயிற்சி நிலையம்

## 17.1 மேலோட்டமான பார்வை

1986 ஆண்டு பாதுகாப்பு அமைச்சின் கீழ் இப்பயிற்சி நிலையம் மொழிப்பயிற்சி நிலையமாக ஆரம்பிக்கப்பட்டதோடு, பாதுகாப்பு துறையில் சேவை செய்யும் வீரர்களின் தமிழ் மொழி அறிவு மூலம் எழுது, வாசிக்கும், பேசும் திறனை வளர்ப்பதே இந்நிலையத்தின் பிரதான நோக்கமாகும். இதுவரை 93 பாடநெறிகள் சிறப்பாக நடாத்தி, முப்படை மற்றும் பொலிஸ் விஷேட அதிரடிப்படை வீரர்களுக்கு தமிழ் மொழி பயிற்சி வழங்கப்பட்டுள்ளதுடன், 119 அதிகாரிகளும் 8052 முப்படை மற்றும் பொலிஸ் அதிரடிப்படை வீரர்களும் இப்பாடநெறியை பயின்றுள்ளனர்.

## 17.2 வளர்ச்சி மீளாய்வு - 2016

- 2016 ஆண்டு 03 தமிழ் மொழிப்பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், இதற்காக முப்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 395 பேர்கள் பங்கேற்றுள்ளனர்.





- சிப்பாய்களின் நலனோம்பலுக்காக புதிய நலனோம்பல் வர்த்தக நிலையமொன்று நிர்மாணிக்க செலவு : 850,007.00 ரூபாய்
- புதிதாக சிகை அழங்கார நிலையம் நிர்மாணிக்க செலவு : 18,345.00 ரூபாய் பாடநெறி மாணவர்களுக்காக புதிய மலசலகூட கட்டிடமொன்று நிர்மாணிக்க செலவு : 369,095.00 ரூபாயஅதிகாரிகளின் வதிவிட நுழைவாயில் மற்றும் அதன் முற்றத்தை தார் இட்டு கார்ப்பட் போட
- இம்மொழிப்பயிற்சி நிலையத்தின் தேவைக்காக புதிய அதிகுளிர்சாதன பெட்டியொன்றை விலைக்கு வாங்க - செலவு 55,999.00 ரூபாய்
- கேட்போர் கூடத்துக்கு குறைப்பாடாக காணப்பட்ட விரிவுரை யாற்றும் மேசை விலைக்கு வாங்க - செலவு 11,500.00 ரூபாய்
- கணனி பிரிவு மற்றும் தொலைபேசி பரிவர்த்தனை பிரிவின் பாதுகாப்புக்காக புதிய குளிரூட்டியொன்றை பொருத்த - செலவு 75,699.00 ரூபாய்
- முகாமின் பாதுகாப்பு பிரிவு தங்கியிருக்கும் வதிவிடத்தை புணரமைக்க - செலவு 299,553.30 ரூபாய்
- முகாமின் அலங்காரத்தை நடாத்திச்செல்வதற்காக குறைப்பாடாக காணப்பட்ட புல்வெட்டும் இயந்திரமொன்றை விலைக்கு வாங்க - செலவு 42,500.00 ரூபாய்




17.1 : 2016 ஆம் ஆண்டில் இந் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்காக கலந்துக்கொண்ட முப்படை மற்றும் பொலிஸ் விஷேட அதிரடிப்படையின் அங்கத்தவர்கள் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு.

## 17.3 நிறுவனம் எதிர்க்கொள்ளும் பிரச்சினைகள்

- இப்பொழுது இந்நிலையத்தின் நிரந்தர கடமைப்புரியும் வீரர்களுக்கு மற்றும் பாடநெறியின் மாணவ மாணவிகளுக்கு தேவையான அளவு வதிவிட வசதி இல்லாமை.
- நிறுவனத்தின் நிருவாக வேலைகளுக்காக இலகுரக வாகனமொன்று இல்லாமை.
- தரைப்படையினால் புதிதாக முன்வைக்கப்பட்டுள்ள எரிபொருள் கொள்கை திட்டத்தின் காரணத்தினால் நிருவாக வேலைகளை செய்துக்கொள்ள வழங்கும் எரிபொருள் போதாமை.
- பாதுகாப்பு அமைச்சினால் இணைக்கப்பட்டுள்ள சிற்றூழியர்கள் சேவைக்கு வருகை தருவது அதிருப்தியான நிலையில் உள்ளமை.

## 17.4 எதிர்பார்க்கப்படும் முன்மொழிவுகள

- ஆங்கில மொழி பாடநெறி ஆரம்பித்தல்.
- புதிய காரியாலய கட்டிடமொன்றை நிர்மாணித்தல்.
- அதிகாரிகள் மற்றும் அதிகாரிகள் நிலையற்ற உத்தியோகத்தர்களுக்காக வதிவிடமொன்றை நிர்மாணித்தல்.
- பிரதான நுழைவாயில் அமைத்தல்.
- மாணவ அதிகாரிகளின் வதிவிடத்தை புணரமைத்தல்.

| பாடநெறி. இல | தை | மாசி | பங்குனி | சித்திரை | வைகாசி | ஆனி | ஆடி | ஆவணி | புரட்டாசி | ஐப்பசி | கார்த்திகை | மார்கழி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 91 | → | 22 | | | | | | | | | | |
| 92 | | | 16 | | | | | 26 | | | | |
| 93 | | | | | | | | | 05 | | | → |

17.1 அட்டவணை : 2016 ஆண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகளின் விபரங்கள் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு.

# 18. வரையறுக்கப்பட்ட லங்கா லொஜிஸ்ரிக் என் டெக்நொலஜி நிறுவனம்

## 18.1 மேலோட்டமான பார்வை

வரையறுக்கப்பட்ட லங்கா லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ரெக்னொலொஜீஸ் லிமிரெட் கம்பெனி தனது தொடக்கத்தில் இருந்தே கடந்த காலப்பகுதி பூராவிலும் மேற்கொண்டவாறு தொழில்வாண்மை ரீதியாகவும் அனைத்தையும் உள்ளடக்கியதாகவும் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவம்சார் யுத்த சாதனங்களை பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்குவதற்கான பெறுகை வசதிகளை வழங்குவதை வெற்றிகரமாக செய்துவந்துள்ளது. பின்னர் ல.லொ.ரெ.லி. கம்பெனி ஏனைய துறைகளை நோக்கித் தனது செயற்பாடுகளை பன்வகைமைப்படுத்தி உள்ளதோடு பாதுகாப்பு அமைச்சு மற்றும் அரசாங்கத்தின் ஒருசில நிறுவனங்களின் கீழ் இயங்கிவருகின்ற தேசிய பாதுகாப்பு தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற மிகமுக்கியமான ஒருசில கருத்திட்டங்களுக்கான கருத்திட்ட முகாமையாளர், மதியுரையாளர் மற்றும் தீர்வு வழங்குனராகவும் தற்போது செயலாற்றி வருகின்றது. தற்போது நடைமுறையிலுள்ள துரித பன்வகைமைப்படுத்தல் கருத்திட்டத்தின் ஒரு பகுதியாக முறையான தேர்ச்சியுடைய தரப்பினர்களுடன் ஒத்துழைத்து இலங்கை பாதுகாப்பு படைக்காக சுதேச பாதுகாப்பு கைத்தொழிலொன்றை நிறுவ ல.லொ.ரெ.லி. கம்பெனி கருதியுள்ளது.

## 18.2 பிரதான செயற்பாடுகள்

பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிசுக்காக பெறுகை வசதி வழங்குனராக ல.லொ.ரெ.லி. கம்பெனி ஆண்டில் நிலவிய கேள்வியை நிவர்த்தி செய்தது. புதிய தொழில்நுட்பவியலை அறிமுகஞ் செய்யும்பொருட்டு இறுதிப் பாவனையாளர்களுக்காக ஒருசில சமர்ப்பித்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் 2016 ஆம் ஆண்டில் மாலியில் சேவைக்காக ஈடுபடுத்தப்படவிருந்த இலங்கை இராணுவப் படையணிக்கு அவசியமான யுத்த சாதனங்களின் துரித பெறுகை நிகழ்ச்சித்திட்டத்திற்காக வசதிகளை வழங்குகையில்ல.லொ.ரெ.லி. கம்பெனி முதன்மைச் செயற்பொறுப்பினை ஈடேற்றியது. இந்த பெறுகை பல்வேறு வகையிலான இராணுவ வகையினங்களை உள்ளடக்கி இருந்தது.

சுதேச பாதுகாப்புக் கைத்தொழில் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமும் தகவல் பாதுகாப்பும் மற்றும் பாதுகாப்பு உட்கட்டமைப்பு வசதிகளைச் சார்ந்த கருத்திட்டங்களை அமுலாக்குதல்ல.லொ.ரெ.லி. கம்பெனியின் கருத்திட்டப் பிரிவின் பொறுப்பாகும். அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பெனிகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கு கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல் தொடர்பில் இப்பிரிவு தனது கருத்திட்டங்களை விரிவாக்கி கவனஞ் செலுத்தியுள்ளது.

| விபரம் | 2011/12 | 2012/13 | 2013/14 | 2014/15 | 2015/16 | 2016/17 ஒன்பது மாதங்களின் பெறுபேறுகள் (கணக்காய்வு செய்யப்படாதது) |
|---|---|---|---|---|---|---|
| | மில். ரூ. | மில்.ரூ. | மில். ரூ. | மில். ரூ. | மில்.ரூ. | மில். ரூ. |
| வருமானம் சார்ந்த செயலாற்றுகை | | | | | | |
| வருமானம் | 69.97 | 130.62 | 95.17 | 92.74` | 127.90 | 59.73 |
| மொத்த இலாபம் | 69.46 | 99.68 | 81.50 | 84.67 | 122.70 | 57.11 |
| வட்டி மற்றும் வரிக்கு முந்திய தொழிற்பாட்டு இலாபம் | 4.28 | 13.81 | 8.46 | 7.85 | 58.43 | 15.85 |
| வரிக்கு முந்திய இலாபம் | 7.62 | 17.38 | 14.49 | 12.05 | 61.84 | 23.10 |
| வரி | 2.91 | 3.23 | 4.70 | 3.31 | 8.54 | |
| வரிக்குப் பிந்திய இலாபம் | 4.71 | 14.15 | 10.88 | 7.42 | 53.30 | |
| சொத்துக்கள் பொறுப்புக்களின் நிலைமை | | | | | | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 15.48 | 12.53 | 8.56 | 10.76 | 5.63 | 3.6 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 194.46 | 159.09 | 157.02 | 149.73 | 215.51 | 207.36 |
| மொத்தச் சொத்துக்கள் | 209.94 | 171.62 | 165.75 | 160.49 | 221.14 | 210.96 |
| மொத்த உரிமைப்பங்குகள் | 106.97 | 107.32 | 109.22 | 110.39 | 162.98 | 180.72 |
| நடைமுறையல்லாப் பொறுப்புகள் | 19.30 | 4.08 | 4.04 | 7.32 | 5.47 | 5.46 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 83.67 | 48.14 | 52.50 | 42.77 | 52.70 | 24.77 |
| தேறிய சொத்துக்கள் | 106.97 | 119.39 | 109.22 | 110.39 | 162.98 | 180.72 |
| வெளிப்படுத்திய பங்கிலாபம் | - | 1.05 | 1.20 | 1.20 | 5.4 | |

18.1 அட்டவணை சென்ற வருடங்களில் ல.லொ.டெ.நி. நிதி முன்னேற்றம்

| விபரம் | 2011/12 | 2012/13 | 2013/14 | 2014/15 | 2015/16 |
|---|---|---|---|---|---|
| வீதப் பகுப்பாய்வு | | | | | |
| பங்கொன்றுக்கான ஈட்டல் (ரூ.) | 22,974 | 69,003 | 1.36 | 0.93 | 6.72 |
| பங்கொன்றுக்கான தேறிய சொத்துகள் (ரூ.) | 521,818 | 582,400 | 14.00 | 13.8 | 20.37 |
| உரிமைப் பங்குகள் மீதான இலாபம் % | 4.40 | 11.85 | 9.97 | 6.72 | 32.71 |
| மொத்த சொத்துக்கள் மீதான இலாபம் % | 2.24 | 8.24 | 6.57 | 4.62 | 24.10 |
| மொத்த இலாப வீதம் % | 99.28 | 76.31 | 85.63 | 91.30 | 99.68 |
| தொழிற்பாட்டு இலாப வீதம் % | 6.12 | 13.31 | 16.36 | 11.57 | 47.44 |
| தேறிய இலாப வீதம் % | 6.73 | 10.58 | 8.89 | 8.47 | 43.30 |
| நடைமுறைச் சொத்துக்கள் வீதம் ( தடவைகள்) | 2.32 | 3.30 | 2.99 | 3.50 | 4.0 |

18.2 அட்டவணை: வருமானம் செயற்பாட்டு அறிக்கை




18.1 நிரல் படம்: சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலைமை




18.2: நிரல் படம்




18.3 நிரல் படம்: பௌதீக முன்னேற்றம்

- 2016 ஆம் ஆண்டில் நடுத்தர மற்றும் பாரிய அளவிலான எண்பத்தொன்பது (89) பெறுகை வசதிகள் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான (ஒப்பந்தங்கள்) வேலைகள் நிறைவு செய்யப்பட்டன.

| கருத்திட்டம் | ல.லொ.ரெ.லி. கம்பெனியின் செயற்பொறுப்பு | விபரம் | 2016 இல் நிறைவு செய்யப்பட்ட |
|---|---|---|---|
| அரச உளவுச் சேவைக்கான முறைமை தன்னியக்கமயமாக்கல் கருத்திட்டம் | கருத்திட்ட முகாமையாளர் | அரச உளவுச் சேவையிடம் உள்ள பதிவேட்டு அடிப்படையிலான தகவல்களின் இலக்கமுறைப்படுத்தல் இக்கருத்திட்டத்தில் உள்ளடங்குகின்றது. இக்கருத்திட்டத்தின் கருத்திட்ட முகாமையாளராக அமைவது ல.லொ.ரெ.லி. கம்பெனியாகும்.<br><br>வன்பொருள்கள்: வன்பொருள் பீடம் மற்றும் வலையமைப்பு உட்கட்டமைப்பு<br>பிரயோக மென்பொருள்: பதிவேட்டு அடிப்படையிலான தகவல் வேலைப்பாய்வு ஊடாக இலக்கமுறையாக்கல் | இரண்டு ஆக்கக்கூறுகளுக்குமான கேள்விப்பத்திரங்கள் பூர்த்திசெய்யப்பட்டு அளிப்புச் செய்யப்பட்டது. வன்பொருள்களின் பிரதான பாகங்கள்2016 இன் இறுதியில் வழங்கப்பட்டிருந்தன.<br><br>முன்னேற்றம்:<br>வன்பொருள்: 60%<br><br>பிரயோக மென்பொருள் : 30% |
| மூலோபாய பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்புக் (மூ.பா.தொ.வ.) கருத்திட்டம் | பெறுகை வசதிவழங்குனர் | மூ.பா.தொ.வ. கருத்திட்டம் ஐந்து கேள்விப் பத்திரங்களை உள்ளடக்கியதாகும்.<br>கேள்விப் பத்திரம்I: உத்தேச சுய உதவி நான்கு பாத தொடர்பாடல் கோபுரங்களை நிர்மாணிக்க இனங்கண்ட பதினொரு இடங்களின் துளையிடுதல் மூலமாக மண் பரிசோதனையை மேற்கொள்ளலும் மண் பரிசோதனை அறிக்கைகளை சமர்ப்பித்தலும்.<br>கேள்விப் பத்திரம் II: மூடிகளுடனான ஒலித்தடுப்பு செய்யப்பட்டஇருபத்திரண்டு (22)மின்பிறப்பாக்கி கூறுகளைவழங்கல், கொண்டுவந்து ஒப்படைத்தல், பொருத்துதல் மற்றும் இயக்குதல்.<br>கேள்விப் பத்திரம்III: உபகரணக் கூடங்களைக்கொண்ட ஐந்து (05)சுய உதவி தொடர்பாடல் கோபுரங்களை வழங்குதல், கொண்டுவந்து ஒப்படைத்தல், நிர்மாணித்தல், பொருத்துதல் மற்றும் அமுலாக்கல் பெறுகை.<br>கேள்விப் பத்திரம்IV: உபகரணக் கூடங்களைக்கொண்ட ஆறு (06)சுய உதவி தொடர்பாடல் கோபுரங்களை வழங்குதல், கொண்டுவந்து ஒப்படைத்தல், நிர்மாணித்தல், பொருத்துதல் மற்றும் அமுலாக்கல் பெறுகை.<br>கேள்விப் பத்திரம்V: செறிவான அலைவரிசை வானொலி தொடர்பாடல் முறைமைகளை வழங்குதல், கொண்டுவந்து | கேள்விப்பத்திரம்Iமற்றும்IIசார்ந்த அனைத்துச் செயற்பாடுகளும் 2015 இல் நிறைவுசெய்யப்பட்டன.<br>கேள்விப் பத்திரம் III, IVமற்றும்V 2016 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டன. பாதுகாப்பு அமைச்சு இந்த மூன்று கேள்விப்பத்திரங்களுக்காக கேட்புவிலை கோரியதோடு அவற்றின் மதிப்பீட்டுச் செயற்பாடு கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்தன.<br>கருத்திட்டங்களின் முன்னேற்றம்:ல.லொ.ரெ.லி. கம்பெனிக்கு கையளிக்கப்பட்ட பெறுகை வசதி தொடர்பான கேள்விகள் III, IV, V என்பவற்றுக்காக 80%. |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்படைத்தல், பொருத்துதல் மற்றும் அமுலாக்கல். பெறுகை. | |
| சிறிய ஆயுத தயாரிப்புத் தொழிற்சாலையொன்றை நிறுவுதல் | கருத்திட்ட முகாமையாளர் | 7.62 x39 மி.மீ உற்பத்தி தொழிற்சாலையொன்றை நிறுவுதல் | ஏற்றுக்கொள்ளப்பட்ட உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்பட்ட தொழில்நுட்ப மற்றும் வரவுசெலவு முன்மொழிவுகள் இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. பூர்வாங்கத் திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| மிகையான இராணுவ உபகரணங்களை விற்பனை செய்தல். | பெறுகை வசதிவழங்குனர் | மிகையான இராணுவம்சார் உபகரணங்களையும் யுத்தசாதனங்களையும் கையகற்றல். | மிகையான கையிருப்புகளை கையகற்றுவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது. நெறிப்படுத்தல் குழுவொன்றும் மதிப்பீட்டுக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. ல.லொ.ரெ.லி. கம்பெனி கேள்விப்பத்திர ஆவணங்களைத் தயாரித்ததோடு பண்டங்களை விற்பனை செய்வதற்காக பாதுகாப்பு அமைச்சு மட்டுப்படுத்தப்பட்ட கேள்வி நடைமுறை ஊடாக விலைமனுக்கள் கோரப்பட்டன. ல.லொ.ரெ.லி. கம்பெனியால் மென்மேலும் நேரடியான விலைமனுக்கள் பெறப்பட்டுள்ளன. தெரிவுசெய்யப்பட்ட வகையினங்களை விற்பனை செய்வதற்காக பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| சமுத்திரஞ்சார் கண்காணிப்பு முறைமைக் கருத்திட்டம் | கருத்திட்ட முகாமையாளர் | விரிவானஒருங்கிணைந்த சமுத்திரஞ்சார் கண்காணிப்பு முறைமையை நிறுவுதல். | ல.லொ.ரெ.லி. கம்பெனி பூர்வாங்க மதிப்பீடுகளை நிறைவுசெய்து கருத்திட்ட முன்மொழிவுகள் அங்கீகாரத்திற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன. திணைக்களத்தில் இன்றளவில் அது அங்கீகரிக்கப்பட்டு நிதிசார் சாத்தியப்பாட்டுக்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| சமுத்திரஞ்சார் விபத்துகள் பாதுகாப்பு இணைப்பாக்க நிலையக் கருத்திட்டம் | கருத்திட்ட முகாமையாளர் | சமுத்திரஞ்சார் தேடல் மற்றும் விபத்து பாதுகாப்பு தொழிற்பாட்டு முறைமையொன்றினை நிறுவுதல். | ல.லொ.ரெ.லி. கம்பெனியால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவினைக் கட்டங்கட்டமாக அமுலாக்க தேசிய திட்டமிடல் திணைக்களம் அங்கீகாரம் வழங்கி உள்ளது. ல.லொ.ரெ.லி. கம்பெனியால் தயாரிக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | | அமைச்சரவைப் பத்திரம் பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது. |
| இராணுவ தரத்தைச் சேர்ந்த பாதணிகள் தயாரிப்புத் தொழிற்சாலையொன்றினை தாபித்தல் | கருத்திட்ட முகாமையாளர் | பாதுகாப்பு படையினருக்கான இராணுவ தரத்தைச் சேர்ந்த பாதணிகள் தயாரிப்புத் தொழிற்சாலையொன்றினை தாபித்தல் | கருத்திட்ட சாத்தியவள ஆய்வு நிறைவுசெய்யப்பட்டுள்ளது. அங்கீகாரத்திற்காக கருத்திட்ட முன்மொழிவொன்றை தயாரிக்கும் பொருட்டு ல.லொ.ரெ.லி. கம்பெனி உள்நாட்டினைப் போன்றே வெளிநாட்டுத் தரப்பினர்களுடனும் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| இராணுவத்திற்குச் சொந்தமான நிறுவனங்களுக்காக சூரிய சக்திவலுப் பிறப்பாக்கி பொறியகத்தை நிறுவுதல். | கருத்திட்ட முகாமையாளர் | பாதுகாப்பு படையினருக்கு சூரிய சக்திவலுவினை அறிமுகஞ் செய்வதற்கான ஒழுங்குறுத்தல் கருத்திட்டமொன்றினை ல.லொ.ரெ.லி. கம்பெனி 2012 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. சீனாவின் சீரெக் இன்ரநெஷனல் கம்பெனியின் உதவியுடன் ஒன்று 20 கிலோவொற் கொண்ட சூரிய சக்திவலு பொறித்தொகுதிக்கான மூன்று கருத்திட்டங்கள் ல.லொ.ரெ.லி. கம்பெனி 2014 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக தாபிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வில் முப்படைகளும் இந்த சக்திவலு பொறித்தொகுதிகளில் திருப்திகரமான செயலாற்றுகையை பதிவுசெய்தமையால் பாதுகாப்புச் செயலாளர், பாதுகாப்பு பதவியணி தலைமையதிகாரி மற்றும் முப்படைத் தளபதிகளின் உத்தியோகபூர்வ குடிமனைகளை உள்ளிட்ட இராணும் மற்றும் எஞ்சிய நிறுவனங்களுக்கும் சூரிய சக்திவலுவினை அறிமுகஞ்செய்ய பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்தது. | இக்கருத்திட்டத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதிசார் ஒத்துழைப்புக்காக பாதுகாப்பு அமைச்சு சீனாவின் சீரெக் இன்ரநெஷனல் கம்பெனியுடன் 2016 ஆம் ஆண்டில் உடன்படிக்கையொன்றினை செய்துகொண்டது.<br><br>பூர்வாங்க சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| தோட்டாக்களின் பாகங்களை பிரித்தெடுக்கும் பொறித்தொகுதியைக் கொள்வனவு செய்தல் | பெறுகை வசதிவழங்குனர் | காலாவதியான தோட்டாக்களை பாதுகாப்பாக கையகற்றுவதற்காக நடமாடும் வகையைச் சேர்ந்த தோட்டாக்களின் பாகங்களை பிரித்தெடுக்கும் பொறித்தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | தோட்டாக்களின் பாகங்களை பிரித்தெடுத்தல் பற்றி நிலவுகின்ற தொழில்நுட்பம் மற்றும் அத்தகைய பொறித்தொகுதியின் தயாரிப்பாளர்கள் தொடர்பிலான அடிப்படைக் கற்கையொன்றினை பாதுகாப்பு அமைச்சு சார்பாக ல.லொ.ரெ.லி. கம்பெனி மேற்கொண்டது. இந்த அறிக்கையை அடிப்டையாகக்கொண்டு பொருத்தமான வர்த்தகர்களிடமிருந்து தொழில்நுட்ப மற்றும் நிதிசார் முன்மொழிவுகளை கோருவதற்கான |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆவணங்களைத் தயாரிப்பதற்காக ல.லொ.ரெ.லி. கம்பெனிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.<br><br>முன்மொழிவுக்கான கோரிக்கையை ல.லொ.ரெ.லி. கம்பெனி பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் 2017 சனவரி மாதத்தில் சமர்ப்பித்தது. |
| கண்டி மாநகர சபைக்கான தன்னியக்கமயமாக்கல் கருத்திட்டம் | தீர்வு வழங்குனர் | பொதுமக்களுக்கு சேவையாற்றுகையில் வினைத்திறனை முன்னேற்றுவதற்கான முயற்சியாக தனதுசெயற்பாடுகளை தன்னியக்கமயமாக்கும் பொருட்டு கண்டி மாநகரசபை கருத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.<br><br>வலையமைப்புக் கருத்திட்டம்: 130 கணனிகளை ஒன்றுடனென்று இணைக்கும்பொருட்டு சேவைவழங்குனரை அடிப்படையாகக்கொண்ட கணனி வலையமைப்பொன்று அறிமுகஞ் செய்யப்பட்டது.<br><br>பிரயோக மென்பொருள் கருத்திட்டம்: ஆதன வரி, ஏனைய பல்வேறு வரிகள், வழங்கல்கள், நீர்க்கட்டணக் கணக்குகள் மற்றும் இறுதிக் கணக்குகள் போன்ற துறைகளுக்காக பிரயோக மென்பொருள்களை அறிமுகஞ்செய்தல். | இந்த இரண்டு கருத்திட்டங்களையும் ல.லொ.ரெ.லி. கம்பெனி பொறுப்பேற்றுள்ளது.<br>முன்னேற்றம்:<br>வலையமைப்பாக்கலும் வன்பொருள்களும் தாபிக்கப்பட்டுள்ளன.<br>மென்பொருள்கள் தயாரிக்கப்பட்டு வருவதோடு ஒரு மொடியுல் ஏற்கெனவே தாபிக்கப்பட்டுள்ளது. |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்துடனான ஒத்துழைப்பு | பெறுகை வசதிவழங்குனர் | பாதுகாப்பு அமைச்சின்ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் இராணுவத்திற்காக பாதுகாப்புடன் தொடர்புடைய முடிவுப்பொருட்களை உற்பத்தி செய்துள்ளது.<br><br>இந்த முடிவுப்பொருட்களை உலகளாவிய ரீதியில் சந்தைப்படுத்துவதற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்துடன் பங்காண்மையுடன் செயலாற்றி வருகின்றது. | பாதுகாப்பு சார்ந்த உற்பத்திகளை விற்பனைசெய்வதில் ஈடுபட்டுள்ள ஒருசில வர்த்தகர்களுடன் ல.லொ.ரெ.லி. கம்பெனி தொடர்புகொண்டுள்ளதோடு அவர்களின் பிரதிபலிப்பினை எதிர்நோக்கி உள்ளது. |
| இலங்கை நெனோ தொழில்நுட்ப நிறுவகத்துடனான ஒத்துழைப்பு | பெறுகை வசதிவழங்குனர் | இலங்கை நெனோ தொழில்நுட்ப நிறுவகம் நெனோ தொழில்நுட்பம் தொடர்பான பல ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது. இந்த ஆராய்ச்சித்துறைகளின் பெறுபேறுகளை இலங்கை பாதுகாப்பு படையினரால் பாவனைக்கு எடுக்க இயலும். | தனது பாவனைக்கு பொருத்தமான முடிவுப்பொருட்களை இனங்காண்பதற்காக இலங்கை நெனோ தொழில்நுட்ப நிறுவகத்துடன் கூட்டாக ல.லொ.ரெ.லி. கம்பெனி பாதுகாப்பு அமைச்சுக்காக விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளை நடத்தி உள்ளது. |
| வெப் தள அபிவிருத்தி | தீர்வு வழங்குனர் | தனது பன்வகைமைப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக | நீதி அமைச்சுக்காக லோ - நெற், இலங்கை |

| | | | |
|---|---|---|---|
| | | தீர்வு வழங்குனர் என்ற வகையில் ல.லொ.ரெ.லி. கம்பெனி தகவல் தொழில்நுட்பத்துறையில் பிரவேசித்துள்ளது. அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்பாண்மைகளுக்கு பாதுகாப்புமிக்க வெப்தளங்களைத் தயாரித்தலும் அமுலாக்குதலும் அதன் முதற்கட்டமாக அமைகின்றது. | உணர்விழக்கச்செய்விக்கின்ற மற்றும் தீவிர பிரிவின் மருத்துவர்கள் சங்கத்திற்கான SAARCAA 2017. |

18.3 அட்டவணை: கருத்திட்டப் பிரிவு

| கருத்திட்டம் | விபரம் |
|---|---|
| தேசிய ஆட்கள் பதிவக (தே.ஆ.ப.) கருத்திட்டம் | இக்கருத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கான பெறுகை வசதிகளை ல.லொ.ரெ.லி. கம்பெனி நிறைவுசெய்து சம்பந்தப்பட்ட ஆவணங்களை பாதுகாப்பு அமைச்சு ஊடாக உள்ளக அலுவல்கள் அமைச்சுக்கு ஒப்படைத்தது.<br><br>இப்பணிக்கான கொடுப்பனவுகள் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் ல.லொ.ரெ.லி. கம்பெனிக்கு செலுத்தப்பட்டது. |
| பொலிசு தகவல் மற்றும் தொடர்பாடல் முறைமை | கருத்திட்டங்களின் திட்டமிடல் மற்றும் பெறுகை தொடர்பான அனைத்து ஆவணங்களும் சட்டமும் ஒழுங்கும் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது. |
| நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கான தொழில்முயற்சி வளங்கள் திட்டமிடல் தீர்வு | இறுதி தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கை நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டது. |
| வெற்று பீரங்கி தோட்டாக்களின் பித்தளை உறைகளை விற்பனை செய்தல் | அங்கீகாரத்தின் பொருட்டு அமைச்சரவை நிருபம் பாதுகாப்பு அமைச்சு ஊடாக சமர்ப்பிக்கப்பட்டது. |

18.4 அட்டவணை: கீழே காட்டப்பட்ட கருத்திட்டங்களில் ல.லொ.ரெ.லி. கம்பெனியின் தொடர்பு 2016 ஆம் ஆண்டில் முடிவடைந்தது.

**கொள்திறன் அபிவிருத்தி** : அமைப்பாண்மைசார்ந்த அபிவிருத்தி மற்றும் வெற்றிக்காக பதவியணியின் பயிற்சி மிகவும் முக்கியமானதென ல.லொ.ரெ.லி. கம்பெனி கருதுகின்றது. ஊழியரொருவர் நன்கு பயிற்றப்பட்டால் அவர் வினைத்திறன்மிக்கவராகவும் பயனுறுதிமிக்கவராகவும் அமைவார். தனது தொழில் பொறுப்புகள் பற்றிய மிகவும் பலமான புரிந்துணர்வு ஊழியரிடம் இருப்பதால் பயிற்சி மூலமாக ஊழியரின் நம்பிக்கையும் கட்டிவளர்க்கப்படும். இந்த நம்பிக்கை காரணமாக சிறப்பாக கடமைகளைப் புரியவும் தனது திறமைகளை வெளிக்காட்டவும் உதவுகின்ற புதிய கருத்துக்கள் பற்றிச் சிந்திக்கவும் அவர்களுக்கு தூண்டுதல் ஏற்படும். அத்துடன் இடையறாத பயிற்சி துரிதமாக மாறிவருகின்ற தொழில்முயற்சி சுற்றுச்சூழலின் புத்தம்புதிய விருத்திப்போக்குகள் பற்றி ஊழியர்கள் விழிப்புணர்வூட்டப்படுவர். திறன்கள்கொண்ட மற்றும் மாறிவருகின்ற தொழில்முயற்சி சுற்றுச்சூழலில் உச்சமட்டத்தில் இருக்கின்ற முறையாக பயிற்றப்பட்ட ஊழியர்கள் தொழில்முயற்சி வட்டத்தில் தலைவராகவும் பலம்பொருந்திய போட்டியாளராகவும் தனது அந்தஸ்தினைப் பேணிவர ல.லொ.ரெ.லி. கம்பெனி உறுதுணையாக விளங்குமென்பதில் சந்தேகமே கிடையாது.

அதற்கிணங்க கருத்திற்கொள்ளப்பட்ட காலஎல்லைக்குள் 09 பதவியணியினருக்கு 07 பிரதான துறைகளில் ல.லொ.ரெ.லி. கம்பெனி பயிற்சி அளித்துள்ளது.

## 18.3 2017 இல் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ள பணிகள்

- 2017 ஆம் ஆண்டிலும் அதற்கு அப்பாலும் பூர்த்தி செய்வதற்கான எண்பத்திரண்டு (82) பெறுகை வசதிகள் நிகழ்ச்சித்திட்டங்கள் ஈடேற்றப்பட்டு வருகின்றன.
- அரச உளவுச் சேவைகள் கருத்திட்டம்
- மூலோபாய பாதுகாப்பு அபிவிருத்தி வலையமைப்புக் கருத்திட்டம்

- சிறிய அளவிலான ஆயுத உற்பத்தி தொழிற்சாலையொன்றை நிறுவுதல்
- மிகையான இராணுவம்சார் சாதனங்களை விற்பனை செய்தல்
- சமுத்திரஞ்சார் கண்காணிப்பு முறைமைக் கருத்திட்டம்
- சமுத்திரஞ்சார் விபத்துக்கள் பாதுகாப்பு இணைப்பாக்க நிலையக் கருத்திட்டம்
- இராணுவத்திற்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான சூரிய சக்திவலு பிறப்பாக்கல் பொறியகத்தை தாபித்தல்
- தோட்டாக்களின் பாகங்களை பிரித்தெடுப்பதற்கான பொறித்தொகுதிக் கொள்வனவு
- கண்டி மாநகரசபைக்கான தன்னியக்கமயமாக்கல் கருத்திட்டம்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்துடனான ஒத்துழைப்பு
- இலங்கை நெனோ தொழில்நுட்ப நிறுவகத்துடனான ஒத்துழைப்பு
- வெப் தள அபிவிருத்தி

## 18.4 சிக்கல்களும் சவால்களும்

- பாதுகாப்பு படையினருக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்காக வருமதியான பணத்தை பெற்றுக்கொள்வதிலான சவாலை தொடர்ச்சியாக எதிர்நோக்கியது.
- பாதுகாப்பு அமைச்சின் விடயப்பரப்பில் அடங்குகின்ற பிரதான கருத்திட்டங்கள் பலவற்றை ஆரம்பிக்கையில் வழங்கிய சேவைகளுக்காக உறப்பட்ட செலவுகளை செலவுமீளளிப்புச் செய்கையில் இடம்பெற்ற அநாவசியமான தாமதிப்புகள்.
- வரையறைகள் விதிக்கப்பட்ட பண்டங்களுக்காக வெளிநாட்டு வழங்கலாளர்களின் உள்நாட்டுப் பிரதிநிதிகள் உருவாதல்.
- வரையறைகள் விதிக்கப்பட்ட இராணுவப் பண்டங்களை வழங்குகையில் அரசாங்கத்தின் ஒருசில மட்டுப்பாடுகளும் சர்வதேச ஒழுங்குவிதிகளும்.
- துரிதமாக வர்ந்துவருகின்ற தொழில்நுட்பம் காரணமாக பதவியணியின் திறன்களை இடையறாமல் தரமுயர்த்தவேண்டி நேரிடுதல்.
- பாதுகாப்பு தொடர்பான சுதேச கைத்தொழிலை ஆரம்பித்தலும் அபிவிருத்தி செய்தலும்
- அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களுக்கான பெறுகை வசதிகள் செயற்பாட்டின் விரிவாக்கம்.
- அரசாங்க நிறுவனங்களுக்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கருத்திட்டங்களை அறிமுகஞ்செய்தல்.

## 18.5 எதிர்பார்க்கப்படும் முன்மொழிவுகள

பலம்பொருந்தியதும் உறுதியானதுமான ஈட்டல்கள், காசுப் பாய்வு மற்றும் பெறுமதி சேர்த்தல்களை பிறப்பிக்கும் நோக்கத்துடன் தொடர்புடைய பல்வகைமைப்படுத்தப்பட்ட நிறுவனமென்ற வகையில் ல.லொ.ரெ.லி. கம்பெனி இடஅமைவு பெற்று வருகின்றது. பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களை அகப்படுத்திக்கொள்கின்ற அதேவேளையில் மாறுவருகின்ற ஒரு சூழலில் கம்பெனியின் உறுதிநிலையினை மேம்படுத்திக்கொள்ள இந்த பன்வகைமைப்படுத்துதல் ல.லொ.ரெ.லி. கம்பெனிக்கு ஆற்றலை வழங்குகின்றது. வழமையான பெறுகை வசதிகளை வழங்குகின்ற செயற்பாடு நீங்கலாக ல.லொ.ரெ.லி. கம்பெனி பாதுகாப்பு சார்ந்த தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதை இலக்காகக்கொண்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களைப் போன்றே தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருத்திட்டங்களை நிறைவேற்றுவதிலும் ஈடுபட்டு வருகின்றது. அவை மத்தியில் தனித்துவமான கருத்திட்டங்களாக அமைவன:

- தேசிய சமுத்திரஞ்சார் ஆற்றல்களை விருத்தி செய்வதற்கான முறைமைகளை அறிமுகஞ் செய்தல்.
- பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புக்காக தொடர்பாடல் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல்
- தேசிய தகவல் முறைமைகளை முன்னேற்றகரமாக்குதல்
- செயற்பாடுகளை மீளத் திட்டமிடல் சார்ந்த கருத்திட்டங்களை ஆரம்பித்தலும் உள்ளக பாதுகாப்பு அவசியப்பாடுகளுக்கான தீர்வுகளை புதுப்பித்தலும்
- சிறிய அளவிலான விட்டம்கொண்ட தோட்டாக்களை உற்பத்திசெய்கின்ற பொறித்தொகுதி போன்ற பாதுகாப்புடன் தொடர்புடைய சுதேச கைத்தொழில்களை ஆரம்பித்தலும் அபிவிருத்தி செய்தலும்

# 19. தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவகம்

## 19.1 மேலோட்டமான பார்வை

தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவகம், இலங்கை, பாதுகாப்பு அமைச்சின் கீழ் தேசிய பாதுகாப்பு சிந்தனையாளர் குழாம் ஒன்றாக அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் 2016 ஆகஸ்ட்டில் தாபிக்கப்பட்டது. இது பாதுகாப்புச் சூழ்நிலையை நன்கு விளங்கிக்கொள்வதற்காகவும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்குடன் அது சம்பந்தமாக விவாதித்து, கலந்தாலோசனை செய்து ஆய்வு செய்யும் நிபுணத்துவத்தின் ஊடாக கைவினை ஆதாரத்தின் அடிப்படையிலமைந்த கொள்கைத் தெரிவுகள் மற்றும் தந்திரோபாயத்திற்காக அரசாங்கத்துடன் இணைந்து வேலை செய்வதற்காகவும் என உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு பணிப்பாளர் நாயகம் அசங்க அபேகுணசேகர தலைமை வகிக்கிறார். ஆரம்பத்தில் அதன் வரையறுக்கப்பட்ட தொழிற்பாடுகளை முன்கொண்டு செல்வதற்காக ஒரு சில தற்காலிக அலுவலர்களை இந்நிறுவகம் கொண்டிருந்தது. அதனைத் தொடர்ந்து 2017 சனவரி 02 ஆந் திகதி முதல் செயற்படத் தொடங்கிய INSSSL, தற்போது இரண்டு பணிப்பாளர்கள், ஒரு ஆராய்ச்சிப் பகுப்பாய்வாளர், மூன்று ஆராய்ச்சி உதவியாளர்கள் மற்றும் ஒரு சில பயிற்சி பெறுவோருடன் நிரந்தர பதவியணி அலுவலர்களைக் கொண்டிருக்கிறது. தொடங்கப்பட்ட திகதியிலிருந்து நிறுவகத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் கீழே பட்டியலிடப்படுகிறது.

### 19.1.1 நிறுவகத்தின் நோக்கு:

- உயர் தரம் வாய்ந்த ஆராய்ச்சி மற்றும் அதிசிறந்த பகுப்பாய்வின் ஊடாக கொள்கை மற்றும் தீர்மானமெடுத்தலை மேம்படுத்துதல்

### 19.1.2 நிறுவகத்தின் பணி:

- பாதுகாப்பு அமைச்சின் நோக்கத்திற்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதற்கான உயர் தரம் வாய்ந்த ஆராய்ச்சியிலிருந்து ‘பிராந்திய ஒருமைப்பாட்டுடன்கூடிய பாதுகாப்பான இறைமையுள்ள நாட்டினை பாதுகாப்பதற்கான தந்திரோபாயத் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை அமைத்தலும் செயற்படுத்தலும்’

### 19.1.3 நோக்கங்கள்:

- உள்ளக மற்றும் வெளியக அச்சுறுத்தல்களிலிருந்து இலங்கையைப் பாதுகாப்பதற்கான தேசிய பாதுகாப்பு விடயங்கள் மீதான ஆழமான மற்றும் உரிய நேர மதிப்பீடுகளை வழங்குதல்
- இலங்கையின் பாதுகாப்பு மற்றும் நிலைப்புத்தன்மையைப் பாதிக்கின்ற பிரச்சினைகள் பற்றி ஒன்றாகச்சேர்ந்து விவாதித்துக் கலந்துரையாடுவதற்கு அரசாங்கம், தனியார் துறை மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றுக்கான ஒரு தளமாகச் செயற்படுதல்
- கலந்தாய்வுக்கான ஒரு கருவாகவும் தேசிய பாதுகாப்பு அம்சங்களைக் கொண்ட நிறுவ கங்களை வலுப்படுத்துவதற்கான ஒரு இயல்திறன் கட்டமைப்பாளராகவும் செயற்படுதல்
- தேசத்தின் ஒருமைப்பாடு மற்றும் ஒற்றுமைக்கு அர்ப்பணித்த அறிஞர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் ஆகிய இருவரினதும் அறிவின் ஓர் மத்திய களஞ்சியமாகச் செயற்படுதல்

## 19.2 2016 ஆகஸ்ட் தொடக்கம் டிசெம்பர் வரையான காலப்பகுதிக்கான சாதனைகள்

2016 ஆகஸ்டில் நிறுவனம் தாபிக்கப்பட்டதிலிருந்து நடைபெற்ற நிகழ்வுகள் / பயன்கள் / சாதனைகள் பின்வருமாறு:

### 19.2.1 வட்ட மேசைக் கலந்துரையாடல்கள்

#### INSSSL பாதுகாப்பு கூடம்

INSSSL பாதுகாப்பு கூடமானது, உரிய நேரத்திலும் தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச பாதுகாப்பு அக்கறையுடன் தொடர்புடைய தொனிப்பொருள் பற்றிய கலந்துரையாடல்களை உருவாக்கும் நோக்கத்துடன் தெரிவுசெய்யப்பட்ட புகழ்பெற்ற மாநாடுகளை நடாத்தும் ஒரு மூடிய கதவு வட்ட மேசை நிகழ்வாகும்.




- 2016 அக்டோபர் 5 ஆந் திகதி பாதுகாப்பு அமைச்சினால் ‘*பாதுகாப்பு கூடம்*’ தொடங்கி வைக்கப்பட்டது. இது அறிவார்ந்த ஊக்குவிப்பையும், ராஜதந்திர மற்றும் அரசியல் விவாதங்களுக்கான ஒரு இடத்தினை கொழும்பில் உருவாக்கியிருந்ததுடன் தெரிவுசெய்யப்பட்ட பார்வையாளரால்

குறிப்பிட்ட தொனிப்பொருள் ஒன்றின் மீது கலந்தாய்வையும் உருவாக்கியது. 'இந்திய பாகிஸ்தான் நிலைமை' என்ற தலைப்பு மீதான சிறப்புப் பேச்சாளராக பேராசிரியர் எமிரிட்டஸ் எஸ்.டி. முனி, பாதுகாப்புக் ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வு நிறுவனத்தின் புகழ்பெற்ற சகா (IDSA), புதுடில்லி அவர்கள் இருந்தனர். கொழும்பில் இவ்வகையான முதலாவது கூட்டம் பாதுகாப்புச் செயலாளர் பொறி. கருணாசேன ஹெட்டியாராச்சி தலைமையில் நடைபெற்றதுடன் இதில் அறிஞர்கள், இராஜதந்திர சமூக உறுப்பினர்கள் மற்றும் படைச் சேவையைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

- பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவகம், இலங்கை (INSSSL) தனது இரண்டாவது 'பாதுகாப்பு கூடத்தை' பாதுகாப்பு அமைச்சில் 2016 அக்டோபர் 28 இல் நடாத்தியது. தந்திரோபாயக் கற்கைகளுக்கான பிராந்திய நிலையத்தின் (RCSS) நிறைவேற்றுப் பணிப்பாளர் 'உலகமயமாதல் காலத்தின் பாதுகாப்பு' என்ற தொனிப்பொருளில் சிறப்புரை ஆற்றியிருந்தார். இதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பொறி. கருணாசேன ஹெட்டியாராச்சி தலைமைதாங்கியிருந்ததுடன் INSSSL இன் பணிப்பாளர் நாயகம் அசங்க அபேகுணசேகர திறந்த கருத்துக்களை முன்வைத்திருந்தார். டாக்டர் அஹமட் அவர்கள் மாநிலங்கள் மற்றும் மாநிலங்களற்ற நடிகர்கள் தற்போதைய பூகோள அரசியலில் அதிக ஈடுபாடு கொண்டிருப்பது பற்றிப் பேசியிருந்தார்.
- பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவகம், இலங்கை (INSSSL) தனது மூன்றாவது 'பாதுகாப்பு கூடத்தினை' பாதுகாப்பு அமைச்சில் 2016 நவெம்பர் 18 இல் வெற்றிகரமாக நடாத்தியது. இதில் சிறப்புப் பேச்சாளராக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியலுக்கான நோர்வேஜியன் நிறுவகத்தின் அரசியல் விஞ்ஞான பேராசிரியர் இந்திர டி சொய்சா அவர்கள் உரையாற்றியிருந்தார். அவர் உரையாற்றிய தொனிப்பொருள் "தீவிர முரண்பாடு : இலங்கையின் பாதுகாப்புக் கொள்கைக்கு வழிகாட்டுவதற்கான கோட்பாட்டைப் பயன்படுத்தி" என்பதாகும். இவ்வுரையானது பார்வையாளர்களாக இருந்த அறிஞர்கள், பயிற்சியாளர்கள், தூதுவர்கள் மற்றும் சிரேஸ்ட இராணுவ அதிகாரிகள் ஆகியோரை உணர்ச்சிமிக வைத்ததுடன் அது இலங்கையின் பாதுகாப்பு நிலவரத்திற்கு மிகவும் முக்கியத்துவமானதாகவும் பாதுகாப்பு நிலவரத்துடன் தொடர்புபட்ட தொனிப்பொருளாகவும் காணப்பட்டது.

### 19.2.2 வெளியீடுகள்

#### INSSSL பாதுகாப்பு காலாண்டுச் செய்திமடல்

INSSSL பாதுகாப்புக் காலாண்டுச் செய்திமடல் என்பது நிறுவகத்தில் நடைபெறுகின்ற செய்திகள் மற்றும் நிகழ்வுகளைச் சுமந்து வருவதும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படுவதுமான ஒரு செய்திமடல் ஆகும். இது நிறுவகத்தால் நடத்தப்பட்ட நிகழ்வுகள், பிந்தைய வெளியீடுகள், பணிப்பாளர் நாயகம் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்ட சர்வதேச மாநாடுகள், INSSSL இற்கு வருகை தந்த சர்வதேச அறிஞர்கள் மற்றும் கருத்துத் துணுக்குகள் / கட்டுரைகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இக்காலாண்டுச் செய்திமடல் உள்ளூர் மற்றும் சர்வதேச கல்வியாளர்கள், சிந்தனையாளர் குழாம், ஆய்வு நிறுவகங்கள், அரச நிறுவகங்கள் மற்றும் ஏனைய நாட்டமுடைய நபர்கள் ஆகியோரிடையே பகிரப்படுகின்றது.

"INSSSL பாதுகாப்பு மீளாய்வு 2017" என்பது தேசிய, பிராந்திய, சர்வதேச பாதுகாப்பு மற்றும் பூகோள அரசியல் தொடர்பான புரிந்துணர்வை மேம்படுத்துவதற்கான ஒரு முன்னுரிமையுடன் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஆய்வுகள் மீதான ஒரு ஆய்வுத் தளத்தினை வழங்கும் நோக்குடன் வெளியிடப்பட்டது. கட்டுரை எழுதும் எழுத்தாளர்கள் தேசிய, பிராந்திய, சர்வதேச பாதுகாப்பு முன்மாதிரிகளில் அண்மைய நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் மீதான தங்களுடைய நிபுணத்துவக் கண்ணோட்டங்களை வழங்கி ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்கின்றனர். அவர்கள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பிராந்திய வல்லரசு, ஆப்கானிஸ்தானில் முடிவில்லா மோதல்கள், இலங்கைச் சூழமைவில் மோதல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடையவற்றின் கோட்பாடுகள், வளைகுடாவின் பாதுகாப்பு, புதிய உலக வரிசையில் இந்தியா, தாய்வான் நீரிணையின் பாதுகாப்பு முன்னோக்கும் சம பலமும், பிராந்தியத்தில் திறன்மிக்க விமான சக்திக்கான நோக்குகள், இந்து சமுத்திரத்தில் சீனோ - ஸ்ரீலங்கா உறவுகள், இலங்கை தொடர்பான கிளர்ச்சியும் எதிர்க் கிளர்ச்சி தந்திரோபாயங்களும் போன்றவை தொடர்பாக எழுதுகின்றனர். ஊட்டமளிப்பனவாகவும் தகவலளிப்பனவாகவும் இருக்கின்ற இந்தக் கட்டுரைகள் நன்மையளிக்கக்கூடியது என்பதுடன் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஆய்வுகள் தொடர்பில் நாட்டமுடையவர்களுக்கு வாசிப்பதற்கான நாட்டத்தையும் ஏற்படுத்துகிறது.

### 19.2.3 வலையமைப்பும் ஒத்துழைப்பும்

தெற்காசிய சிந்தனையாளர் குழாத்தின் (COSATT) கூட்டமைப்புடன் ஒன்றிணைந்து INSSSL இனால் ஒழுங்கமைக்கப்பட்ட "பிராந்தியப் பாதுகாப்பு முன்னோக்குகள்" என்ற கலந்தாய்வு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பொறி. கருணாசேன ஹெட்டியாராச்சி அவர்களின் தலைமையில் 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதி அமைச்சு வளாகத்தில் தொடங்கிவைக்கப்பட்டது. பிராந்தியத்திலிருந்து பதினைந்து புகழ்பெற்ற அறிஞர்கள் இதில் கலந்துகொண்டனர்.

### 19.2.4 உத்தியோகபூர்வ விஜயங்கள்

- 1952 இல் தாபிக்கப்பட்ட டோக்கியோவில் உள்ள பாதுகாப்பு ஆய்வுகளுக்கான நிறுவகத்திற்கு (NIDS), INSSSL இன் பணிப்பாளர் நாயகம் அவர்கள் விஜயம் செய்திருந்தார். இலங்கைப் பாதுகாப்பு சிந்தனையாளர் குழாத்தின் உறுப்பினர் ஒருவர் NIDS இற்கு விஜயம் செய்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இதனைத் தொடர்ந்து, NIDS இலிருந்து திருமதி. மரி யோசியோகா இசுயாமா மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிறுவகத்தின் திருமதி. அராய் எட்சுயொ ஆகியோர் 2016 டிசெம்பரில் நிறுவகத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.




- 2016 செப்ரெம்பர் 02 ஆந் திகதி சிங்கப்பூரில் உள்ள சங்கரி-லா ஹோட்டலில் நடைபெற்ற இந்து சமுத்திர மாநாடு 2016 இற்கு INSSSL இன் பணிப்பாளர் நாயகம் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். இலங்கையின் பிரதம மந்திரி கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தொடக்க உரையை ஆற்றியிருந்தார். இங்கு அரசாங்கம், பிராந்தியத்தின் உயர் சிந்தனையாளர் குழாத்தின் உறுப்பினர்கள், புகழ்பெற்ற இராணுவ அதிகாரிகள், முன்னாள் இராஜதந்திரிகள், அறிஞர்கள் எனப் பலரும் பங்குபற்றியிருந்தனர்.
- 2016 நவெம்பரில் பீஜிங் நோர்மல் பல்கலைக்கழகம் மற்றும் நிஸான் உலக பண்பாடுகள் அமையம் ஆகியவற்றால் நடத்தப்பட்ட சர்வதேச சமய கிழக்காசிய பண்பாடுகள் பரிமாற்றக நிகழ்வில் INSSSL இன் ஆராய்ச்சிச் சகபாடி ரம்லா வஹாப் சல்மான் அவர்கள் நிறுவகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தியிருந்தார். ரம்லாவின் முன்வைப்பினுடைய தொனிப்பொருள் "இந்து சமுத்திரத்தின் ஊடாக சீனோ - ஸ்ரீ லங்கா தொடர்புகளுக்கான வரலாற்று அம்சங்கள்" என்பதாகும். இதில் கடலிலுள்ள பருத்தி மற்றும் வாசனைத்திரவியப் பாதை ஊடான சமயம் சார்ந்த, அறிவு சார்ந்த மற்றும் பண்பாடு சார்ந்த பரிமாற்றங்கள் எடுத்துக்காட்டப்பட்டன.




- 2016 நவெம்பர் 7 – 8 வரை சீனாவின் பீஜிங் நகரில் "வெல்ட் அன்ட் ரோட் இனிசியேட்டிவ்" என்ற தொனிப்பொருளில் 1 ஆவது தேசிய விஞ்ஞான ஆராய்ச்சி அமையங்களின் உச்சிமாநாட்டில் INSSSL இன் சார்பில் ஆராய்ச்சிப் பகுப்பாய்வாளரான காயத்திரி டி சொய்சா அவர்கள் கலந்துகொண்டார். இங்கு, அவர் இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி" என்னும் தலைப்பில் INSSSL இன் சகபாடி ஆராய்ச்சியாளரான கனிது வீரசிங்கவுடன் இணைந்து எழுதிய கட்டுரையைச் சமர்ப்பித்திருந்தார்.
- COSATT ஆனது 2016 நவெம்பர் 28 இல் தாய்லாந்திலுள்ள பேங்கொக் இல் தெற்காசிய சிந்தனையாளர் குழாங்களின் தலைமையுடன் கூட்டத்திற்கு திட்டமிட்டிருந்தது. இதில் INSSSL இன் பணிப்பாளர் நாயகம் கலந்துகொண்டார். நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் பற்றிய புகழ்பெற்ற குழு ஒன்றின் அங்கமாக இருப்பதற்கு ஹொரசிஸ் ஆசியா கூட்டத்தொடர் அவருக்கு அழைப்பு விடுத்திருந்தது.
- INSSSL இன் பணிப்பாளர் நாயகம் "மோடி கோட்பாடு : இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் புதிய முன்னுதாரணங்கள்" என்ற தலைப்பிலான ஒரு புதிய புத்தகத்திற்கான அத்தியாயம் ஒன்றுக்கு பங்களிப்பை வழங்கியிருந்தார். அவர் 2016 ஆகஸ்ட் 13 இல் நடைபெற்ற அதன் தொடக்க நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்.

## 19.3 முன்னேற்றங்கள், பிரச்சினைகள் மற்றும் சவால்கள் பற்றிய பொதுவான மதிப்பீடு

நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து குறுகிய காலப் பகுதியினுள் (ஐந்து மாதங்கள்) முன்னெடுக்கப்பட்ட வேலைகள் திருப்திகரமாக இருந்தன. இந்நிறுவகத்தின் கட்டமைப்பு, செயற்பாடுகள் மற்றும் வெளியீடு என்பவற்றில் மகத்தான முன்னேற்றங்கள் செய்யப்பட்டிருந்தன.

2016 ஆகஸ்ட்டில் தாபிக்கப்பட்டதிலிருந்து, INSSSL ஆனது வரையறுக்கப்பட்ட வளங்கள், தற்காலிக ஊழியர்கள், மற்றும் தன்னார்வ அடிப்படையில் வேலை செய்யும் உள்ளிருப்பாளர்களுடன் தனது நோக்கங்களை அடைந்துகொள்வதற்காகப் பணியாற்றியிருந்தது. எவ்வாறாயினும், தொடக்கநிலை தடங்கல்களுக்கு மத்தியிலும், INSSSL இனால் 2016 ஆம் ஆண்டிற்கான அதனது சகல நோக்கங்களையும் அடைந்துகொள்ள முடிந்திருந்தது. இதில் பல்வேறு வட்டமேசைக் கலந்தாய்வுகளை நடாத்தியிருந்தமை, பாதுகாப்பு நிபுணர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பங்களிப்புடன் தேசிய மற்றும் பிராந்திய பாதுகாப்பு பற்றிய வருடாந்தச் சஞ்சிகை ஒன்றை வெளியிட்டமை மற்றும் காலாண்டுச் செய்திமடல் வெளியிட்டமை, பாதுகாப்புப் பிரச்சினைகள் பற்றிய சிறந்த அறிஞர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் வளவாளர் குழு ஒன்றை உருவாக்கியமை மற்றும் 2017 சனவரியில் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஒன்றை ஆரம்பித்தமை போன்றவை உள்ளடங்கியிருந்தன.

நிறுவகம் வரையறுக்கப்பட்ட நிதியினைக் கொண்டு தனது பணிகளை தடங்கலின்றி முன்னெடுப்பதற்கான பொருட்கள் மற்றும் சேவைகளை பெறும் செயற்பாட்டினை மேற்கொண்டிருந்தது.

பாதுகாப்பு அமைச்சில் முன்பிருந்ததை அடிப்படையாகக் கொண்டு, 2017 சனவரி 02 ஆந் திகதி பத்தரமுல்லையில் அமைந்துள்ள 'சுகுறுபாய'' இல் 8 ஆந் தளத்தினை தனது புதிய அலுவலகமாகப் பெற்றுக்கொண்ட INSSSL, ஒப்பந்த அடிப்படையில் ஆராய்ச்சி அலுவலர்களையும் ஆட்சேர்த்துக்கொண்டது.

## 19.4 எதிர்பார்க்கப்படும் முன்மொழிவுகள்

| | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|
| பாதுகாப்புக் கூடம் | மாதாந்தம் (12) | மாதாந்தம் (12) | மாதாந்தம் (12) | மாதாந்தம் (12) |
| அச்சுறுத்தல் வில்லைகள் | மாதாந்தம் (12) | மாதாந்தம் (12) | மாதாந்தம் (12) | மாதாந்தம் (12) |
| பொது விரிவுரை | காலாண்டுக்கு 1, (4) | காலாண்டுக்கு 2 (8) | காலாண்டுக்கு 2 (8) | காலாண்டுக்கு 2 (8) |
| கூட்டு நிகழ்வுகள்/ மாநாடுகள் | 1 | 2 | 3 | 3 |
| பிராந்திய செயலமர்வுகள் | 1 | 2 | 2 | 3 |
| பாதுகாப்புக் காலாண்டுச் செய்திமடல் | காலாண்டுக்கு 1 (4) | காலாண்டுக்கு 1 (4) | காலாண்டுக்கு 1 (4) | காலாண்டுக்கு 1 (4) |
| பாதுகாப்பு மீளாய்வு | 1 | 1 | 1 | 1 |

19.1 அட்டவணை: தந்திரோபாயத் திட்டம் 2017 – 2020

# 20. தேசிய மாணவசிப்பாய்களுக்கான படையணி

## 20.1 மேலோட்டமான பார்வை

தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணி பாடசாலை ஆண் மற்றும் பெண் மாணவச் சிப்பாய்களுக்கு பயிற்சி அளிப்பதையே பிரதான நோக்காக கொண்டு இயங்குகின்ற நிறுவனமாகும். தீவின் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கி 1873 மாணவச் சிப்பாய் குழுக்கள் (46825x மாணவச்சிப்பாய்கள்) இருக்கின்றன. தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியின் அதிகாரிகள் அனைவரும் பாடசாலை ஆசிரியர்கள் ஆவர். குறித்த இவ் அதிகாரிகளின் பயிற்சிகளை மேம்படுத்தும் வகையில் தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியின் இணைப்புச் சேவைக்கு ஈடுபடுத்தி மாணவச் சிப்பாய்களுக்கு பயிற்சி வழங்குவதற்கும் மற்றும் பல்வேறு வகையான நிர்வாக பணிகளுக்காகவும் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர்.

**தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியின் கட்டமைப்பு பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.**

### அ. தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியின் தலைமையகம்

தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியின் தலைமையகம் பாமன்கடையில் அமைந்துள்ளதோடு குறித்த இத்தலைமையகத்தில் 35 அதிகாரிகள் 21 சிப்பாய்கள் மற்றும் 34 சிவில் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

### ஆ. ரன்டெம்பே பயிற்சி முகாம்

